தனிப்பிரதி விலை அணா 0—1—6
Reg. No. M. 3066. 1935-செப்டம்பர்-1.
PAHUTHARIVU ("REASON")

பகுத்தறிவு

அறிவை வளர்க்கும் ஓர் சிறந்த மாத வெளியீடு.

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

பகுத்தறிவு.

பல அறிஞர்களின் அறிவியல் ஆராய்ச்சிகளை, விஞ்ஞான விளக்கம், பெண்கள் முன்னேற்றம், உடற்பயிற்சி சுகாதாரம், வைத்தியம், பாட்டுகள், நாடகங்கள், ஹாஸ்யங்கள், உலக விநோதங்கள், சிறு கதைகளும் நிறைந்து விளங்குவது.

வருட சந்தா.

உள்நாடு ரூ. 1—0—0. வெளிநாடு ரூ 1—8—0.
தனிப்பிரதி 0—1—6. தனிப்பிரதி 0—2—6

சந்தாதாரர்களுக்கு

பகுத்தறிவுக்கு மே மாதமே வருட ஆரம்பமானதால் சந்தாதாரர்கள் எந்த மாதத்தில் சேர்ந்தாலும் மே மாதம் முதலாகவே பத்திரிகைகள் அனுப்பப்படும்.

புதிதாகச் சந்தா சேருபவர்கள் சந்தாத் தொகையை முன்னதாகச் செலுத்திவிட வேண்டும்.

சந்தாதாரர் பத்திரிகை சம்பந்தமாய்க் கடிதம் எழுதும்போது சந்தா நம்பரைக் குறிப்பிட வேண்டும்.

விஷய அட்டவணை. பக்கம்

சங்கீதம் பாட்டு (சாமி. சிதம்பரனார்) 1
தமிழ் நாட்டவரும் மேல் நாட்டவரும் 5
போக்கிரித்தனமான புகார் 26
மதமின்றி மக்கள் வாழ முடியாதா? (ஈ. வெ. ரா.) 35
விசாலாக்ஷி, சிறு கதை (ஜே. பி. கிருஷ்ணன்) 43
கடவுள் சக்தி (ஈ. வெ. ரா.) 50
திருவள்ளுவர் நாஸ்திகர் 53
கீழ் மேல் 54
வைத்திய வனாசகி 55
யார் குற்றவாளி? (சாமி. சிதம்பரனார்) 57
புரோகிதம் ஒழிக பாட்டு (R. V. பொன்னம்பலம்) 62
கிருஷ்ணன்-அர்ஜுனன் சம்வாதம் (சித்திர புத்திரன்) 63

பகுத்தறிவு.

அறிவை வளர்க்கும் ஓர் மாத வெளியீடு,

)o(

அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என் உடையரேனும் இலர். (குறள்)

மலர் 1. } ஈரோடு 1935 செப்டம்பர் 1. { இதழ் 5.

சங்கநாதம்.

(சாமி சிதம்பரனார்.)

1. இத்தரைமீதினில் இன்பம் சுகித்திட
எண்ணாமல் தத்துவம் பேசி இருந்திடும்
பித்தர்கள் யாவரும் துக்கக் கடல்படி
பேதையர் ஆமென ஊது சங்கே

2. செத்தபின் சேருவோம் சொர்க்கமென் றெண்ணியே
சிந்தையும் தேகமும் செல்வமும் பாழ்உற
இத்தலத் தில்லாத ஒன்றைப் பணிகுவோம்
என்பவர் மூடர்என் றூது சங்கே!

3. சிந்தை மொழிவிழி சொற்களுக் கெட்டாமல்
சேருங் குணங்குறி யற்ற தொருபொருள்
இந்த உலகமும் யாவும் நடத்திடும்
என்றுரைப் பார்பதர் ஊது சங்கே!

4. உண்மை இவையெனப் பொய்மை இவையென
ஓர்ந்து மதியினால் உண்மை வழிபற்றித்
திண்மை மனங்கொண்டு வாழுந் திறமிலார்
தேம்பித் திரிவர்என் றூது சங்கே!

5. வெற்றியும் தோல்வியும் சேர்தல் இயல்பென
வீரியத் தோடெந்தக் காரியம் ஆயினும்
சற்றும் மனஞ்சலி யாமலே செய்பவர்
சாருவர் இன்பம் என்றூது சங்கே!

6. சாத்திரக் குப்பைகள் யாவும் சுயநலம்
சார்ந்தவர் கூறிய சொற்கள்என் றெண்ணார்
க்ஷேத்திரம் பார்த்தும் நெருப்பில் விழுந்திடும்
நேர்மையர் ஆவர்என் றூது சங்கே!

7. தாம்பெறும் நன்மைகள் தீமைகள் யாவையும்
தன்செயல் தன்திறம் என்றுண ராதவர்
சோம்பர்கள் ஆகியே துன்பத் துறைந்திடும்
சுத்த மடையர்என் றூது சங்கே!

8. தீமையை வீழ்த்தி நலம்மனத் தெண்ணியே
தேசத்து மக்களைச் சோதரர் ஆம்படி
சேமம் அவர்கொன் றும் செய்திட முன்வரார்
செத்தவர் போல்வர்என் றூது சங்கே!

ஆழ்வார்கள், அவதார புருஷர்கள், நாயன்மார்கள், நபிகள், தேவகுமாரர்கள் என்பவர்கள் கடவுளால் அனுப்பப்பட்டவர்கள் என்றால்: அயோக்கியர்கள், பொய்யர்கள், திருடர்கள், கொலைகாரர்கள், நம்பிக்கைதுரோகம் செய்கிறவர்கள், வன்நெஞ்சகர்கள், சோம்பேறிகள், ஊரார் உழைப்பில் வயிறு வளர்ப்பவர்கள், மூடர்கள் என்பவர்கள் யாரால் அனுப்பப்பட்டவர்கள்?

ஈ. வெ. ரா.

"தமிழ் நாட்டவரும் மேல் நாட்டவரும்."

சாமி வேதாசலமென்னும் மறைமலை அடிகளின் கட்டுரை.

[தமிழறிஞர் சுவாமி வேதாசலம் அவர்கள் எழுதிய "அறிவுரைக் கொத்து" என்னும் தமிழ் நூலைப்பற்றித் தற்போது பத்திரிகைகளில் பெரும் வாதப்பிரதிவாதம் நடந்து வருகின்றது. அந்நூலில், "தமிழ் நாட்டவரும் மேல் நாட்டவரும்" என்ற கட்டுரையைப்பற்றியே சில பார்ப்பனர்கள் அவதூறாக எழுதிக்கொண்டு வருகின்றனர். அவர்களுடைய பொய்ப்பிரசாரத்தினால் தமிழ் மக்கள் ஏமாறாமலிருக்க வேண்டி, அக்கட்டுரையை "பகுத்தறிவில்" பிரசுரிக்கிறோம். அதில்பொதுநோக்கோடு எல்லாமக்களின் குறைகளையும்குற்றங்களையும் விளக்கப்பட்டிருக்கிறதை உணரவேண்டுகிறோம். ப-ர்.]

"தமிழ்நாட்டவரும் மேல்நாட்டவரும்"

நம் தமிழ் நாட்டவர் பொருளையுந், தமிழ் நாட்டையடுத்துள்ள மற்றை இந்திய நாட்டவர் பொருளையும் மேல் நாட்டவர் பல வழியிற் கவர்ந்து செல்கின்றார் என்னுங் கூக்குரல் ஒலியும், அதனைத் தடை செய்து இந்நாட்டவரின் பொருள் இங்கேயே நிலைபெறுமாறு செய்தல் வேண்டின் அயல் நாட்டவர் இங்கே விலைப்படுத்தக் கொண்டுவரும் பண்டங்களை வாங்காது முற்ற ஒழித்தலே செயற்பாலதென்னும் ஆரவாரமும் நாடு எங்கும் பரவிப், பலவகை குழப்பங்களையும் பலவகை துன்பங்களையும் உயிரழிவு பொருளழிவுகளையும் ஆங்காங்கு விளைத்து வருகின்றன.

பேர் அல்லலுக்கு இடமான இப்பிழை பாடான வழியிற் புகுந்து நம்மனோர் துன்புறாமல், அவர்களைப் பாதுகாத்தல் வேண்டியே, எமது அறிவுரையை இங்கெழுதுகின்றோம். இதனை நன்றாக ஆராய்ந்து பார்த்து, எமதுரை பொருந்துமாயின் அதனைக் கைப்பற்றியொழுகி நம்மவர் நலப்படுவாராக.

முதலில் நம் நாட்டவர்பால் உள்ள ஒரு பெருங்குறை என்னென்றால், எதனையும் ஆய்ந்து, ஓய்ந்து பார்க்குங் குணம் இல்லாமையேயாம். ஒருவர் கல்வியறிவு ஆராய்ச்சியுடைய

பெரியராயிருந்தாலும் அவரைப் பத்துப்பேர் கொண்டாடா விட்டால் அவரை நம்மனோர் தாமுங் கொண்டாடமாட்டார்; அதுவேயுமன்றி, அவரைப் பத்துப்பேர் பொறாமையினாலோ, அல்லது வேறு காரணத்தாலோ இழித்துப் பேசக்கேட்டால்; அது தகுமா? தகாதா என்று ஆய்ந்து பாராமல் தாமும் அவரை உடனே இழித்துப் பேசி விடுவர்; அவர்க்குத் தீங்கும் இழைப்பர். இனி, மற்றொருவர் கல்வியறிவு ஆராய்ச்சிகள் சிறிதும் இல்லாராயினும் அல்லது அவை சிறிதே யுடையராயினும், பத்துப்பேர் அவர்பால் வைத்த பற்றினாலோ, அல்லது அவர்பால் தாம் பெறும் ஏதேனும் ஒரு பயன் குறித்தோ அவரைக் கொண்டாடுவராயின், அவர் எதற்காக அவரைக் கொண்டாடுகின்றார், நாமும் அவரை ஏன் கொண்டாட வேண்டுமென்று சிறிதேனும் ஆராய்ந்து பாராமல் உடனே அவரைக் கண்கால் தெரியாமற் கொண்டாடிவிடுவர்; அக்கொண்டாட்டத்தால் வருந் துன்பங்களையுந்தாம் அடைவர். பெரும்பாலும், நம் நாட்டவர் உண்மையறிவு ஆராய்ச்சிகள் உடைய பெரியாரைக் கொண்டாடுவதும் இல்லை; அவரால் தாம் அடைதற்குரிய பெரும்பயன் அடைவதுமில்லை. வெளிமினுக்கும், வெற்றாரவாரமும் உடையாரைப் பின்பற்றித் தமது நலனையுந் தம் நாட்டவர் நலனையும் இழந்து விடுவதே அவர்க்கு இயற்கையாய்ப் படிந்து விட்டது.

இனி, மேல்நாட்டவர்பால் உள்ள ஒரு பெருங்குணம் என்னென்றால், எவர் எதைச் சொன்னாலும், எவர் எதை எழுதினாலும் அவ்வப்பொருளின் இயல்புகளைத் தம்மாலானமட்டுஞ் சோம்பாமலாராய்ந்து பார்த்து, எது தழுவத் தக்கதோ அதைத் தழுவுவர், தழுவத்தகாததை விலக்குவர். வெறும் வெளி மினுக்கையும், வெற்றாரவாரத்தையுங்கண்டு அவர் ஏமாந்து விடுவதில்லை. அறிவிலும், ஆராய்ச்சியிலுமே அவர்கள் தமது காலத்தைப் பயன்படுத்தி வருவதால், அவர்கள்பால் வீணான பேச்சுகளும் நிகழ்வதில்லை. பிறர்பாற் குற்றங்கள் இருந்தாலும் அவற்றை அவர்கள் ஆராய்வதில்லை; பிறர்பாலுள்ள குணங்களை மட்டும் ஆராய்ந்து, அவற்றுக்காக அவரைப் பாராட்டுவதுடன், அவரால் தாமும் உலகமும் பயன்படுதற்கான ஒழுங்குகளெல்லாஞ் செய்வர் அதனால், மேல் நாட்டவரில் நற்குணமும், நல்லறிவும், நன்முயற்சியும் உடையவர்கள் சீருஞ்சிறப்பும் எய்தித் தாமுந் தம்மைச் சேர்ந்தவரும் வறுமையும், கவலையும் இன்றி உயிர் வாழப் பெற்று, நாடோறும் ஆயிரக்கணக்கான புதுமைகளையும், ஆயிரக்கணக்கான பொறிகளையும் (இயந்திரங்களை

யும்) ஆயிரக்கணக்கான தொழிற்சாலைகளையும் ஆயிரக்கணக்கான கல்விச்சாலைகளையும் ஆயிரக்கணக்கான சொற்பொழிவு மண்டபங்களையும் ஆயிரக்கணக்கான கலையறிவுக்கழகங்களையும், இன்னும் இவை போல் நம் சொல்லளவில் அடங்காத பலப்பல நலங்களையுந் தாமிருக்கும் நாடுகளிற் பரவச்செய்து வருவதோடு, தாஞ்செல்லும் பிறநாடுகளிலும் அந்நலங்களை யெல்லாம் பரப்பி வருகின்றனர்.

இனி, நம் நாட்டவர்களுக்கோ அறிவாராய்ச்சியில்லாமையோடு ஒற்றுமைக் குணமும்இல்லை; பிறர்பால் அருள் இரக்கமும் இல்லை. தமக்குத் தம் மனைவி மக்களும், நெருங்கிய உறவினருமே உரியனரெனவும், மற்றையோரெல்லாந் தமக்கு வேறானவரெனவும், தாமுந்தம்மினத்தவரும் நன்றாயிருத்தலே தமக்கு வேண்டுந் தம்மவரல்லாதபிறர் எக்கேடு கெட்டாலென்ன, எத்தெருவே போனாலென்ன எனவும் நினைந்து, பிறர் நலத்தைச் சிறிதுங் கருதாதவர்களாய் இருக்கின்றனர்.

தன்னலங் கருதும் இப்பொல்லாத எண்ணத்தால் இத்தமிழ் நாட்டவர்க்குட் பிரிந்திருக்கும் அளவிறந்த சாதிகளும், அவற்றால் விளைந்திருக்கும் அளவிறந்த வேற்றுமைகளுங் கணக்கிட்டுச் சொல்லல் இயலாது. நாலு பேர் ஒன்று சேர்வார்களானாற் சாதிப்பேச்சும்; பெண் கொடுக்கல், வாங்கலைப்பற்றிய பேச்சும்; அவன் சாதி கெட்டவன், அவனுக்கும், நமக்கும் உறவு கிடையாது, எங்கள் சாதி உயர்ந்தது, எங்கள் சாதியில் ஒடித்தாற் பால் வடியும், எங்களிற் பத்து வீட்டுக்காரரோடுதான் நாங்கள் கலப்பது வழக்கம், மற்றவர்கள் கையில் தண்ணீர் கூட வாங்கமாட்டோம் என்னும் பேச்சும்; அதை விட்டாற் பொருள் தேடும் வகைகளைப்பற்றிய பேச்சும்; அதுவும் விட்டால் தமக்குப் பொருள் சேருங் காலத்தைப் பற்றியும், நோய் தீரும் நேரத்தைப்பற்றியும், மணம் ஆகும் நாளைப்பற்றியும் எந்த இடத்திற் போனாற் குறி கேட்கலாம், எந்தத் தெய்வத்துக்கு ஆடு கோழி அறுத்தால் இவை கைகூடும்? மாரியைக் கும்பிடலாமா? மதுரைவீரனைக் கும்பிடலாமா? காளியைக்கும்பிடலாமா? கருப்பண்ணனைக் கும்பிடலாமா? எசக்கியை கும்பிடலாமா? சுடலைமாடனைக் கும்பிடலாமா? என்னுஞ் சிறுதெய்வச் சிற்றுயிர்க் கொலைக்கொடும் பேச்சும்; தனக்குப் பகையானவனைப் பல வகையால் இழித்துத் தன்னைப் பலவகையால் உயர்த்திச் செருக்கிப் பேசும் பேச்சுமே எங்கும் எல்லாரும் பேசக் காண்கின்றோம். புகை

வண்டிகளிலும் இந்தப் பேச்சே, பொதுக்கூட்டங்களிலும் இந்தப் பேச்சே, கோயில்களிலும், இந்தப் பேச்சே, குளக்கரைகளிலும் இந்தப்பேச்சே

இதைத் தவிர, நாம் எதற்காகப் பிறந்திருக்கின்றோம்? நாம் இப்பிறவியிற் செய்ய வேண்டுவன யாவை? நமக்கும் மற்ற விலங்குகளுக்கும் (மிருகங்களுக்கும்) உள்ள வேற்றுமை என்ன? நம்மையும் மற்ற எண்ணிறந்த உயிர்களையுந் தோற்றுவித்தது யாது? இந்த உலகங்கள் எதற்காகப் படைக்கப்பட்டிருக்கின்றன? இவைகளையெல்லாம் படைத்த பேரறிவுப் பொருளின் நோக்கம் யாதாய் இருக்கலாம்? நாம் இறந்த பின்எந்த நிலையை யடைவோம்? பொருள் தேடுவதும், உண்பதும், உறங்குவதும், மருவுவதுந் தவிர, வேறு நாம் செய்யத்தக்கதுந் தகாததும் இல்லையா? என்று இவ்வாறெல்லாம் எண்ணிப் பார்க்கத்தக்கவர்களை நம்மில் நூறாயிரவரில் ஒருவரைக்கூடக் காண்பது அத்தி பூத்தாற்போல் இருக்கின்றதே!

ஆனால், மேல் நாட்டவர்களிலோ இவைகளையெல்லாம் ஆராய்ந்து பார்ப்பவரும், ஆராய்ந்து எழுதுவாரும், ஆராயுங் கழகங்களும், அவர்களாலும் எழுதி வெளியிடப்பட்ட, வெளியிடப்படுகின்ற நூல்களும், நாள் வெளியீடுகள், அவை தம்மைக்கற்பாருங் கற்பிப்பாரும், இவ்வகைகட்கெல்லாங் கோடி கோடியாகத் தமது பொருளை வழங்குவாரும் எண்ணிக்கையிலும் அடங்குதல் இல்லை. மேல் நாட்டவர்கள் பசியெடுத்த வேளையில் எந்த இடத்தில்எந்த உணவு கிடைக்கின்றதோ அதனைப் பெற்று மகிழ்ச்சியோடு உண்பர்; தமது வாழ்க்கைத் துணைக்கு எந்த நாட்டில் எவர் இசைந்தவராய்த் தெளியப்படுகின்றனரோ, அவரை மணந்து கொள்வர். உடம்பைப் பற்றிய இவ்விரண்டு குறைகளையும் இங்ஙனம் எளிதிலே நிரப்பிக்கொண்டு, அதற்குமேல் அவற்றில் தம் கருத்தைச் செலுத்தாமல், தம் அறிவு ஆராய்ச்சிகளை மென்மேற் பெருக்குவதிலும், நாடோறும் புதிய புதிய ஆற்றல்களையும், புதிய புதிய பொறிகளையும், புதிய புதிய உண்மைகளையுங் கண்டு பிடிப்பதிலும், அவற்றைப் பயன்படுத்துவதிலுமே தமது கருத்தை ஓயாமற் செலுத்தி வருகின்றனர்.

மற்றும், நம் நாட்டவரோ மேலே காட்டியபடி, நிலையில்லாமல் அழிந்துபோகுந்தமது உடம்பைப் பற்றியும், அவ்வுடம்பால் வந்த தொடர்புகளைப்பற்றியுமே எந்நேரமும் பேசியும், நினைத்தும் வருவதல்லாமல், என்றும் நிலையாக இருக்கத்தக்க தமது அறிவு விளக்கத்தைப்பற்றி யாதல், தம் அன்பை

யும், அருளையும் வளர்க்குங் கடமைகளைப்பற்றியாதல் பேசியும், எண்ணியும் வரக்காண்கின்றோம் இல்லையே!

இன்னும், நமது வாழ்க்கைக்கு இன்றியமையாது வேண்டப்படுவன கல்விப்பொருளுஞ் செல்வப்பொருளும் என்னும் இரண்டுமேயாகும். கல்விப்பொருளைப் பெற்றவர்கள், தமக்கும் பிறர்க்கும் நன்மையைத்தருந்துறைகளை ஆய்ந்து பார்த்துக், காலத்தின் நிலைக்கும் ஒத்த முயற்சிகளைச் சோம்பாது செய்வார்களாயின், அவர்கட்குச் செல்வப்பொருள் தானே வரும். வெறுஞ் செல்வம் மட்டுந் தனது பழவினைப் பயத்தால் வாய்க்கப் பெற்றவர்கள் அங்ஙனங் கல்விப் பொருளை எளிதிலே பெற்றுக்கொள்ளுதல் இயலாது. மேலுங், கல்விப்பொருள் என்றும் அழியாது; செல்வமோ சிலகாலத்தில் அழிந்துபோம்; கல்விப்பொருள் ஒருவனது அறிவைப் பற்றிக்கொண்டு எழுமை எழு பிறப்பும் அவனுக்குற்ற துணையாய்ச் செல்லும்; செல்வமோ அதனை யுடையானுக்கு இந்தப்பிறவியிலேயே துணையாகாமற், பிறராற் கவரப்பட்டு, ஒரோவொருகால் அவனுயிரையுந் தொலைத்தற்கு ஏதுவாயிருக்கும்; கல்விப் பொருள் இந்த உலகத்திலும், இங்குள்ள உயிர்களிலும் உள்ள வியப்பான உண்மைகளை விளங்கச்செய்வதுடன், இவற்றிற்கு உள்ளுமாய்ப் புறம்புமாய் நிற்கும் இறைவன் தன் அருளுண்மைகளையும் விளங்கச்செய்து நமக்குப் பேரின்பத்தைத் தராநிற்கும்; செல்வப் பொருளோ தன்னை யுடையானைப் பெரும்பாலுந் தீயதுறைகளிற் புகுத்திச், சிலகாலத்தில் அவன் சிற்றின்பத்தினையும் நுகரவொட்டாமல் அவனை நோய்வாய்ப் படுத்தி, அவனை விட்டு நீங்கி அவனைவிரைவில் மாய்க்கும். ஆகையாற், கல்விப்பொருள் சிறந்ததோ, செல்வப்பொருள் சிறந்ததோ என்பதைச் சிறிது எண்ணிப்பாருங்கள்! கல்விப் பொருள் ஒன்றுமே, நமக்கும் நம்மைச் சேர்ந்தார்க்கும் நலம் பயப்பதன்றிச், செல்வப்பொருள் அங்ஙனம் நலம் பயப்பதன்றென்பது சிறிதுணர்வுடையார்க்கும் விளங்குமன்றோ? ஆகவே, கல்விப்பொருளின் பொருட்டுச் செல்வப்பொருளைப் பயன்படுத்தவேண்டுமேயல்லாமற், செல்வப்பொருளைப் பெறும் பொருட்டே கல்விப் பொருளைப் பயன்படுத்துதல் ஆகாது.

ஆனால், நம் நாட்டவர் நிலை எத்தன்மையதாயிருக்கின்றதென்பதை எண்ணிப்பாருங்கள்! நம்மவரிற் பெரும்பாலோர்க்குக் கல்வி கற்பதிற் சிறிதும் விருப்பமேயில்லை. கற்கவேண்டிய கட்டாயத்தில் உள்ளவர்களுந்தமிழ் எழுதப்படிக்கத் தெ

ரிந்தாற்போதுமென்றும், அதுவும் வேண்டாங், கையெழுத்துப்போடத் தெரிந்தாற் போதுமென்றும் எண்ணி அங்ஙனமே நடப்பவர்களாய் இருக்கிறார்கள். இன்னும் பலர் "தமிழ்ப் படித்து என்ன வாரிக்கொள்ளப்போகிறான்? படியாதவர்களில் எத்தனையோபேர் பொருள் தேடிச் செல்வர்களா இல்லையா" என்று வாய் கூசாது பேசிப் போகின்றனர். இன்னும் பலர், "ஆங்கிலம் படித்தாலும் பெரிய வேலை கிடைக்கும். பெரிய அதிகாரங் கிடைக்கும், ஆங்கிலம் படித்துப் பட்டம் வாங்கின மாப்பிள்ளைக்கு ஐயாயிரம் பத்தாயிரத்துடன் பெண் கிடைக்கும்" என்று எண்ணுவதுஞ் சொல்லுவதுஞ் செய்து, இவைகளுக்காகவே தம் மக்களை ஆங்கிலம் பயிலச்செய்கின்றார்கள்.

துவக்கத்திலிருந்தே இந்த எண்ணத்தோடு ஆங்கிலங் கற்கின்ற பிள்ளைகள், அதனில் தேர்ச்சி பெற்றுப் பட்டங்கள் வாங்கினவர்களாய் வெளிவந்தவுடன், பொருள் வருவாய்க்கு இசைந்த வேலைகளைப் பெறுவதிற் கண்ணுங்கருத்துமுடையராகின்றார்களேயல்லாமல், மேலுங் கல்வியறிவைப் பெருக்க வேண்டுமென்னும் எண்ணம் உடையராக காணப்படவில்லை. அரசியற்றுறைகளிலோ, நீராவி நிலையங்களிலோ, ஆங்கில வணிகர்தந் தொழிற்சாலைகளிலோ, இன்னும் இவை போன்ற பிறவற்றிலோ பெரிய பெரிய அலுவல்களில் அமர்ந்து பிறர்க்கு ஊழியஞ்செய்து பொருள் ஈட்டுவதிலேயே பெரு முயற்சியுடையவர்களாய் இருக்கின்றார்கள்.

இவ்வலுவல்களைப் பெறும் பொருட்டு, அவற்றிற்குத் தலைவர்களாயிருப்பவர்கள் கேட்கும் அளவெல்லாந் தாழ்ந்து கைக்கூலி கொடுக்கின்றார்கள்; அதுமட்டோ, அத்தலைவர்கள் விரும்புகிறபடியெல்லாம் மானக்கேடான செயல்களைச் செய்வதற்கும் முன் நிற்கின்றார்கள்! பொருள் வருவாயையுந் தலைமையையுமே பெரியதாக நினைத்து, இவ்வாறெல்லாம் பெரும் பாடுபட்டுத், தாம் விரும்பிய வேலைகளை அடைந்த பிறகாவது, இவர்கள் எண்ணங் கல்விப் பயிற்சியிலுங் கடவுள் வழிபாட்டிலும் பிறர்க்குதவி செய்வதிலும் நாட்டிற்கு நலந்தேடுவதிலுந் திரும்புகின்றதோவென்றால், இல்லை இல்லை. தாமிருக்கும் வேலையினளவுக்கு வருஞ் சம்பளத்தில் மனநிறைவு பெறாமல், தாம் தமக்கு மேலுள்ளவர்கட்குக் கைக்கூலி கொடுத்தது போலவே தாமுந் தமக்குக் கீழுள்ளவர்பாலுந், தமது தலைமைக்குக் கீழ் அடங்கி நடக்கும் ஏழை யெளியவர்கள் பாலுமிருந்து ஓயாமற் கைக்கூலி வாங்கினவண்ணமாயிருக்கிறார்கள்.

அங்ஙனம் ஏழை எளியவர்கள் அழ அழ அவர்கள் வயிற்றில் அடித்துச்சேர்க்கும பொருளையாவது அவர்கள் நல்வழியிற் செலவு செய்கின்றார்களோவென்றால் அதுவுமில்லை. இரப்பவர்க்கு ஒரு கை முகந்த அரிசி தானுங்கொடுக்க இசையார்; கற்பவர்க்குங் கற்றவர்க்கும் ஒரு காசுதானுங் கொடார். மற்றுத், தம் மனைவி மக்கட்குப் பொற்சரிகை பின்னிய பட்டாடைகள் வாங்கிக்கொடுப்பதிலும, வைரம் இழைத்த உயர்ந்த அணி கலங்கள் செய்வித்து அணிவதிலும் அவர்கள் புழங்குதற்குப் பொண் வெள்ளிகளிற் சமைந்த ஏனங்கள் வாங்கிச் சேர்ப்பதிலும், அவர்களுந் தாமும் ஏறி ஊர் சுற்றுவதற்குக் குதிரை வண்டிகள்; இவற்றினும் விலையுயர்ந்த உந்து வண்டிகள் அமைத்துக் கொள்வதிலும், நாடக சாலைகள்; குதிரைப் பந்தயங்கள்; வட்டக் காட்சிகள் சென்று காண்பதிலும் இன்னும் இவைபோன்ற வெற்றாரவாரங்களிலுமாகத் தாம் ஏழைகுடி மக்களிடமிருந்து பகற்கொள்ளையடித்த பெருந்தொகையான பொருளைச் செலவு செய்துவிடுகின்றார்கள். இன்னும் பலர் சாராயங் குடித்தும், ஊன் தின்றும், வேசியரை மருவியும் அப்பொருளைப் பாழாக்குகின்றார்கள். மற்றும் பலர், அப்பொருளை கடன் கொடுத்து வட்டிமேல் வட்டி வாங்கியும், அம்முகத்தால் ஏழை எளியவர்களின் நிலங்கள், வீடுகள், பண்டங்களைக் கவர்ந்துக் தமது பொருளை ஆயிரம் நூராயிரங்கோடி என்னும் பேரளவாகப் பெருக்குவதிலேயே முனைந்து நிற்கின்றார்கள்.

இவ்வாறாக, ஆங்கிலங் கற்கும் இந்நாட்டவர் எந்த இனத்தைச் சேர்ந்தவராயிருந்தாலும், அவர் எல்லாம் மேலும் மேலும் பொருள் சேர்ப்பதற்கே தாம் கற்ற கல்வியைக் கருவியாக்கி, ஏழைக்குடி மக்களைப் பாழாக்குகின்றார்கள். இந்நிலையிற் பார்ப்பனரும் பார்ப்பானரல்லாதாரும் ஒத்தவர்களாகவேயிருக்கின்றார்கள்.

தந்நலந் தேடுவதிலேயே நாட்டம் வைத்திருக்கும் இவர்கள், அவைக்களங்களில் மேடை மேலேறிப் பேசும்போது மட்டும் ஏழை மக்களுக்காகக் கண்ணீர்விட்டுக் கதறுகின்றார்கள்! இஃது எதனை ஒத்திருக்கின்றதென்றால், "ஆடு நனைகிறதே யென்று கோநாய் குந்தியழுததையே" ஒத்திருக்கின்றது. மேடைமேல் இவ்வளவு இரக்கங்காட்டிப்பேசிய அவர்கள் வீட்டுக்கு, ஏழை இரவலர்கள் சென்றால் அவர்களை ஏசித்துரத்துகின்றார்கள்.

இந்த வகையிற் பார்ப்பனரைவிடப் பார்ப்பனரல்லாதாரே மிகக்கொடியராயிருக்கிறார்கள். யாங்ஙனமென்றால், உயர்ந்த நிலைகளிலுள்ள பார்ப்பனர்கள் தம் இனத்தவரல்லாதாருக்கு ஏதோருதவியுஞ் செய்யாவிடினுந், தம்மினத்தவர்களின் ஏழைகளாயிருப்பவர்க்கு எல்லாவகையான உதவியுஞ் செய்யக்காண்கின்றோம். மற்றும், பார்ப்பனரல்லாதாரில் உயர் நிலைகளிலிருப்பவர்களோ ஏழைக்குடிகட்கு ஏதொரு நன்மையுஞ் செய்யக் காண்கிலேம்; நன்மை செய்யாதொழியினும் தீமையேனுஞ் செய்யாதிருக்கிறார்களோவென்றால் அப்படியுமில்லை. எளியவர்களைத் துன்புறுத்தியும், அவர்கள் பொருளைத் "தோலிருக்கச் சுளை விழுங்குவது" போல் விழுங்கியும் வந்நாற்றானே, தாம் வல்லாண்மை வாழ்க்கை செலுத்தலாம்.

செல்வர்களால் துன்புறுத்தப்பட்டு நடுநிலைமன்றங்களில் முறையிடச்செல்லும் எத்தனை எளிய மக்கள், தாம் நடுவர்க்குக் கைக்கூலி கொடுக்க இடமில்லாமையின், அங்கும் நடுவ் மூழ்ந்து, ஓலமிட்டு அழுகின்றார்கள்! ஆங்கிலர் நடுவராயிருப்பின், அவரால் எத்திறத்தவரும் முறையாக வழக்குத்தீர்க்கப்பட்டுத் தங்குறை தீர்கின்றனர். நம் நாட்டவர் அந்நிலைகளில் இருப்பிற், பெரும்பாலும் அவரால் நடுவாக வழக்குத்தீர்க்கப்படுதல் இல்லை; அவர்க்குக் கைக்கூலி கொடுப்பார் பக்கமே வழக்கு நன்றாய் முடிகின்றது. இதனினும் பெருங் கொடுமை யாதிருக்கின்றது! காவலாக இட்டவேலியே பயிரைத்தின்றாற் பயிர் விளைவதெப்படி?

இங்ஙனம் பொருளையே பெரிதாய் நினைந்து நடுவு தவறி, எளியவர்களை வருத்திப் பொருள்சேர்க்கும் ஆங்கிலங் கற்ற நம்மனோர், பார்ப்பனரல்லாத நம்மனோர்க்கு இவ்வாறெல்லாந் தீங்கிழைப்பினும், பார்ப்பனர் காலில் விழுவதற்கும் அவர்க்குத்தாம் சேர்த்த பொருளை மிகுதியாக வழங்குவதற்கும் மட்டும் அவர்கள் சிறிதும் பின் வாங்குகின்றார்களில்லை.

இவர்கள் ஆங்கிலங்கற்றது வயிற்றுப்பிழைப்புக்கும் பெருமைக்குமே யல்லாமல், ஆங்கிலத்திலுள்ள விழுமிய அறிவாராய்ச்சியைப்பெறுவதற்கு அன்றாகையால், இவர்கள் தம் வீட்டிலுள்ள அறிவில்லாப் பெண் மக்களின் சொல்லுக்கும், ஆராய்ச்சியில்லாப் பேதைகளான தம் சுற்றத்தார் சொல்லுக்குங்கட்டுப் பட்டவர்களாகித், தம் இல்லத்தில் நடக்கும் ஒவ்வொரு சடங்கிற்கும் பார்ப்பனர்களை வரவழைத்து, அவருக்கு

அவர் வேண்டிய பொருளை வழங்கி அவர் காலிலும் விழுகின்றார்கள்! ஒரு வேளை நல்ல சோறு கூடக்கிடையாமற் பட்டினியும் பசியுமாய்க்கிடந்து வாடி வதங்கும் ஏழைகள் முகத்தை ஏறெடுத்தும் பாராமற், பேதைமை வயப்பட்டு வறுமையறியாத பார்ப்பனர்க்கும், ஆரவாரக் கொண்டாட்டுகட்குஞ், சிறுதெய்வ வெறியாட்டுகட்கும், அழிவழக்கு கட்குந்தமது பொருளைக் கணக்கின்றிச் செலவிடும் நம்மனோரின் நிலை, எண்ணுந்தோறும் நடுக்கத்தை விளைவிக்கின்றது!

இனி, ஆங்கிலமாவது தமிழாவது கல்லாதிருந்தும் பழைய நல்வினைப்பயனாற் பெருஞ்செல்வர்களாகவுஞ், சிற்றரசர்களாகவும் வாழ்வார் நம் நாட்டிற் பெருந்தொகையினராய் இருக்கின்றனர் இவர்களுடைய செல்வச் செருக்கையும், இவர்கள் தங்கீழ் உள்ள ஏழைமக்கட்குச் செய்யுங் கொடுமைகளையும் நாம் எண்ணிப் பார்ப்போமானால், நமதுள்ளம் இன்னும் மிகுதியாய் நடுங்கா நிற்கும். செல்வர்கள் இல்லங்களில் இருக்கும் பொற்சரிகை பின்னிய பட்டாடைகளிலும், அவர்களும் அவர்களின் மாதரும் அணிந்து கொள்ளுங்கல்லிழைத்த நகைகளிலும், அவர்கள் புழங்கும் பொன் வெள்ளி ஏனங்களிலும், அவர்கள் ஏறிச்செல்லும் ஊர்திகளிலும், இன்னும் இவை போன்ற வெளிமினுக்குகளிலும் அவர்கள் செலவு செய்திருக்கும் பொருளைக் கணக்கிடப்புகுந்தால், அவை நூறாயிரக் கணக்காயிருக்கும்.

இனிச், சிற்றரசர்களாகிய ஜமீன்றாரர்களின் அரண்மனைகளிலும் இங்ஙனமே ஆடைகளிலும் அணிகலங்கள் முதலியவற்றிலும் மடங்கி வறிதே கிடக்குஞ் செல்வப்பொருளைக் கணக்கிடப்புகுந்தால், அவை கணக்கிலடங்கா

இங்ஙனமே, சைவ வைணவ சுமார்த்த மாத்துவ மடங்களில் ஏதொரு நற் பயனுமின்றி அடங்கிக்கிடந்து மங்கும் பெரும் பொருட்டிரளுங்கணக்கில் அடங்கா.

இவ்வாறெல்லாம் இவர்கள் கையில் முடங்கிக்கிடந்து அவியும் பெரும்பொருட் குவியல்களெல்லாம், இவர்களைவிட்டு நீக்கிப், பொது மக்கட்குப் பயன் படுநிலைமையை யடையுமானால், இவ்விந்திய நாட்டில் வறுமையும், நோயும், அறியாமையுந்தலைக்காட்டுமா?

இப்பெரும் பொருள் கொண்டு நூறாயிரக்கணக்கான கல்விச்சாலைகள் நாடெங்குந் திறப்பிக்கலாம். மிக வறியராயிருப்பவர்கட்கு அவர் வறுமை நீங்கும் மட்டும் உணவு கொடுக்கும் அறச்சாலைகள் எங்கும் அமைக்கலாம். ஏழை யெளிய

பிள்ளைகட்கு உண்டியும் உடையும், நூல்களும் வாங்கிக்கொ
டுத்துச் சம்பளம் வாங்காமற் கல்வி கற்பிக்கலாம். உழவுத்
தொழில் கைத்தொழில்களை அறிவாராய்ச்சியோடு செய்து,
இப்போது பெறும் பயனிலும் நூறு மடங்கு ஆயிரமடங்கு
மிகுதியான பயனைப்பெறலாம். வாணிகத்திற் பொய்யும் புர
ட்டுங்கலவாமல் அதனை நேர்மையோடு செய்து பேரூதியத்
தை யடையச் செய்யலாம். இவை மட்டுமோ, இந்தியர்கள்
தாமே தமது பொருள் கொண்டு புகைவண்டித் தொடர்கள்,
மின்சார வண்டிகள், வானவூர்திகள் முதலியனவெல்லாம்
அமைத்துக்கொள்ளலாம். நீர்வளமில்லாத நாடு நகரங்களுக்
குக் குளங்கள் கூவல்கள் எடுப்பித்து நீர்ப்பீலிகள் வைக்க
லாம். பொது மக்கட்கு அறிவு ஊட்டுங் கழகங்கள் நிலைபெ
றுத்தி, அவற்றிற் கலைவல்ல அறிஞர்களை அமர்த்தலாம்;
அவர்கள் கடவுளைப்பற்றியும், உயிர்களைப்பற்றியும் உலகங்
களைப்பற்றியும், உலகியற் பொருள்களைப்பற்றியுங் குழாங்
கொண்டு ஆராய்ந்து அறிவு பெறுதற்குக் கலையாராய்ச்சி மன்
றங்கள் நிறுவலாம்; அவர்கள் ஆராய்ந்தெழுதும் நூல்களுக்
குத் தக்கபடி பொருளுதவி புரிந்து, அவற்றை அச்சிட்டு நா
டெங்கும் பரப்பலாம். ஆண்டுகடோறும் பன்னூறாயிரக்
கணக்காய் மக்களுயிரைக் கொள்ளை கொண்டுபோகுங் கொ
டிய நோய்களை வராமற்றடை செய்து மக்கள் வாழ்நாளை
நீளச் செய்து அவரறிவு வளர்ச்சிக்குப் பெருந்துணை செய்யும்
மருத்துவக் கழகங்கள் எங்கும் அமைக்கலாம்.

எல்லா உலகங்களையும், எல்லா உயிர்களையுந் தோற
றுவித்து உயிர்கட்கு ஓயாமற் பேருதவி செய்து ஒரே
முழுமுதற் கடவுளான ஒரு பெருந் தந்தையை அறியா
மற், பிறந்து பெருந் துன்பப்பட்டு இறந்த மக்களையும்,
மக்களினுந் தாழ்ந்த சிற்றுயிர்களையுந் தெய்வங்களாக
நினைத்து வணங்கும் பெருங் குற்றஞ் செய்வதோடு, வாய
ற்ற தீங்கற்ற ஏழை உயிர்களாகிய ஆடு, மாடு, கோழி
முதலியவைகளைத் துடி துடிக்க அறுத்து, அவற்றை
அத்தெய்வங்களுக்குப் பலியாக ஊட்டி மீளா நரகத்திற்
காளாகும் நம் பொது மக்களை அத்தீமையினின்று விடு
விக்கலாம். சாதியென்றுங், குலமென்றும் வரையறுத்
துக் கொண்டு சிறுவர், சிறுமிகளை அளவிறந்த துயரக்
கடலில் அமிழ்த்திவருங் கொடிய செயல்களை ஒழித்து,
அறிவும் நற்குணமும் நற்செயலும் அன்புமுடையாரை
ஏதொரு வேற்றுமையுமின்றி ஒருங்கு கூட்டி வாழச்செய்
யும் மக்கட் கூட்டுறவு மன்றங்கள் எங்கும் நிலை பெறுத்

தலாம். ஒரு முழுமுதற் கடவுளை எல்லாருந் தடையின்றிச் சென்று வழிபட்டு மகிழுந் திருக்கோயில்கள் எங்கும் எடுப்பிக்கலாம்.

இன்னும் நம் மக்களின் இம்மை மறுமை வாழ்க்கைக்கு இன்றியமையாது வேண்டிய இன்னும எத்தனையோ உயர்ந்த ஏற்பாடுகளையெல்லாஞ் செய்விக்கலாம்! இவ்வளவு நலங்களுக்கும் பயன்படுதற்குரிய கோடி கோடியான பெரும் பொருட் குவியல்கள், நம் நாட்டுச் செல்வர்களிடத்துஞ் சிற்றரசர்களிடத்தும் அரசர்களிடத்தும் மடத்தலைவர்களிடத்துஞ் சிறிதும் பிறர்க்குப் பயன்படாதவாறாய் மடங்கி மங்கிக்கிடக்கையில், அப்பொருட்டிரளை அவர்கள்பால் நின்றும் விடுவித்துப், பொது மக்கட்குப் பயன்படுந் துறையில் இறங்கி முயலாமல், நம் நாட்டுத் தலைவர்கள் "நம் நாட்டுப் பொருள் மேல் நாட்டுக்குப்போய்விடுகின்றதே!" என்று சொல்லி, ஆராய்ச்சியறிவு சிறிதுமில்லாத, சாதி வேற்றுமைச் சமய வெற்றுமைப் படுகுழியினின்றும் ஏற விருப்பமில்லாத நம் இந்திய மக்களை வீணே கிளப்பிவிட்டு, இந்நாட்டுக்குப் பல வற்றாற் பெருந் தீமைகளை உண்டுபண்ணுதல் நன்றாகுமா? என்பதனை எண்ணிப்பாருங்கள்.

நம் நாட்டவர் கையிற் பொருள் கிடைத்தால் அது நம் பொது மக்கட்குப் பயன்படப்போவதில்லை! நகைக்குந், துணிக்கும், ஊர்திகட்குஞ், சாதி இறுமாப்புச் சமய இறுமாப்புகளைப் பெருக்குதற்கும், ஏழை எளியவர்களைக் கொடுமையாக நடத்துதற்குந், தீயவொழுக்கங்களை மிகுதி செய்தற்கும், பார்ப்பனருக்குக் கொடுத்தற்கும், ஆங்கிலமருத்துவஞ் செய்வார் செலவிற்கும், அழிவழக்காடுதற்கும், இன்னும் இவைபோன்ற தீயவற்றிற்குந்தாம் அவரது பொருள் பயன்படும்; அல்லது அவர் பொருள்மேற் பொருள் சேர்த்து வைத்துவிட்டுச்சாகப், பின்வந்தோர் அவற்றையழித்துப் பாழாக்குதற்கே பயன்படும்! இவைகளைத்தவிர வேறெந்த நல்ல துறையிலாயினும் நம் செல்வர்கள் தமது பொருளை மனமுவந்து பயன் படுத்தக் கண்டதுண்டோ சொல்லுங்கள்!

மற்று, நமக்குப் புறம்பான மேல் நாட்டவர் கையிற் பொருள் சேர்ந்தால் அஃது எத்துணை நல்ல துறைகளிற் சென்று பயன்பட்டு, உலகத்திற் பரந்து விரிந்திருக்கும் எல்லா வகையினரான மக்களையும் இன்ப அறிவு வாழ்க்கையில் வாழச் செய்கின்றதென்பதைச் சிறிதுணர்ந்து பாருங்கள்!

மேல் நாட்டவர் ஒரே முழுமுதற் கடவுளை வணங்குவ தோடு, அவ்வொரு கடவுளை வணங்காமல் இறந்து போன உயிர்களையும், மரங்கள், விலங்குகள், கட்டை கள், கற்கள் முதலானவைகளையும் அறியாமையால் வணங்கிப் பிழைபடும் ஏனத்தேய மக்களி டத்து இரக்கமுடையவர்களாய்க், கோடி கோடியாகத் தமது பொருளைச் செலவு செய்து, கல்வியறிவு ஆராய்ச் சியிற் சிறந்த தம் குருமார்களை நூறாயிரக்கணக்காய் அத்தேயங்களுக்கெல்லாம் அனுப்பி, ஆங்காங்குள்ள மக் களுக்குச் சமய அறிவையும் புகட்டி வருகின்றார்கள்.

இங்ஙனம் மேல் நாட்டவர் மற்றைக் கலையறிவுகளுடன் சமய அறிவிலுந் தாம் மேம்பட்டு விளங்குவதோடு, மற்றை நாட்டவரும் அதிற் சிறந்து விளங்கவேண்டுமென்னும் பேரி ரக்கமுமுடையவர்களாய், அதற்கென்று தமது பொருளைக் கணக்கில்லாமற் செலவு செய்து வருதல்போல, நம் நாட்டவர் தமக்கேனும் பிறர்க்கேனும் அங்ஙனஞ் செய்யக்கண்டதுண் டோ? நம் நாட்டிலுள்ள ஓரினத்தவர் தமது சமயக் கல்விக் கேனுந், தம்மோடு உடன் உறையும் மற்றை இனத்தவர் சமயக் கல்விக்கேனும் ஒரு காசாயினுஞ்செலவு செய்யக்கண்டதுண் டோ? அதுமட்டுமா! ஒருசில இனங்களைச் சேர்ந்தவர்கள் தாம் வணங்குங் கோயில்களில், தம்மோடு ஓர் ஊரில் ஒருங்கு உறையும் வேறுசில இனத்தவர்களையுள்ளே நுழையவிடாமற், கிட்ட அணுகினால் அவர்களை வெட்டிச் சாய்க்கின்றார்களே! இவர்கள்தாமா ஒரு நாட்டவர்! இவர்கள்தாமா அருளொழுக் கத்திற் சிறந்தவராக நூல்களிற் புலனாகுஞ் சைவவைணவ சமயாசிரியர் மரபில் வந்தவர்கள்! இத்தமிழ் நாட்டில் இவ் ஒரு சில இனத்தார்க்குள்ள இறுமாப்பும் மனக்காழ்ப்புங் கொடுமையும் வேறெங்கேனும் இருக்கக் கண்டதுண்டோ? இத்தகையவர்கள் கையிற் பொருள் மிகுதியாய்ச் சேர்வது எதற்கு? அவர்களின் கொழுப்பையுங் காழ்ப்பையுங் கொடு மையையும் மிகுதிப் படுத்துதற்கன்றோ? இக்கொடியவர்கள் கையைவிட்டு நீங்கி அப்பொருள் மேல்நாட்டவர் கையை அடைந்தால், அதனால் உலகிற்கு நன்மையே விளையுமல்லது தீமை சிறிதுமுண்டாகாதென்பது நன்கு புலனாகவில்லையா?

இனிச், சமயக் கல்வியேயல்லாமற் பிறகல்வித்துறைகளி லும் மேல்நாட்டவர் தமது பொருளை எத்தனைக் கோடிக் கணக்காய்ச்செலவு செய்கின்றார்களென்பதைச் சிறிதெண்ணிப் பாருங்கள்! மேல் நாட்டவர் இத்தமிழ் நாட்டில் வருவதற்கு முன் இங்கே உயர்ந்த பள்ளிகூடம் ஒன்றாயினும் இருந்ததா?

திண்ணைப் பள்ளிக்கூடங்கள் சிலவே எங்கோ சில இடங்களில் வயிற்றுப் பிழைப்புக்கு இல்லா வாத்தியாயர்களால் நடத்தப்பட்டன; அவ்வாத்தியாயர்களிற் பெரும்பாலருந் தமிழ் நன்கு கற்றறியாதவர். ஒருசிறுவன் தமிழ் எழுத்துக்கள் எழுதப்படிக்கத் தெரிந்துகொள்ளுவதற்கே நாலைந் தாண்டுகள் செல்லலாம். அக்காலத்தில் அச்சுப் புத்தகங்களே இல்லாமையால், உயர்ந்த தமிழ் நூல்களை எளிதிற் பெற்றுப் பயில்வதற்கே இடமில்லாமல் போயிற்று. இவ்வொட்டுத் திண்ணைப் பள்ளிக்கூடங்களிலுந், தாழ்ந்த குலத்தவராக எண்ணப்படுவோர் சேர்ந்து படித்தல் இயலாது. அறிஞரான்றிருந்த தமிழ் புலவர் சிலரும் பொருள் வருவாய்க்கு வழியில்லாமையாற், செல்வர் சிலரையடுத்து, அவரைப் பல வகைபாலெல்லாம் புகழ்ந்து பாடிக் காலங்கழித்து வந்தார்கள். இவ்விரங்கத்தக்க நிலை இப்போதும் முற்றுமொழிந்து போயிற்றென்று செல்லுதல்கூடாது.

ஆனாலும், மேல்நாட்டவர் இந்நாட்டுக்கு வந்தபின் தமிழ்மக்கட்கும் பிறர்க்கும் விளைந்திருக்குங் கல்வி நலங்கள் எவராலும் மறுக்க முடியா. அவர்கள் இன்னார்க்குக் கல்வி கற்பிக்கலாம், இன்னார்க்குக் கல்வி கற்பிக்கலாகாது என்னும் வேற்றுமை சிறிதும் பாராதவர்களாய்க் கல்வியென்னும் நந்தாமணி விளக்கை எல்லார் கையிலுங், கொடுத்து அறியாமையென்னும் பேரிருளைக் கடந்து அறிவுலகத்துக்குச் செல்லும் ஒப்புயர்வற்ற வழியைக் காட்டி வருகின்றார்கள் அல்லரோ? பார்ப்பனக்குடி வேளாளக்குடிகள் இருக்குமிடங்களிலே யன்றிப், பள்ளச்சேரி, பறைச்சேரிகளிலும் அவர்கள் நெடுகப் பள்ளிக்கூடங்கள் அமைத்துக், கல்வியை யூட்டி எல்லார்க்கும் அறிவுக்கண்ணைத் திறப்பித்து வருதல் எல்லாரும் அறிந்ததன்றோ?

இனி, நன்செய் புன்செய்ப் பயிர்களை விளைத்தற்குங், குளங்கூவல் கிணறுகள் வெட்டுதற்கும், வீடுகள் கட்டுதற்கும், ஆடு மாடுகள் மேய்த்தற்கும், இன்னுந் தமக்கு வேண்டிய எத்தனையோ வேலைகளெல்லாஞ் செய்வித்துக்கொள்ளுதற்கும் இவ்வேளைக் குடிமக்களைப் பயன்படுத்தி, அவ்வழியால் திரண்ட செல்வத்தையடைந்து இனிது வாழும் நம் நாட்டு அரசர்களுங், குறுநில மன்னர்களும், மடாதிபதிகளுஞ் செல்வர்களுமோவென்றால் அவ்வேழைக்கு ஒரு வேளை கல்லுணவாவது அவர்கள் உடுத்துக்கொள்ளுதற்கு ஓர் ஆறு முழத்துண்டாவது

கொடுக்கின்றார்களா? இல்லை, இல்லை. அவர்கள் தமிழ் கற்பதற்கு ஒரு சிறு பள்ளிக்கூடமாவது வைத்து நடத்துகின்றார்களா? இல்லை, இல்லை. இது மட்டுமோ!

அவ்வேழைகள் தம் ஊர்த் தெருவழியேயுஞ் செல்லல் ஆகாது, தாம் புழங்குந் தண்ணீர்த் துறைகளிலுந் தண்ணீர் முகக்கல் ஆகாது, "நான் பெரியவன், அவன் தாழ்ந்தவன் எனக்கு முதலில் திருநீறு துளசி கொடுக்க வேண்டும், அவனுக்கு அப்புறங் கொடுக்கவேண்டும்" என்று தமக்குள்ளேயே தம் பெருமையைக் காட்டிக்கொள்ளத் தாம் செல்லுங் கோயிற் கோபுரவாயிலிலும் அவ் ஏழை மக்கள் அணுகுதல் ஆகாது என்று அவர்களைத் துரத்தித் துரத்தி அடிக்கின்றார்கள்.

ஏதொரு தீங்குஞ் செய்யாது, எல்லாவகையிலும் நலங்களே செய்து, தம்மையுந் தம்மவரையும் இனிது வாழவைக்கும் அவ்வெளிய மக்களுக்கு, மேற் குலத்தவராகத் தம்மைத் தாமே உயர்த்திச் சொல்லிக்கொள்ளும் மக்கட் போலிகள் எத்தகைய கைம்மாறு செய்கிறார்கள்! பார்த்தீர்களா? அருளிரக்கமுடையார் சிலர், இம்மக்கட் போலிகளைப்பார்த்து, "உங்களுக்கு நன்மையே செய்யும் இவ் வேழைகளை ஏன் இங்ஙனம் வருத்துகின்றீர்கள்?" என்று கேட்டால், ஊரார் எவர்க்குந் தெரியாத வட மொழியிற் பார்ப்பனர் தமது நன்மையையே கோரி, மற்றைப் பிறரை யெல்லாம் இழித்து, அவர்குத் தீது செய்யுந் தீய எண்ணத்தோடு எழுதிவைத்திருக்குங் கொடிய மிருதிநூற் கட்டளைகளையெல்லாம் எடுத்துவந்து முழநீளங் காட்டி, "கடவுளே வேதத்தில் இப்படிச் சொல்லி யிருக்கிறார். அப்படிச் சொல்லி யிருக்கிறார், அவரவர் முற்பிறவியில் செய்த வினைப்படிதானே இப்பிறவியில் மேற்குல கீழ்க்குலங்களிற் பிறந்து துன்புறவேண்டும்! அதற்கு நாம் என்ன செய்யலாம்!" என்று எளிதாகச் சொல்லி ஏமாற்றிவிடுகின்றார்கள். "வடமொழி நூல்கள் நமக்கு உரியவைகள் அல்ல, நமக்குரிய எந்தப் பழைய தமிழ் நூல்களிலாவது இத்தகைய கொடுமையை நம்போன்ற மக்கட்குச் செய்யும்படி ஏதேனுஞ் சொல்லி யிருக்கின்றதா? நம் சைவ சமயாசிரியர்களெல்லாருஞ் சாதி வேற்றுமை சிறிதும் பாராது நடந்தும் பாடியும் இருக்கின்றனரே; நம் ஆசிரியர் செய்தபடியுஞ்சொல்லியபடியுமல்லவா நாம் நடத்தல்வேண்டும்?" என்று அருளாளர் கேட்டால், "அவையெல்லாம் 'பக்தி மார்க்கத்'தில் உள்ளார்க்குத்தகுங் 'கர்ம மார்க்கத்'திலுள்ள நமக்கு அவை தகா" என்கிறார்கள். அதன்மேல் "பக்திமார்க்கம் உயர்ந்ததா தாழ்ந்ததா? அன்புநெறி அருள்

நெறியைப் பரப்பிய நம் சமயாசிரியர் கடைப்பிடித்து ஒழுகிய முறைப்படி நாம் நடப்பது நன்றா? தீதா?'' என்று வினவினால், அச்சாதி வெறிபிடித்த பேலிகள் "சமயாசிரியர் எய்திய நிலை வரும்வரைக்கும் நாம் அவர்போல் நடத்தல் தீதாகும்'' என்று விடை கூறுகின்றனர். அது கேட்டு மீண்டும் அவ்வருட் செல்வர் "ஒற்றுமையின்மையால் வரும் பகைமை பொறாமையினாலும், அன்பு அருள் இன்மையால் வரும் வன்னெஞ்ச இறுமாப்பினாலும் பற்றப்பட்டிருக்கும் வரையில் மக்கள் சமயாசிரியர் நிலையினை யெய்தல் யாங்ஙனங் கைகூடும்?'' என்று கேட்பின், அதற்கவர் விடைகூற மாட்டாமல் மெல்ல எழுந்து நழுவிப்போய் விடுகின்றனர்.

உண்மையான் நோக்குங்காற் சாதி வெறியர்க்குத் தம்முடம்போடு அழிந்தொழியுஞ் சாதி தான் பெரிதாகக் காணப்படுகின்றதே யன்றி, உடம்பழியினுந் தான் அழியாதாய்த் தம்முயிரோடு உடன்வருஞ் சமயவறிவு பெரிதாகக் காணப்படவில்லை. தம் சமயாசிரியர் வழி நடவாத இவர்கள், தம்மைச் 'சைவர்' என்று உயர்த்துப் பேசிக்கொள்வதும், அவர் அருளிச் செய்த திருப்பதிகங்களை ஓதுவதும், அவரைப் பாராட்டிப் பேசுவதும் நகைப்புக்கே யிடமாயிருக்கின்றன.

தமது சமயத்தினுந், தஞ்சாதியையே அவர்கள் மேலதாய்க் கருதுகின்றனர் என்பதற்கு, அவர்கள் தஞ் சமயத்தவரல்லாத வைணவர் சிலர் தமக்கு உறவினராதல் பற்றி அவரோடு உண்ணல் கலத்தல்களைச் செய்தலே சான்றாகும். தம்முடைய சைவ வைணவ சமயந்துறந்து கிறித்துவ சமயம் புகுவாருஞ், சாதிவேற்றுமைக்கு எள்ளளவும் இடம் இல்லாத அக்கிறித்துவ சமயம் புகுந்த பின்னருந், தமது பாழ்த்த சாதி வேற்றுமையினை விடாப் பிடியாய்ப் பற்றிக்கொண்டு, தாம் இறைவனைத் தொழச் செல்லுந் திருக்கோயில்களிலுங் கலகம் விளைக்கின்றனரென்றாற், சாதியிறுமாப்பின் கொடுமையை என்னென்றெடுத்துரைப்போம்! திருக்கோயில்களிலுஞ் சாதிவேற்றுமை பாராட்டி, ஈரநெஞ்சமின்றி ஒருவரையொருவர் வெட்டிச் சாயக்கக் கங்கணங்கட்டி முனைந்து நிற்கும் இவர்கள் தாமா ஆங்கில அரசை நீக்கித்தாமாக அரசாள வல்லவர்கள்?

இங்ஙனந் தமக்குரிய சமய அறிவையுஞ், சமயாசிரியரையுஞ், சமய நூல்களையுஞ், சமயவொழுக்கங்களையும் பெரிதாகக் கருதாமற், றாம்பிறந்த சாதியையே அவையெல்லாவற்றினும் பெரிதாகக் கருதி நடக்குந் தமிழர்கள். தமக்குரிய தமிழ் மொழியிலாயினும் உணர்ச்சி வாய்ந்தவர்களாய் இருக்கின்றார்களோ வெனின்: அப்படியும் இல்லை. தமிழர் பத்தாயிரம் பேரில் ஒருவர் இருவர்க்கே சிறிது எழுத்துக் கூட்டிப் படிக்கத் தெரியும்; தமிழறிவு செவ்வையாக வாய்த்தவர்களைத் தேடப் புகுந்தால், நூறாயிரவர்க்கு ஒருவர் இருவமே காணப் படுவர். இங்ஙனம் மிக அரியராயக் காணப்படுந் தமிழ் கற்றாரிற் பெரும்பாலார்க்குள்ள அறிவு நிலையாவது, தமிழ்கல்லாத ஏனையோர்க்கு உள்ள அறிவு நிலையினுஞ் சிறந்ததாகக் காணப்படுகின்றதோ வென்றால், அப்படியும் இல்லை. கல்லாதவர்க்குள்ள சாதி யிறுமாப்பும் மடமைக் கொள்கைகளுங் கற்றவரையும் விட்டு நீங்கியபாடில்லை. கற்றவருங் கல்லாதார்க்கிணங்கி அவர் வழிச்செல்லக் காண்கின்றோமே யன்றிக், கற்றவர் தாங் கற்ற கல்வியறிவாற் கல்லாதாரைத் திருத்தி அவரைத் தம்வழிப் படுக்கக் காண்கின்றோம் இல்லை.

தமது தனிச் செந்தமிழ் மொழியில் அன்பு அறிவு அருளொழுக்கங்களை விரிக்கும் நூல்களும், அரசர்கள், அடியார்கள், கற்றவர்களின் உண்மை வரலாறுகளைத் தெரிவிக்கும் பாட்டுகள் காப்பியங்களும், இறைவனைக்கண்டு அவனைக் குழைந்து குழைந்து உருகிப்பாடிய சமயாசிரியர் தந்திருப்பதிகங்களும் நிரம்பிக்கிடக்க, அவற்றின் அருமை பெருமையறியாமல், தமிழ் நூல் நலத்திற்றினையளவும் வாயாது பொய்யும், புரட்டுங், கொலை, புலை, கட்குடியும் மலிந்த ஆரிய நூல்களைத் தாம் சிறிதும் ஆய்ந்து பாராதிருந்தும், அவற்றை 'வேதம்,' 'மிருதி,' 'இதிகாசம்' 'புராணம்' என்று உயர்த்துப் பேசி அவை தம்மை இறைவன் அருளிச் செய்தனவாகப் பாராட்டித், தாம் கற்ற தமிழையுந், தமிழ் நூல்களையும் இழித்துப் பேசுந் தமிழ்ப்புலவரின் அறிவு நிலை எத்தகையதென்பதை எண்ணிப்பாருங்கள்!

தாம்கற்ற வடநூற்கல்வி உலகினர்க்குப் பயன்படாதென்பதை நன்குணர்ந்திருந்துந், தாம் கல்லாத தமிழ் மொழிக்கல்வியே இந்நாட்டவர் முன்னேற்றத்திற்குப் பெரிது பயன்படுமென்பதை நெஞ்சாரத் தெரிந்திருந்துந், தாம் பயின்ற இருக்கு முதலான ஆரிய நூல்களிற் பல்வேறு சிறு தெய்வ வணக்கமும், மக்களின் நல்லொழுக்

நத்துறைகட்கு ஆகாதனவும், வெறும் பொய்க்கதைகளும் நிறைந்திருத்தல் செவ்வனே அறிந்திருந்துந், தாம் பயிலாத 'தொல்காப்பியம்,' 'சங்க இலக்கியம்,' 'திருக்குறள்,' 'சிலப்பதிகாரம்,' 'தேவார திருவாசகம்,' 'பெரிய புராணம்,' 'சிவஞானபோதம்' முதலான அருந்தமிழ் நூல்களில் ஒரு முழுமுதற் கடவுள் வணக்கமும் மக்களின் நல்லொழுக்கத் துறைகட்கு இன்றியமையாது வேண்டுவனவும் உயர்ந்த உண்மை வரலாறுகளும் நிரம்பி விளங்கல் கேட்டிருந்துந், தாம் தமக்குரியவாகக் கருதியிருக்கும் வடநூல்களையே தெய்வ நூல்களாக உயர்த்துப் பேசித், தமக்குப் புறம்பாகத் தாம் கருதியிருக்குந் தமிழ் நூல்களையெல்லாம் மக்களிலுந் தாழ்ந்தவர்க்குரியவாக இழித்துப் பேசி இந்நாட்டவர் முன்னேற்றத்திற்குப் பெருந்தடையாய் நிற்கும் ஆரிய மாந்தர் தம் அறிவு நிலை எத்தகையதென்பதையும் எண்ணிப்பாருங்கள்!

இவ்வாறாக இத்தமிழ் நாட்டிலுள்ள கற்றவர்கள் நிலையும் நடுவு நிலை திறம்பியதாய், உண்மையை உள்ளபடி ஆராய்ந்துரைத்து மக்களை உண்மையறிவில் மேலெழச் செய்தலிற் சிறிதும் விருப்பு இல்லாமல் அவர் தம் முன்னேற்றத்திற்குப் பேரிடர் பயப்பதுமாயிருத்தலை ஆழ்ந்து நினைபவல்லார்க்கு, இந்நாட்டவரும் இவரிற் பலவகையில் வேறுபடாத வட நாட்டவரும் ஒருங்கு குழுமித் தாமே தமது நாட்டை அரசு புரிதல் கனவிலுங் கைகூடாதென்பது நன்கு விளங்கா நிற்கும். இஃதிவ்வாறிருக்க.

இனி, மேல்நாட்டவரிற் கற்றாரின் அறிவு நிலையினைச் சிறிதெண்ணிப்பாருங்கள்! அவர்கள் தாம் பெற்ற செல்வமெல்லாந் தமது கல்விப்பயிற்சிக்கே பயன்படுமாறு செய்து தமது ஆங்கில மொழியை மிகத்திருத்தமாகவுந் தீஞ்சுவையுடையதாகவும் வழங்கி, அதன் கண் எல்லாவகையான கலை நூல்களையும் ஆழ்ந்தாராய்ந்து தெளிந்த அறிவான் நாளுநாளும் இயற்றி உலகமெங்கணுந் தமது மொழிப்பயிற்சியை ஒளிரச் செய்து வருகின்றார்கள். அதுமட்டுமோ! அவர்கள் அயல் நாட்டு மொழிகளையும் நன்கு பயின்று, அவற்றின் கண் உள்ள அரிய பெரிய நூல்களையுந் தமது ஆங்கில மொழியில் திருப்பி, அவற்றின் உண்மைகளையும் நடுநிலை வழாது எடுத்துக் காட்டி, அவைகளும் இவ்வுலகெங்கும் பரவிப் பயன் றருமாறு செய்கின்றார்கள். மற்று, நம் இந்திய நாட்டு மக்கட் வகுப்பினரோ தாந்தாம் வழங்கும் மொழியையன்றித்,

தம்மிற் பிற வகுப்பினர் வழங்கும் மொழியையும் அதன்கண் உள்ள நூல்களையுங் கற்பதில் வேட்கை சிறிதுமில்லாராய் நிற்கும் அளவிலமையாது, அவற்றையும், அவற்றை வழங்கி வருவாரையும் இழித்துப் பேசியும் வாளா மாய்கின்றனர்!

இன்னும், மேல்நாட்டவர் தமக்குரிய கிறித்துவ சமய உணர்ச்சியை இவ்வுலகமெங்கணும் பரவச்செய்தற்குத் தமது பொருளிற் பெரும் பகுதியைச் செலவிட்டு வருகின்றனரேயல்லாமல், தமது சமயவுணர்ச்சியை ஒரு கருவியாகக் கொண்டு செல்வப் பொருளை அவர்கள் தேடித்தொகுத்தல் கண்டிலேம். மற்று இந்நாட்டின்கண் உள்ள குருக்கள்மாரோ இந்து சமயப் பெயரால் அளவிறந்த கிரியைகள் சடங்குகளை வகுத்து வைத்து, அவற்றின் வாயிலாகச் செல்வர்கள், சிற்றரசர்கள், அரசர்களின் செல்வமெல்லாங் கவர்ந்து வருதலுடன், ஏழைக் குடிமக்கட்குரிய சிறு பொருளையுமுறிஞ்சி அவர்களையும் வறுமைக்கு இரையாக்கிவருகின்றார்கள்.

ஒருவன் பிறந்தது முதல் அவன் இறக்குமளவும், அவனும் அவனுக்குரியாருங் கடன் பட்டாயினுஞ் செய்து தீர்த்துவிடும்படியாக அவர்கள் கட்டிவைத்திருக்குங் கிரியைகளையுஞ், சடங்குகளையும், அவற்றிற்காகச் செலவாகும் பொருட்டிரளையுங் கணக்கிட்டுப்பாருங்கள்! ஒருவன் செத்தவுடனாவது இக்கிரியைகள் ஒழிகின்றனவா? இல்லை, இல்லை. அவன் செத்த பத்தாம் நாளிலுங் கிரியை, ஒவ்வொரு திங்களிலும் மறைநிலா நாளிலுங் கிரியை, ஒவ்வோராண்டிலும் அவன் இறந்த நாளிலுங் கிரியை. இங்ஙனங், கருவாய் வயிற்றிலிருக்கும்போதும், மகவாய்ப்பிறந்து அறை கழிக்கும்போதும், ஆடையுடுக்கும்போதும், காது குத்தும்போதும், பள்ளிக்கூடத்திற் புகும்போதும், மணஞ் செய்யும்போதும், மனைவியுடன் கூடும்போதும், அறுபதாமாண்டு நிறையும்போதும், இறந்தபோதும். இறந்தபின்னருந் தொடர்பான செலவிற் கிரியைகளைச் செய்து செய்து நம் தமிழ் மக்கள் வறுமையிற் கிடந்துழலுமாறு புரிந்து, அவர் தரும் பொருளாற் கொழுக்கத்தின்று இன்புற்று இரக்கமிலராய் வாழும் ஆரியக் குருக்கள்மார்தஞ் சூழ்ச்சியை எண்ணிப் பார்ப்போர் எவரேனும் உளரா?

இங்ஙனந் தொடர்பாகக் கிரியைகளைப்பற்றுமாறு கற்பித்து, அவற்றைத் தமிழர்கள் தாமே செய்யாமல் ஆரியரா

கிய தம்மைக்கொண்டே செய்வித்தல் வேண்டுமெனவும் வற்பு றுத்தி, அவற்றால் தமிழர்கள் பொருளைப் பகற்கொள்ளை கொண்டு இனிது வாழும் ஆரியக்குருக்கள், தாம் தமிழர் இல் லங்களில் அங்ஙனந் தொடர்பாகச் செய்துவைக்குங் கிரியை களை அவர்க்கு விளங்கும்படியான தமிழ் மொழியிலாவது செய்து வைக்கின்றார்களா? அதுவும் இல்லை; தமிழர்க்கு எள்ளளவுந் தெரியாத ஆரிய மொழிச் சொற்களை 'மந்திரங் கள்' என உயர்த்தி ஏமாற்றிச் சொல்லி, அக்கிரியைகளைச் செய்பவர்களாய், அவர்களைப் பாவைபோல் ஆட்டி வைக்கின் றார்கள். கடவுளைக்கண்டு பாடிய மாணிக்கவாசகர், திரு ஞான சம்பந்தர் முதலான தெய்வ ஆசிரியர்கள் அருளிச் செய்த தெய்வச் செந்தமிழ்த் திருப்பதிகங்களாந் தெய்வ மா மறை மந்திரங்கள் இருக்க, அவற்றை இழித்து ஒதுக்கி, இந் நாட்டவர்க்குத் தெரியாத வடமொழிச் சொற்களைச் சொல்லி அக்கிரியைகளைச் செய்யும் ஆரியக் குருமாரின் தீய எண்ணத் தைக் கண்டுணர்ந்து, அதனைப் பலரறியத் தெரிவிக்கும் அறி வாண்மை வாய்ந்தார் இத்தமிழரில் இல்லையே!

இன்னுஞ், சிவபிரான் திருக்கோயில்களில் வழிபாடு ஆற்றுங் குருக்கள்மார் தமிழரினத்தைச் சேர்ந்தவராயி ருந்தும், அத்திருக்கோயில்களுக்கு வந்த சிறப்பெல்லாம் அவைகள் சைவ சமயாசிரியராற் பாடப்பெற்றிருப்பது பற்றியே யென்பதை அவர்கள் நன்குணர்ந்திருந்தும், அவர்கள் தேவார திருவாசகச் செந்தமிழ் மந்திரங்களைக் கொண்டு இறைவனுக்கு வழிபாடு செய்யாமல், தமிழ் மக் களுக்குச் சிறிதும் புலனாகாத வடமொழி சொற்களை மந்திரங்களென உயர்த்துச் சொல்லி அவற்றைக்கொண் டே கோயில் வழிபாடு முழுதுஞ் செய்கின்றார்கள். ஈதெ ன்ன கொடுமை பாருங்கள்!

தமிழ் மொழி வழங்கும் இத்தென்னாட்டில் தமிழ அர சர்களாலுந், தமிழர்களாலும் அமைக்கப்பட்டுச், சைவ சம யாசிரியர்களால் தமிழ் மொழியிலேயே சிறப்பித்துப் பாடப் பெற்ற திருக்கோயில்களிலேயே தமிழ் மந்திரங்களை வழங் காமற் செய்து, இத்தமிழ் நாட்டுக்கும், இங்கு வணங்கப்படுஞ் சிவபிரானுக்கும் அவனை வணங்குந் தமிழ் மக்களுக்கும் ஏதொரு தொடர்பும் இல்லாத, அவர்களுக்குச் சிறிதுந் தெரி யாத வடமொழிச் சொற்களைக் கொணர்ந்து அவற்றைக் கொண்டே அத் திருக்கோயில்களில் எல்லா வழிபாடும் நடக் கும்படி செய்து விட்ட பார்ப்பனர்தஞ் சூழ்ச்சியையும், அஞ்சா

நெஞ்சையும், ஆண்மையையும் எண்ணிப் பாருங்கள்! இத்தமிழ் நாட்டின் கண் எத்தனையோ கோடிக்கணக்கான தமிழ் மக்களும், நூறாயிரக்கணக்கான செல்வர்களும், ஆயிரக்கணக்கான சிற்றரசர்களும் நூற்றுக்கணக்கான மடாதிபதிகளுந் தமிழ்ப்புலவர்களும் நிறைந்திருந்துந்; தமிழர்களாகிய எங்களுக்குரிய இத்திருக்கோயில்களில் தேவார திருவாசகச் செந்தமிழ் மா மந்திரங்களைக்கொண்டு வழிபாடு செய்யாமல், எங்களுக்குப் புறம்பான எங்களுக்குத் தெரியாத வடமொழியைக்கொண்டு ஏன் வழிபாடு செயகின்றீர்கள்?'' என்று கேட்ட ஆண்மையுடையவர் எவராவது நம் தமிழரில் உண்டா? இத்துணைப் பெரிய இத்தமிழ் நாட்டில், எத்தனையோ கோடிக்கணக்கான தமிழ் மக்கள் நிறைந்த இத்தென்னாட்டில், எல்லாம் வல்ல இறைவனை நேர்முகமாய்க் கண்டு திருப்பதிகங்கள் அருளிச்செய்த தெய்வ ஆசிரியர் நிலவிய இத்தெய்வ நாட்டில், எல்லா இடங்களினுஞ் சிறந்ததான தூயதான தெய்வம் உறைவதான திருக்கோயிலிலேயே நம் தெய்வ ஆசிரியர் அருளிய தமிழ் மந்திரங்கள் நிலவாமல் அவற்றைப் புறந்தள்ளித், தெய்வத் தன்மை சிறிதுங் காணப்படாத வடமொழிச் சொற்களைக் கொணர்ந்து நுழைத்து, அவற்றைப் பெருமைப் படுத்தித், தேவார திருவாசகச் செந்தமிழ் மாமறைகளைச் "சூத்திரப்பாட்டு" என்று இழித்துப் பேசும் பார்ப்பனர்கள், எந்தக்காலத்திலாயினும் இந் நாட்டுக் குடியரசு வருவதாயிருந்தால், அதன் கண்ணுந் தமக்கு ஆட்சியையும், ஆக்கத்தையும் நிலைப்படுத்தி, ஏனை மக்களையெல்லாம் அறிவில்லாத குருடர்களாக்கித் தமக்கு அடிமைப்படுத்தி வைத்திருப்பரேயல்லாமல், அவர்கட்கு ஏதொரு சிறிய உரிமையேனுங் கொடுப்பர் அல்லது கொடுக்க விருப்புவர் என்று கனவிலும் நினைக்கின்றீர்களா; நினையாதீர்கள்!

நமக்கு உயிரினுஞ் சிறந்த திருக்கோயில் முதல் அரசியல் நிலைகள் கல்விக் கழகங்கள் கைத்தொழிற்சாலைகள் புகைவண்டி நிலையங்கள் உணவு விடுதிகள் மணக்களங்கள் பிணக்களங்கள் ஈறான எல்லா இடங்களிலும் ஆரியப் பார்ப்பனர்களே ஆட்சியுந் தலைமையும் உடையவர்களாயிருந்து, ஏனை வகுப்பினரின் முன்னேற்றத்திற்குப் பெருந்தடை விளைவிப்பவர்களாய் இருக்கின்றார்கள்.

ஏனை வகுப்பினர் எல்லாரும் ஒன்று சேர்ந்து விடாதபடி, அவர்கட்குட் பலவேறு சமயப்பிரிவு சாதிப்பிரிவுகளையுண்டாக்கி, அவ்வொவ்வொரு பிரிவினருந் தத்தஞ்

சமயமே, தத்தஞ் சாதியே யுயர்ந்ததென்று சொல்லி ஒருவரை யொருவர் பகைத்துப் போராடவைத்து, அப்போராட்டத்திற்கு இடமாக இராமன்கதை கண்ணன் கதை கந்தன் கதை விநாயகன் கதை காளிகதை முதலிய பல வேறு கட்டுக்கதைகளைத் தமது வடமொழியில் உண்டாக்கிவைத்து, அவற்றை இராமாயணம் பாரதம் பாகவதம் காந்தம் முதலிய புராணங்களாக உயர்த்து வழங்கி அவை, தம்மை மற்றையெல்லா வகுப்பினருங் குருட்டு நம்பிக்கையால் விடாப்பிடியாய்ப் பிடித்துக் கொள்ளும்படி செய்து விட்டார்கள்.

தமிழரில் ஆராய்ச்சியறிவுடையார் எவரேனுந் தமிழ் மக்கள் இங்ஙனங் குருட்டு நம்பிக்கையால் அழிந்துபோவதைக் கண்டு இரங்கி, "இப்பார்ப்பனக் கட்டான கதைகளை நம்ப வேண்டாம். அறிவு விளக்கத்திற்கும், தூய ஒழுக்கத்திற்கும் உதவி செய்யும் உயர்ந்த தமிழ் நூல்களை ஆராய்ந்து பயிலுங்கள்! குலமும் ஒன்றே, குடியுமொன்றே, வழிபடு தெய்வமும் ஒன்றே" என்று பொது மக்கட்கு அறிவு தெருட்ட முன் வருவாராயின், உடனே அப் பார்ப்பனரெல்லாரும் ஒரே முகமாய் நின்று அவரை 'நாத்திகர்' 'பிராமண நிந்தகர்' 'வேத நிந்தகர்' என்று பலரறியத்தூற்றி, அவரது அறிவுரை எவரது செவியிலும் ஏறாமற் செய்வதுடன், அவரது வாழ்க்கைக்கும் பல வழியில் தீங்கிழைக்கின்றார்கள். மற்றை வகுப்பினரிற் செல்வமுடையவர்கள் எவர் இருப்பினும் அவரைப் பார்ப்பனர்கள் சூழ்ந்துகொண்டு, அவரது பொருளைப் பல வகையில் உறிஞ்சி விடுவதோடு, தமிழறிஞரின் அறிவுரை அச்செல்வர்களின் செவியுள் நுழையாதபடிக்கும் மிக விழிப்பாக இருந்து தடைபுரிந்துவிடுகின்றார்கள். அதனால், இத்தமிழ் நாட்டிலுள்ள செல்வர்களின் பெரும்பொருள் தமிழ் மக்களின் அறிவு விளக்கத்திற்கும், அவர் தம் நல் வாழ்க்கைக்குஞ் சிறிதும் பயன்படாமற் போகின்றது! ஊர்கடோறும் நகரங்கடோறும் 'இராமாயணம்' முதலானக் கட்டுக்கதைப் 'பிரசங்கம்' நடைபெறச் செய்து, அதன் வாயிலாக ஊரவர் பொருளை எளிதிற் கவர்ந்துகொள்வதுடன், அவ்வறிவில்லா மக்கள் உள்ளத்தில் தம்மையுந் தம்முடைய நூல்களையுந் 'தேவர்' என்றுந் தேவர்க்குரிய 'வேதங்கள்' என்றும் நம்பும் அசையாக் குருட்டு நம்பிக்கையையும் பதியச் செய்து, அவற்றால் தம்முடைய ஆட்சியையும் முதன்மையையும் ஆரியப் பார்ப்பனர்கள் எங்கும் நிலை நாட்டிவிட்டார்கள்; இன்னும் அம்முயற்சியை

நடத்தியே வருகின்றார்கள்; ஆங்கில நன் மக்கள் ஆங்காங்கு வைத்து நடத்தும் பள்ளிக்கூடங்களிற் கற்கும் தமிழ் மாணவரின் தமிழ் பாடங்களிலெல்லாந் தம்முடைய புராணக் கட்டுக் கதைகளை நுழைத்து, இளமைப் பருவத்திலேயே அவை நம் சிறார் உள்ளத்திற் பசுமரத்தாணிபோற் இறுக்கமாய்ப் பதிய வைக்கின்றார்கள்.

இவர்கள் இத்தமிழ் நட்டை பாழ்படுத்தும் இவ்வுளவுகளை, உயர் நிலையிலுள்ள தமிழறிஞர் நன்கறிந்து வைத்துந், தமக்கு வரும் பொருள் வருவாயையோ, தமது நிலை உயர்வையோ மேலதாக்கருதி, அவருழைக்குந் தீங்குகட்கெல்லாந் தாமும் உடந்தையாய் நின்று நம் அருமைச் சிறாரறிவைப் பாழாக்கிவிடுகின்றனர்.

இன்னும் இங்ஙனமே பார்ப்பனர்களாலும், அவர்களைப் பின்பற்றி அவர்களைப்போல் நடக்கும் ஒழுகலாறுகள் உடையராய் வடமொழிக்கும், வடநூல்கட்கும் ஏற்றஞ்சொல்லித் தமிழையும், தமிழ் நூல்களையும் புறத்தொதுக்கி நடக்குஞ் சைவ வைணவர்களாலும் இந்நாட்டுக்கு விளைந்திருக்கின்ற தீமைகளையெல்லாம் எடுத்துரைக்கப் புகுந்தால் இவ்வேடு இடங்கொள்ளாது.

ஆதலால், இந்நாட்டுக்கு நலந்தேடுபவராக வெளிவருந் தலைவர்கள் உண்மையாகவே தாம் நலஞ்செய்பவர்களாயிருந்தால்இப்போதுள்ள மிக இரங்கத்தக்கநிலைமையில் நம் குடிமக்களை, நம் ஆங்கில அரசுக்கு மாறாகக் கிளப்பிவிட்டு அவர்களையும், அவர்களின் வாழ்க்கையையும் பாழ்படுத்துஞ் செயலை விடுத்து, யாங்கூறும் நன்முயற்சிகளை விடாப்பிடியாய்ச் செய்து, அவர்களை ஆராய்ச்சியறிவிலும், பயன்படு முயற்சியிலும் முன்னேறுமாறு உதவி புரிதல்வேண்டும்.

முதலாவதாக, ஊர்கடோறுந் தமிழ்ப்பள்ளிக்கூடங்கள் சிறப்பித்துச், செல்வர்கள் வீட்டுப் பிள்ளைகளைத் தவிர மற்றை எல்லாப் பிள்ளைகளும் பொருட் செலவின்றித் தனித்தமிழ் கற்கும்படி செய்தல் வேண்டும் அவர்கட்குக் கற்பிக்கும் நூல்களில் ஆரியக்கட்டுக் கதைகள் சிறிதும் விரவல் ஆகாது.

ஒழுக்க முறைகளும், இயற்கைப் பொருள் இயல்புகளும், சிற்றுயிர்களின் தன்மைகளும், ஆண்மையிற் சிறந்தாரின் வர

லாறுகளும், மக்களின் நாகரிக வரலாறுகளும் உழவு வாணிகங் கைத்தொழில்கள் செய்யும் முறைகளுங், கடவுளைக் கண்டு பாடிய சான்றோர் வரலாறுகளும், உண்மையாராயும் முறைகளும் இன்னும் இவைபோன்றவைகளுமே அந்தந்த வகுப்புக்குத் தக்கபடி செந்தமிழில் எழுதப்படல் வேண்டும்.

இரண்டாவது: தமிழ் கற்ற அறிஞர்களை ஆராய்ச்சி முறையிற் பயிற்றி ஊர்கடோறும் விடுத்துப், பொதுமக்கட்கு மேற்கூறிய பொருள்களை விளங்க எடுத்துச் சொல்லி, அவர்கள் நல்லறிவு பெறுமாறு செய்வித்தல்வேண்டும். ஊனுணவு ஒழித்தவர், ஊனுணவு ஒழியாதவர் என்னும் இருபிரிவினரன்றி, வேறு எவ்வகைச் சாதிப் பிரிவுஞ், சமயப்பிரிவும் இல்லாமல் ஒழித்தல் வேண்டும்.

பிறப்பு இறப்பு இல்லா எல்லாம் வல்ல ஒரு முழுமுதற் கடவுளையே எல்லாரும் வணங்கும்படி செய்வித்தல் வேண்டும். பிறந்து இறந்த உயிர்களைத் தெய்வங்களாக வணங்குஞ் சிறு தேவதை வணக்கத்தையும், அவைகளுக்கு இடும் உயிர்ப்பலியையும் அறவே ஒழித்தல் வேண்டும்.

மூன்றாவது: மேற்குறித்த நன்முயற்சிகளைச் செய்து, அவற்றால் விளையும் நலங்களை நிலைபெறுத்துதற்கு ஏராளமான பொருள் வேண்டியிருக்குமாதலால், வீணே கோடி கோடியான பொருட்டிரளை வைத்துக்கொண்டு அவற்றை மேற் குறித்த நன்முயற்சிகளுக்குப் பயன் படுத்தாமல் இறுமாந்து கிடக்குஞ் சிற்றரசர்களும், மடத்தலைவர்களும் அப் பெரும் பொருட்டிரளில் ஒரு சிறு பகுதியை மட்டுந் தமக்கு எடுத்துக்கொண்டு, மற்றைப் பெரும்பகுதியைக் குறிப்பிட்ட முயற்சிகளுக்குக் கொடுத்து விடுமாறு, எந்தெந்த வகையில் முயலல் வேண்டுமோ அந்தந்த வகையாலெல்லாங் கடைப்பிடியாய் நின்று முயலல் வேண்டும். முயன்று பெற்ற பொருளை இந் நன் முயற்சிகளுக்குப் பயன் படுத்துவதிலும் மிக விழிப்பாயிருத்தல் வேண்டும்.

இங்ஙனம் ஒழுங்கான முறையில், நம்நாட்டவர்கட்கு உண்மையாகவே நலந்தரு முறையில், தலைவர்களாகவருவோர் தமது அரும்பெரு முயற்சியைப் பயன்படுத்துவாராகவென்று எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

போக்கிரித்தனமான புகார்.

தென்னாட்டுக்கலா வல்லவருள் தலை சிறந்து விளங்கும் சுவாமி வேதாசலமென்னும் மறைமலை அடிகள் அவர்களை தமிழ் உலகமும், சிறப்பாக சைவ உலகமும் நன்கறிந்திருக்கும் என்பதில் யாருக்கும் ஐயமிருக்காது.

சுவாமிகள் ஒரு பெறும் ஆஸ்த்திகர் என்பதோடு தமிழ்பாஷையில் இணையில்லாத பண்டிதர் என்பதும் தமிழ் பாஷையுடையவும், தமிழ்பாஷையின் வளர்ச்சியினுடையவும் எதிரிகளும் அறிந்ததேயாகும். அதோடு மாத்திரமல்லாமல் சுவாமிகள் சுயமரியாதைக் கொள்கைக்கு மாறானவர் என்பதோடு சுயமரியாதைக்கொள்கையானது, "மக்களுக்குக்கேடு விளைவிக்கத்தக்கது" என்கின்ற அபிப்பிராயமும் உடையவர்.

அன்றியும் சுவாமிகளின் தோளானது ஒரு முப்பிரிநூலைச் சுமந்து இருக்குமானால் இத்தென்னாட்டுப் பார்ப்பனர்கள் இன்று அவரை அகஸ்தியராக்கியிருப்பார்கள். ஏனெனில் அவரினின்று எத்தனையோ மடங்கு தாழ்ந்த ஞானமுடையவர்கள் பருத்திநூலை தாங்கிய "பண்பி"னாலேயே மகாமஹோபாத்தியாயரானதோடு மாத்திரமல்லாமல் தமிழ் "கடவுளான சுப்பிரமணியனுக்கு" ஒப்பாகப்பேசியும், எழுதியும் விளம்பரப்படுத்தி இருக்கிறார்கள்.

உதாரணமாக இன்று தமிழ் பாஷையின் பேரால் பெருநிதி திரட்டிக் கொண்டவரும்-பெரும் புகழ் அமைத்துக்கொண்டவரும், தமிழுக்குத் தாயகமெனவும் விளம்பரப்படுத்தப்பட்டு மகாமஹோபாத்தியாயர் எனப்பட்டம் சூட்டப்பெற்றவருமான தோழர் உ. வே. சுவாமிநாதய்யர் அவர்களை ஒரு தட்டில் வைத்து சுவாமி வேதாச்சலமவர்களை மற்றொரு தட்டில் வைத்து நிறுக்கப்படுமானால், எத்தனை சுவாமிநாதய்யர்களைப் போட்டால் சுவாமி வேதாச்சலம் வீற்றிருக்கும் தட்டை அசைக்கமுடியும்? என்பதை, ஒவ்வொரு நேர்மையான மகனும் தன் தன் நெஞ்சில் கையை வைத்து உண்மை உணர்வோடு பார்ப்பாரானால் நன்றாய் விளங்கிவிடும்.

தோழர் சுவாமிநாதய்யர் அவர்கள் வெகுகாலமாக பல தமிழ்ப் பெரியாரும், தமிழ் அபிமானிகளும் சேர்த்து வைத்திருந்த தமிழ் இலக்கியச் சுவடிகளையும், அவற்றிற்கு அவ்வப்போது பல அறிஞர்களும், பண்டிதர்களும் குறித்து வைத்திருந்த உரைகளையும்,

கருத்துக்களையும், கைப்பற்றி அவற்றில் பார்ப்பனரல்லாதாருக்கு அனுகூலமாகவும், பார்ப்பனர்களுக்கு பிரதிகூலமாகவும் இருந்த கூற்றுகளை மாற்றியமைத்து ஆரிய நூல்கள் போலவே எல்லாவற்றையும் பார்ப்பனீயத்துக்கு அரணாக்கிப் பதிப்பித்துப் பயன் பெற்றார் என்பதல்லாமல் தன் சொந்த மனோதர்மத்தில் யாவருக்கும் பயன்படும்படியான முறையில் ஏதாவது புத்தகமோ, வியாசமோ எழுதி இருக்கின்றாரா என்று பார்த்தால் நாம் கூறுவதில் உண்மை இருக்கின்றதா ? இல்லையா? என்பது செவ்வனே விளங்கும்.

சுவாமி வேதாச்சலமவர்கள் அவ்வாறின்றி எத்தனையோ நூல்கள் தாமாகவே இயற்றியதுடன் தமதாராய்ச்சித்திறத்தால் எவ்வளவோ அறிய விஷயங்கள் கண்டுபிடித்து சகல மக்களுக்கும் பயன்படத்தக்க பல அறிய கருத்துக்களை வெளியிட்டு வந்திருக்கிறார் என்பதை தமிழின் "கூற்றுவா" களும் உணருவார்கள்.

இப்படிப்பட்ட சுவாமி வேதாச்சலமவர்களைப் பற்றி நமது பாப்பனர்கள் விஷமப்பிரசாரம் செய்ய இப்போது ஏன் புறப்பட்டார்கள் என்பது சிலருக்கு அதிசயமாகத் தோன்றலாம்; ஆனால் நமக்கு அது அதிசயமாய்த் தோன்றவில்லை. ஏனெனில் இதற்கு முன்னாலேயே செய்திருக்க வேண்டியவர்கள் இத்தனை நாள் எப்படி சுவாமி வேதாச்சலத்தைப்பற்றி விஷமப்பிரசாரம் செய்யாதிருந்தார்கள் என்பது தான் ஒருவருக்கு ஆச்சரியமாகத்தோன்றலாம்.

ஆனால் இரண்டைப்பற்றியும் ஆச்சரியப்படவேண்டியதில்லை என்பதே நமதபிப்பிராயம். ஏனெனில் மறைமலையடிகளைபற்றி நம் பார்ப்பனர்கள் முன்னும் விஷமப்பிரசாரம் செய்துதான் வந்திருக்கிறார்கள். இப்போதும் செய்துதான் வருகிறார்கள், இனியும் செய்யத்தான் போகிறார்கள்.

எப்பொழுது அவர் சுவாமி வேதாச்சலமானாரோ அப்பொழுது முதலும், எப்பொழுது சுவாமி வேதாச்சலமவர்கள் சுவாமி வேதாச்சலமென்னும் மறைமலை அடிகள் என்பதாக, ஆனாரோ அப்பொழுது முதல் அதைவிட அதிகமாகவும் அவரைப்பற்றி விஷமப்பிரசாரம் செய்து கொண்டே தான் இருக்கிறார்கள்.

நமது பார்ப்பனர்களுக்கு ஒருவர் விரோதியாகவேண்டுமானால் அவருக்கு தமிழ் பாஷையில் இணையில்லாப் பற்றும், இணையில்லா ஞானமும் இருந்து வருவது ஒன்றே போதுமானதாகும்.

அப்படிக்கிருக்க நமது சுவாமி வேதாசலமவர்களை பார்ப்பனர் எப்படி வெறுக்காமலும், பழித்துக் கூறாமலும் இருக்க முடியும்.

இப்பொழுது சுவாமி வேதாசலம் அவர்களைப்பற்றி பார்ப்பனக் கூழாத்திலும் அவர்களது பத்திரிகைகளிலும் நடந்து வரும் பிரசாரத்தை நாம் விஷமப்பிரசாரம் என்று மாத்திரம் சொல்வதல்லாமல் அதை ஒரு போக்கிரித்தனமான புகார் பிரசாரம் என்றுகூட ஏன் சொல்லவேண்டியிருக்கிறது?

ஏனெனில், சுவாமிகள் எழுதிய அறிவுரைக்கொத்து என்னும் ஒரு சிறிய நூலில் "தமிழ் நாட்டவரும் மேல் நாட்டவரும்' என்ற தலைப்பின் கீழ் எழுதியுள்ள ஒரு கட்டுரையைக் குறிப்பாக கொண்டு, அது தேச நலனுக்கும மக்கள் நலனுக்தும் கேடானது என்பதாகச் சொல்லி அவரது பெயருக்கு இழுக்கு உண்டாகும்படியாக பிரசாரம் செய்கின்றார்கள்.

இரண்டுவார காலமாக இந்தப்பிரசாரம் பத்திரிகைகளில் அடிபடுவதோடு பல பார்ப்பனப் பத்திரிகைகள் இவ்விஷயத்திற்கு ஆக தலையங்கமும் உபதலையங்கமும் எழுதுவதோடு வழக்கம்போல் ஆங்காங்கு கூட்டம்போட்டு கண்டித்ததாக சூட்சிச் செய்திகளும் பிரசுரமாகின்றன. அவற்றுள் ஒருபத்திரிகை "விஷமத்தனமான புத்தகம்" என்கின்ற தலைப்பிலும், மற்றொரு பத்திரிகை மறைமலை அடிகள் சுயமரியாதைக் கட்சியில் சேர்ந்து விட்டார் என்பது ஆகவும், மற்றும் பல தங்களுக்கு தோன்றிய விதமாகவும் எழுதி "அப்புத்தகத்தை பள்ளிகளில் பாடமாக வைத்தது பிசகு" என்றும் "அதை எடுத்துவிடவேண்டும்" எனறும் எழுதிபிருக்கின்றன.

இந்தக்கூற்றுகளைத்தான் வேண்டுமென்றே செய்யப்படும் போக்கிரித்தனமான விஷமக் கூற்று என்று சொல்லிதீரவேண்டிய நிலையில் இருக்கிறோம்.

ஏனெனில், சுவாமி வேதாசலம் அவர்களால் எழுதப்பட்ட அறிவுரைக் கொத்து என்னும் புத்தகத்தில் "தமிழ் மக்களை இழிவுபடுத்தியும் அடிமைப்புத்தி ஏற்படும்படியும், துவேஷம் ஏற்படும்படியும் கட்டுரை எழுதி தமிழ் மக்களை கேவலப்படுத்தி" இருப்பதாக எழுதி ஓலமிடுகின்றன. அதில் என்ன எழுதப்பட்டிருக்கிறது, எதற்காக இப்படி ஓலமிட வேண்டியதாயிற்று என்பதற்கு உதாரணம் காட்டும்போது ஒரு பத்திரிகையானது

1. "தமிழருக்குச் சுய அறிவு கிடையாது"
2. "ஒற்றுமைக் குணம் கிடையாது"
3. "கல்வியில் விருப்பம் கிடையாது"
4. "மேல் நாட்டார் இங்கு வருமுன் உயர்ந்த பள்ளிக்கூடம் கிடையாது"
5. தமிழர்கள் கைக்கூலி (லஞ்சம்) கொடுக்கிறார்கள்"

6. "உத்தியோகம் பெற எதையும் செய்கிறார்கள்" அப்படி என்றால் என்ன? என்றும் கேட்கின்றது

7. "பணம் சேர்ப்பதற்கே கல்வி கற்கிறார்கள்"

என்ற வாக்கியங்களை எடுத்துக்காட்டி "இவை அடிமைப்புத்தியையும், துவேஷத்தையும் விளைவிக்கு" மென்று சொல்லி "இப்புத்தகத்தை பள்ளிப்பிள்ளைகள் படிக்கும்படியாக அனுமதிக்கக் கூடாது" என்று எழுதி இருக்கின்றது.

இவற்றிற்கு சமாதானம் கூறியே இப்பத்திரிகைகளின் போக்கை போக்கிரித்தனமான புகார் கூறும் குணமுடையவை என்று எடுத்துக் கூற ஆசைப்படுகின்றோம்.

1. "தமிழருக்கு சுய அறிவு கிடையாது"

தமிழருக்கு சுய அறிவு கிடையாது என்று எழுதினதில் ஏதாவது குற்றமிருக்கிறதா என்று கேட்கின்றோம்.

கோடிக்கணக்கான தமிழ்நாட்டுத் தமிழ் மக்களில் நூற்றுக்கு 10 அல்லது 5 வீதமான மக்களுக்கு ஆவது சுய புத்திஇருக்கின்றது என்று யாராவது கூற முடியுமா என்று பந்தயம் கட்டி கேட்கின்றோம். ஒருவர் இருவருக்கு சுய புத்திஇருப்பதாக வைத்துக்கொண்டாலும் அது அச் சமூகம் முழுமைக்கும் இருப்பதாகக் கொள்ளக்கூடியதாகி விடுமா என்று கேட்கின்றோம்.

தமிழனுக்குப் புத்தியிருந்தால் அவன் "மோக்ஷ" மடைய மலத்தையும் மூத்திரத்தையும் சாப்பிடுவானா?

தமிழனுக்குப் புத்தி யிருந்தால் அவன் தன் மகளைச் சாமி பேரால் பொட்டுக்கட்டி பார்ப்பனனுக்கு மாத்திரம் குறைந்த விகிதத்துக்கு கலவிக்கு விடுவானா?

தமிழனுக்குப் புத்தியிருந்தால் பார்ப்பான் காலில் பவுன் பவுனாக நாணையம் கொட்டிக்கொடுத்து அவன் காலைக்கழுவின தண்ணீரைக் குடிப்பானா?

தமிழனுக்குப் புத்தியிருந்தால் காப்பிக்கடையில் எச்சைக் கிண்ணம் கழுவும் பார்ப்பானையும் கூட்டிக்கொடுக்கும் பார்ப்பானையும் சுவாமி என்று கூப்பிடுவானா?

தமிழனுக்குப் புத்தி யிருந்தால் கடுகளவாவது சுய புத்தியிருந்தால் அரிசி பருப்பு காய் கரியை பாப்பானுக்குப் படைத்து விழுந்து கும்பிட்டு "இவற்றை இறந்துபோன என்பெற்றோர்களுக்குக் கொண்டுபோய்சேர்த்து அவர்களை மோக்ஷத்திற்கு அனுப்புங்கள்" என்று சொல்லுவானா?

தமிழனுக்குப் புத்தி யிருந்தால் தன்னை சூத்திரன் என்றும், தீண்டப்படாதவன் என்றும் அழைக்கிற—கருதுகிற பார்ப்பானை,

சகோதரன் என்றும் ஒரு தாய் வயிற்றுப்பிள்ளை என்றும் ஒரு தேச மக்கள் என்றும் கருதி அவனோடு நட்புக் கொள்வானா?

தமிழனுக்குப் புத்தி யிருந்தால் தன்னை தொட்டால் பாவம்: தன் பாஷையைக் கேட்டால் தோஷம்: தன்னை கோவிலுக்குள் கடவுள் இருக்கும் அறையில் அனுமதித்தால் தோஷம் என்று சொல்லும் பார்ப்பானுடன் கூடிக்கொண்டு தமிழ் மக்கள் கழகத்தைக் கெடுக்கவும் அவர்கள் முன்னேற்றத்தைத் தடுக்கவுமான தொண்டைச் செய்து ஒற்றுமைத்து பார்ப்பானிடம் பிச்சை வாங்கிப் பிழைப்பானா?

தமிழ் மக்களுக்குப் புத்தி இருந்தால கெஜம் 3 அணாவுக்கு விற்கும் அருமையான நயமான துணியை வாங்கிக் கட்டுவதைவிட்டு விட்டு, செஜம் 6, 7 அணாப்போட்டு ஆபாசததுணியை தேசாபிமானம் என்னும் பேரால் வாங்கிக் கட்டிக்கொண்டுத்திரிவானா?

மோக்ஷத்திற்குப்போக மல மூத்திரங்களை உண்பதற்கும் சுயராஜ்ய பெற கோணி ரட்டைக்கட்டுவதற்கும் என்ன வித்தியாசம் என்பதைக்கூட உணராமல் இருப்பானா? என்று கேட்பதோடு தமிழ்மக்களுக்கு பெரும்பான்மையானவர்களுக்குப் புத்தியும் இல்லை, சுயமரியாதையும் இல்லை என்பதற்கு இன்னும் இது போன்ற எத்தனை ஆயிரம் எடுத்து காட்டுகள் வேண்டுமானாலும் இருக்கின்றது என்று கூறத் தயாராய் இருக்கிறோம்.

2. "ஒற்றுமைக் குணம் கிடையாது"

தமிழ் மக்களுக்குள் ஒற்றுமைக் குணம் கிடையாது என்பது பொய்யா என்று கேட்கின்றோம்.

தமிழ் மக்கள் தாங்கள் பார்ப்பனரால் 1008ஜாதியாராகப் பிரிக்கப்பட்டு பார்ப்பனர்களின் முன்னோர்களால் செய்யப்பட்ட புராண சரித்திர ஆதாரத்தோடு ஒவ்வொருவரும் கீழ்மேல் நிலைகற்பித்துக் கொண்டு ஒருவருக்கொருவர் உண்பனை, தின்பனை, கொடுப்பனை, கொள்வனை, கூடி உறவாடுவன முதலிய ஐக்கிய பாவ மற்றவைகளைச் செய்துகொண்டு, ஒருவன் உண்பதை ஒருவன் பார்க்கக்கூடகூடாது என்கின்ற நியதி ஏற்படுத்தி, ஒவ்வொருவன் தொழிலையும் ஜாதியையும் இழிவாக்கி, ஒருவனிடம் ஒருவனுக்கு சரித்திரபூர்வமாகவே துவேஷமும் வெறுப்பும் உண்டாகும்படி செய்து, மக்களைப் பிரித்துவைத்து, ஒருசிறு சோம்பேறிக் கூட்டத்தார் நோகாமல் பாடுபடாமல் வயிறுவளர்க்க வேண்டி சதாகாலமும் எல்லாத் தமிழ் மக்களும் ஒருவரோடு ஒருவர் விருப்பற்று துவேஷத்துடன் இருக்கும்படி செய்து இருப்பது பொய்யென்று யாராவது சொல்ல முடியுமா என்று பந்தயம் கட்டிகேட்க்கின்றோம்.

3. "கல்வியில் விருப்பம் கிடையாது"

தமிழ் மக்களுக்குக் கல்வியில் விருப்பம் கிடையாது என்பது முழுதும் உண்மையற்றது என்று யாராவது சொல்ல முடியுமா என்று கேட்க்கின்றோம்.

இந்நாட்டுத் தமிழ் மக்களில் எத்தனை பேர் கல்விகற்று இருக்கிறார்கள்? ஆரிய மக்களில் எத்தனை பேர் கல்விகற்று இருக்கிறார்கள்? என்கின்ற கணக்கைப்பார்த்தால் சுவாமிகளின் வாக்கு எத்தனை பரிசுத்தமானது என்பது விளங்கும். இன்று பள்ளி உபாத்தியாயர்கள் பெரிதும் பார்ப்பனர்களானதினாலும் பார்ப்பனர்களே தமிழ் மக்கள் பலருக்குக் குல குருவாய் இருப்பதாலும் இவ்விரு கூட்டத்தாரும் பார்ப்பனரல்லாத மக்களைப்பார்த்து "உங்களுக்கு எதற்கு படிப்பு நீங்கள் மாடு கன்று மேய்த்து ஏர் உழுபவர்கள்தானே, அன்றியும் உங்களுக்கு படிப்பு வருமா, உங்கள் நாக்குத் திரும்புமா" என்றெல்லாம் கேட்டு அவர்களது தன்னம்பிக்கையைக் கெடுத்து, உச்சாஹத்தைத் தடுத்து, மனச்சோர்வை ஏற்படுத்தி மாடுமேய்ப்பதில் வண்டி ஓட்டுவதில், மோகத்தை உண்டாக்கி தமிழ் மக்களுக்கு கல்வி ஆசையில்லாமலும் கல்வி கற்கமுடியாமலும் செய்ததை எந்த ஒரு யோக்கியமான பார்ப்பனராவது மறுக்க முடியுமா என்று கேட்கின்றோம்.

மற்றும் பார்ப்பனரல்லாத மக்கள் சூத்திரராகவும் கீழ்ஜாதியாராகவும் கற்பிக்கப்பட்டு விட்டதாலும், பார்ப்பனரல்லாதாருக்கு கல்வி கற்பிக்கப்படாது என்றும், கல்வி கற்பதும் கூடாதென்றும், மனுதர்ம நூல் முதலியவைகளில் இருப்பதாலும், பார்ப்பனரல்லாதார் கல்வி கற்கவும் ஆசைப்படவும் முடியாமல் போனதோடு, மற்றும் பார்ப்பனரல்லாத மக்கள் பெரிதும் 5 வயதுமுதலே பாடுபட்டால்தான் அவர்களது குடும்பம் வாழமுடியும் என்கின்ற மாதிரியில் வாழ்க்கை ஏற்படுத்தப்பட்டு விட்டதாலும், தமிழ் மக்களுக்கு கல்வி ஏற்படவும் ஆசை உண்டாகவும் இடமில்லாமல் போய்விட்டது என்பது பொய்யா மெய்யா என்று கேள்க்கின்றோம்.

சமஸ்கிருத நீதி நூல் ஒன்றில் "குளித்த குதிரை மதம்பிடித்த யானை, படித்த சூத்திரன் இம்மூன்றையும் கிட்டசேர்க்கலாகாது" என்று ரிஷிகள் வாக்கே இருக்க, இந்நிலையில் எந்தப்பார்ப்பனரல்லாதாரையாவது படிக்க பார்ப்பனர்கள் வசதி செய்து கொடுத்திருப்பார்களா என்றும் கேட்கின்றோம்.

4. "மேல் நாட்டார் இங்கு வருமுன்........"

மேல் நாட்டார் இங்கு வருமுன் உயர்ந்த பள்ளிக்கூடம் கிடையாது என்பது.

இப்படி எழுதின அப்பத்திரிகையாவது ஆங்கிலேயர் வருவதற்குமுன்னோ, அல்லது ஆரிய அரசர்கள் காலத்திலோ ஏதாவது பள்ளிக்கூடங்கள் இருந்ததாக இரண்டு ஒரு பள்ளிக்கூடத்தின் பெயர்களையாவது குறிப்பிட்டதா அல்லது இனியாவது குறிப்பிட முடியுமா என்று கேள்க்கின்றோம். இதைப்பற்றி மிஸ் மேயோ அம்மையரே எழுதி இருக்கிறார்கள். பார்ப்பனரல்லாத மக்கள் படிக்கக்கூடாது என்றும், படித்தால் நாக்கை அறுக்கவும், கேட்டால் கூட காதில் ஈயத்தைக் காச்சி ஊற்றவும் ஏற்படுத்தியிருக்கும் சாஸ்திர தர்மங்களை யாரும் அறியார்கள் என்று நினைத்துக் கொண்டு இப்பத்திரிகை மனப்பால் குடிக்கின்றதா என்று கேட்கின்றோம்.

முதலாவது ஆங்கிலேயருக்கு முன் புஸ்தகம் காகிதம், சிலேட்டு ஏதாவது இருந்தது என்று யாராவது சொல்லமுடியுமா? பொது மக்கள் படிக்கும் விஷயந்தான் ஏதாவது இருந்ததா?

குறள் தொல்காப்பியம் என்பதுபோல் ஏதோ சில நூல்கள் இருக்கின்றதே அது எப்படி வந்தது என்று சொல்லுகின்றது அப்பத்திரிகை.

இது மனதறிந்த அக்கிரமமான கேள்வியாகும். ஏனெனில், தொல்காப்பியம் குறள் படித்தவர்கள் லட்சத்தில் ஒருவர் இருப்பார்கள். அதுவும பள்ளிக்கூடத்தில் படிக்காமல் யாரோ ஒருவர் மூலம் ஒருவர் பாட்டாகக்கேட்டு நெட்டுருப்பண்ணி வைத்திருந்தால் அவர்கள் பெரிய வித்வான்களாக ஆகிவிடுவார்கள். அவ்வளவு தான்படிப்பே ஒழிய பள்ளிக்கூடம் வைத்து எல்லாப் பிள்ளைகளும் அங்குபோய் எழுதுவது, படிப்பது என்பவைகள் தாராளமாய் இருந்ததாக எந்த ஆதாரத்திலும் எவராலும் சொல்லப்படவே இல்லை. அதனாலேயே தான் பார்ப்பனர்கள் தவிர மற்றவர்கள் தாராளமாய் 10000-க்கு ஒருவர் இருவர் படித்திருந்ததாகவும் காணப்படவில்லை.

5. "தமிழர்கள் கைக்கூலி கொடுக்கிறார்கள்"

தமிழர்கள் கைக்கூலி கொடுக்கிறார்கள் என்பது பார்ப்பனர்கள் அதிகாரம் வகிக்க ஆரம்பித்தது முதற்கொண்டே இந்நாட்டில் லஞ்சம் எவ்வளவு தாராளமாகக கடையில் கத்திரிக்காய் பீடி சிகரெட் வாங்குவது போல், எவ்வளவு மலிவாக இருந்து வருகின்றது என்பதை நாம் எடுத்துச்சொல்லவும் வேண்டுமா?

பார்ப்பனர்களே அதிகாரிகளானதாலும் பார்ப்பனர்களே வக்கீல்கள் குமஸ்தாக்கள ஆனதினாலும் லஞ்சம் எவ்வளவானாலும், பெரிதும் எப்படியாவது பார்ப்பனர்களுக்கே போய்ச்சேரக்கூடியதாய் இருந்ததாலும் லஞ்சத்தைத்தாராளப்படுத்தவும் செல்வாக்குப்

படுத்தவும் அவசியம் ஏற்பட்டதோடு அது மக்களைக்கவர்ந்தும் விட்டது.

லஞ்ச விஷயத்தைதப்பற்றி சுவாமிகள் மாத்திரமல்ல. நாம் மாத்திரமல்ல, அனேக பெரியார்கள், அதிகாரிகள், ஐரோப்பிய உத்தியோகஸ்தர்கள் என்பவர்களெல்லாம் வண்டி வண்டியாய் சொல்லி இருக்கிறார்கள்.

மற்றும் ஹைகோர்ட்டு முதல் அரசாங்கதலைமை ஸ்தாபனங்கள் முதல் ரயில்வே, காபீஸ்டர் இலாக்கா, பஞ்சாயத்து கோர்ட், கிராமக்கோர்ட்டு உள்பட அவற்றிற்குள் நுழைகின்றவர்கள் ஒவ்வொருவரும் 100-க்கு 90-க்கு மேப்பட்டவர்கள் லஞ்சம் கொடுத்து காரியத்தைச்சாதிக்கும் வக்கீல்களையே தேடிப்பிடிக்கிறார்கள் என்பதும் அதற்குண்டானசகல வழிகளையும், வக்கீல்களும் அவர்களது சிப்பந்திகளும் கற்றுக்கொடுத்து அவர்களை நடத்துகிறார்கள் என்பதும் ஒரு சிறிதாவது மறுக்கக்கூடியதா என்று கேட்கின்றோம்.

6. "உத்தியோகம் செய்ய எதையும் செய்கிறார்கள்"

உத்தியோகம் பெற எதையும் செய்கிறார்கள் என்பதை உண்மை அல்லவென்று சொல்ல முடியுமா என்று கேட்கின்றோம்.

இந்த விஷயம் வெளிப்படையான இரகசியமாகும்.

கொஞ்ச காலத்துக்கு முன் திருச்சியில் ஒரு சின்ன அதிகாரி ஒரு பெரிய அதிகாரி ஒருவருக்கு தான் மனைவியை அனுப்பியதில் அப்பெரிய அதிகாரி அப் பெண்ணின் மார்பின் முனையைக் கடித்துவிட்ட சேதியாரும் அறியாததா?

மற்றும் கும்பகோணத்தில் ஒரு உயர்தர அதிகாரிக்கு ஒரு கீழத்தர அதிகாரி தன் சகோதரியையனுப்பி அந்தம்மாள் அவரோடு கூடவே இருந்துகொண்டு வரமாட்டேன் என்று சொன்னதான சேதியும் யாரும் அறியாததா. மற்றும் சில ஜில்லா பெரிய அதிகாரிகள் செல்லுமிடங்களுக்கெல்லாம் ஒரு குறிப்பிட்ட சின்ன அதிகாரியை தன்னுடைய சாமான்கள் போலவே கூட அழைத்துக்கொண்டு போவது என்பதும் அதனால் அந்த சின்னஅதிகாரி தனது யோக்கியதைக்கு மீறின பதவிகள் பெறுவதும் கோவைஜில்லாவில் பல தடவை நடந்த சம்பவங்களாகும்.

மற்றும் வேறு எத்தனையோ விதங்களில் இம்மாதிரியான பிரஸ்தாபங்கள் சர்வ சாதாரணமாகப் பலவிடங்களிலும் வழங்கி வருவதானது யாரும் அறியாதது என்று சொல்லிவிடமுடியுமா?

7. "பணம் சேர்க்கவே கல்வி கற்கிறார்கள்"

பணம் சேர்ப்பதற்கே கல்வி கற்கின்றார்கள் என்பது இதைக் கூட தப்பு என்று சொல்ல வந்ததானது வேண்டுமென்றே செய்யப் படும் போக்கிரித்தனமான புகார் என்பதற்கு வெளிப்படையான உதாரணமாகும்.

இன்றைய கல்வியானது, அறிவுக்குப் பயன்படாததென்றும் வயிற்றுப்பிழைப்பிற்கு அதுவும் அடிமைப்பிழைப்பு பிழைத்து வயிறு பிழைப்பதற்கு என்றும் சொல்லாதவர்கள் யாருமேஇல்லை. அப்படிப்பட்டவர்களும், அவர்களது பிள்ளைகுட்டிகளும் மறுபடியும் அக்கல்வியையே கற்கின்றார்கள் என்றால் வேறு எதற்காக அவர்கள் கற்கிறார்கள் என்பதை அப்பத்திரிகையாவது கூறியிருக்க வேண்டாமா?

இன்று கல்விகற்றவர்கள் என்கின்ற கூட்டத்தில் சேர்ந்த எவராவது அக் கல்வியை பணம் சம்பாதிப்பதைவிட வேறு காரியத்துக்கு உபயோகப்படுத்துகிறார்களா? அல்லது கல்வி கற்ற B. A., M. A., டாக்டர்கள் என்பவர்களுக்காவது அறிவு ஏற்பட்டிருக்கிறது என்றுசொல்லமுடியுமா? எத்தனை டாக்டர்கள் தூரமான தன் பெண்ணை தெருவில் தள்ளி கதவைச்சாத்துகிறதைப் பார்க்கிறோம்.

எத்தனை பூகோள சாஸ்திரிகள் கிரகணத்துக்கு சமுத்திரக்கரையில் மூக்கைப் பிடித்து உட்கார்ந்திருப்பதைப் பார்க்கிறோம்.

எத்தனை பிரபல நியாயவாதிகள், தர்க்கவாதிகள் தாங்கள் மோட்சம் போக கல்லைக் கும்பிடுவதைப் பார்க்கின்றோம். இவர்கள் எல்லாம் புத்திக்கு ஆக படித்தவர்களா பணம் சம்பாதிக்கப் படித்தவர்களா என்று கேட்கின்றோம்.

உரலை நினைத்து அவலை இடிப்பது போல் பார்ப்பனப் பத்திரிகைகள் வேறு ஏதோ காரணம் வைத்துக்கொண்டு இந்தப் போக்கிரித்தனமான வேலையில் பிரவேசித்து இருக்கின்றன.

அவர்களது சூட்சித் திரமும், விஷமத் திரமும் இப்புத்தகத்தை படிக்கக்கூடாது என்று செய்வதில் வெற்றி அளித்துவிடலாம்.

அல்லது சில வாக்கியங்களை எடுத்து விட வேண்டுமென்று செய்தாலும் செய்து விடலாம்.

பிறகு பாட புத்தக விஷயத்தில் எப்படிப்பட்ட கொள்கை அனுசரிக்க வேண்டும் என்பதில் என்ன செய்யவேண்டும் என்பது நமக்குத் தெரியும்.

மதமின்றி மக்கள் வாழமுடியாதா?

[சி. வெ. ரா.]

(ஜோசப் மெக்காப் எழுதியதை அனுசரித்து எழுதப்பட்டது.)

மக்கள் வாழ்க்கை நாகரீகமாய் நடத்தப்பட மதம் வேண்டுமென்பது மதக்காரர்களுடைய வாதமாகும்.

இப்படிப்பட்ட வாதமும் தங்கள் தங்கள் மதம்தான் மனித சமூக நாகரீக வாழ்க்கைக்கு ஏற்றது என்பது ஒவ்வொரு மதக்காரர்களின் பிடிவாதமுமாகும்.

மதமில்லாமல் உலகில் எவ்வளவோ ஜீவகோடிகளும், பல மக்களும் வாழ்க்கை நடத்தவில்லையா என்று கேட்போமேயானால் அதற்கு பதில் சாதாரண அசேதன வாழ்க்கை வாழலாமே ஒழிய நாகரீகமான வாழ்க்கை நடத்தமுடியாது என்றும், அதற்காகத்தான் மதமில்லாவிட்டால் மக்கள் நாகரீக வாழ்க்கை நடத்தமுடியாதென்று சொல்லப்படுவதாகவும் சொல்லுவார்கள்.

தமிழ் மக்களும், தமிழ் பண்டிதர்களும் தமிழ் ரத்தமோடும் தமிழ் அபிமானிகளும் இத்தகைய சீர்கேட்டை நிவர்த்தித்து சரியான நடைமுறையில் நடத்த அமைக்கப்பட்ட அதிகார வர்க்கங்களும் அவைகளை நிர்வகிக்கும் மந்திரி வர்க்கங்களும் பின்னால் என்ன செய்வார்கள், அல்லது அவர்கள் என்ன கதி அடைவார்கள் என்பதைப் பார்க்கவே காத்திருக்கிறோம்.

இதற்காக ஆங்காங்குள்ள தமிழ் மக்கள் கிளர்ச்சி செய்து இதன் காரணமாகவாவது பாட புத்தக அமைப்புக்கு ஒரு நல்ல காலம் வரட்டும் என்று ஆசைப்படுகின்றோம்.

பார்ப்பனர்களில் ஒருவருக்கு ஒரு விஷபம் பட்டால் அது கம்பியில்லாத் தந்தி போல் ஒவ்வொரு பார்ப்பனர் உள்ளத்திலும் படிகின்றது.

பார்ப்பனரல்லாதாரோ சிலர் இதன்மூலம் வயிறு கழுவ பார்ப்பனருக்கு அடிமையாகிறார்கள். வெட்கம்! வெட்கம்!! எதற்கென்று அழுவது!!!

"குடி அரசு"

அதற்காகவேண்டிய மதவாதிகள் மதத்தைப் பற்றி பிரசாரங்களும், விளம்பரங்களும் செய்துவருகிறார்கள். இப்படிப்பட்ட விளம்பரங்களும், பிரசாரங்களும் புராணங்களாலும், படங்களாலும், கதைகளாலும், நடிப்புகளாலும், கோவில்களாலும் மற்றும் பல சாதனங்களாலும் செய்து வருகிறார்கள்.

இவ்வளோவோடு நிற்காமல், கடவுளற்ற, மதமற்ற உலகத்தில் மக்கள் பல கொடுமைகளையும், தீமைகளையும், ஹிம்சைகளையும் அடைவதுபோலவும் அசுர ஆட்சியே நடைபெருவதாகவும் கட்டுகள் கட்டி மக்களைப் பயமுறுத்துகிறார்கள்.

மேலும், கொள்ளை நோய்களும், விஷ நோய்களும் துஷ்ட தேவதைகளின் கோபத்தின் பலன் என்றும், வால் நட்சத்திரத்தின் வாயிலிருந்து கக்கப்படும் தீப்பொரியின் விளைவென்றும் பேசி மக்களை ஒருவித பயத்துக்குள்ளாக்குகிறார்கள்.

காந்தியாரும் இப்படித்தான். அதாவது, பூகம்பத்தால் விளையும் கேடுகளும், வெள்ளத்தாலும் நெருப்பாலும் ஏற்படும் கொடுமைகளும் கடவுள் கோபத்தால் ஏற்பட்ட விளைவின் பயனென்றும் சொல்லி மக்களை மிரட்டுகிறார்.

மனிதர்கள் நடந்துகொள்ளவேண்டிய ஒழுக்கச் சட்டம் என்பதெல்லாம் அந்தந்த சமூக நிலை அனுசரித்து ஏற்படுத்தப்பட வேண்டியதேயல்லாமல், மனிதர்கள் மேல் உலகத்துக்குப்போவதற்குத் தகுந்தபடியும், அங்கு சென்றபின் நடக்கவேண்டிய காரியங்களுக்குத் தக்கபடியும் அமைக்கப்படவேண்டியதேயில்லை.

மதமில்லாவிட்டால், மக்கள் கோவிலுக்குப் போகமாட்டார்களே என்றோ, மக்கள் கோவிலுக்குப் போகாவிட்டால் மக்கள் ஒழுக்கமாக நடந்துகொள்ளமாட்டார்களோ என்றோ யாரும் பயப்படவேண்டியதில்லை.

உதாரணம் வேண்டுமானால், கோவிலுக்குப் போவதை நிருத்திவிட்டவர்களிடமிருந்தே அவர்களது விகிதாச்சாரத்துக்குக் குறைவில்லாத அளவு குற்றங்கள் குறைந்துகொண்டு வந்திருப்பதற்கு அநேக ஆதாரங்கள் புள்ளி விபரத்தோடு காட்டலாம்.

மதங்கள் ஒழிக்கப்படவேண்டும் என்று நாம் சொல்ல ஆரம்பித்தாலேயே ஏன் சொல்லுகின்றோம்? அதற்காக என்ன அவசியத்தைக் காட்டுகின்றோம் என்பதைச் சிந்திக்காமலேயே, சிந்திக்

காவிட்டாலும் நமக்குக் காது கூட கொடுக்காமலேயே ஏதோ ஒரு பெரிய அபாயம் வந்துவிட்டதுபோல் மிகக் கவலையாக சிந்தனைச் செய்யத்தொடங்கிவிடுகிறார்கள்.

இதற்குச் காரணமெல்லாம் அவர்கள் ஒழுக்கம் கெட்டுவிடுமே என்பது கூட அல்லாமல் நரகம் சித்தித்துவிடுமே என்பதும், மேல் லோக வாழ்க்கை பெருத்த மோசமானதாகிவிடுமே என்பதுமே யாகும்.

ஏனெனில், குருக்கள்மார் மதத்தை மக்களுக்குள் புகுத்துவதற்காகவும், மக்கள் மனதில் என்றென்றும் மதம் நிலைத்திருப்பதற்காகவும் நரகத்தைப்பற்றி அவ்வளவு அதிகமாக வருணித்து அவ்வளவு அதிகமான பயத்துக்கு ஆளாக்கி வைத்திருக்கிறார்கள்.

பொதுவாகவே, கடவுள் உதவி வேண்டுமானால், மதம் வேண்டும் என்பதும், மதம் வேண்டுமானால் குருக்கள் வேண்டுமென்பதுமே மதத்தின் அவசியத்துக்குக் காரணமாக்கி அதன் மூலம் குருக்கள்மார் ஆதிக்கத்தை நிலை நிறுத்தியிருக்கிறார்கள்.

சாதாரணமாகப்பார்த்தாலும், மனித சுபாவமானதும், மனித சக்தியானதும் மதத்தைக்கொண்டேதான் வெளிப்படக்கூடியதென்றோ, நிலை நிற்கக்கூடியதென்றோ சொல்லுவது சுத்தத்தப்பான அபிப்பிராயமாகும்.

கோவிலையும், மதத்தையும் மிகப்பிரமாதமாய் கருதாதவர்களும் அதில் கவலையில்லாதவர்களும் அவற்றில் அனுதாபமோ, நம்பிக்கையோ இல்லாதவர்களுமான மக்களுக்குள்ளாகவே எத்தனையோ பேர்கள் தங்கள் தங்கள் சுபாவங்களையும், சக்திகளையும் உணர்ந்துகொண்டு எவ்வளவோ மேலான நல்ல தன்மையுடனும், அதி மேதாவித் தனமான அறிவுடனும் உடல் பொருள் ஆவியாகியவற்றை மக்கள் நல் வாழ்க்கைக்குப்பயன்படுத்தியவர்களாகவும் இருக்கிறார்கள்.

மதத்தினாலும், பக்தியினாலுந்தான் மக்கள் தங்கள் சக்தியை உணரலாம் என்பதும், நன்மையான காரியங்களைச்செய்யலாம் என்பதும், மேலான அறிவைப் பெறலாம் என்பதும் மெத்த பலமற்ற வாதமேயாகும்.

ஒழுக்கத்துக்காகவும், சமுதாய ஒழுக்கத்துக்காகவும் மனிதனுக்கு மதம் வேண்டுமென்பது மிக மிக பலமற்ற வாதமாகும்.

வரப்போகின்ற காலத்தில் மதக்கோட்பாடுகளைப்பற்றி பிர மாதப்படுத்துவதும், அதற்காக பல காரணங்களைக் கட்டுக்கட்டி மக்களுக்குள் புகுத்துவதும், அவற்றையெல்லாம் நம்பும்படி செய் வதும் இனி முடியாது என்று தைரியமாய்ச் சொல்லுவேன்.

எப்படித்தான் பாடுபட்டு புகுத்தினாலும், உண்மையான நம்பிக் கை ஏற்படுவதற்கு இடமில்லாமல் போனால் அவை எப்படி மதிப் ப்புப் பெறமுடியும்? ஜனங்களைக் கோவிலுக்குப் போகும்படி செய்தல் ஒரு விஷயம். அவர்களை நரகத்திலோ, அல்லது மற்ற புராதன கொள்கைகளிலோ நம்பிக்கை கொள்ளச்செய்வது வேறு விஷயம்.

சிறிது யோசித்தாலும் நரகத்தின் அடிப்படை முழுவதும் பொய்யாகிவிடும். கோவிலுக்குப் போகாததாலேயே நாம் கெட் டுப்போய் விடமாட்டோம். நாம் கோவிலுக்குப்போவது குறைந்து போயிருந்தாலும் நாம் நாளுக்கு நாள் முன்னேற்றமடைந்தே வரு கிறோம். நான் வாசாகைங்கரியம் செய்வதாக யாரும் நினைக்க வேண்டாம். நான் ஒருவருக்கு விரோதமாக வீண்வார்த்தைகளைச் சொல்லவில்லை. நமது காலத்தைப்பற்றி உரிய காலத்தில் சரித் திர சம்பந்தமாகவும் சமுதாய சம்பந்தமாகவும் ஆராய்ச்சி செய்வோ மானால் ஏராளமான உண்மைகளும் புள்ளிவிபரங்களுமே நாம் முன்னேற்றமடையவில்லையா என்ற சந்தேகங்களை அறவே ஒழி த்து விடும். தற்காலத்தைவிட முற்காலத்தில் குற்றங்களும், பலாத் காரங்களும் அக்கிரமங்களும் உலகத்தில் அதிகமாகவே இருந்தன. முற்காலத்தவர் நம்மைவிட அதிக சுசீலிவிகளாயிருந்ததில்லை. அவைகளைப்பற்றி நாம் நிச்சயமான புள்ளி விபரங்களை காட்ட லாம்.

மதக்காரர்கள் நாம் மடுவில் மூழ்கி இறக்கிறோம் என்று கரு துகிறார்கள். அதாவது நாம் அநீதியை வளர்க்கிறோம் என்பதா கும். இதற்கு ஆதாரமான புள்ளி விபரங்கள் ஒன்றுமில்லை. ஆகவே இந்த அபிப்பிராயம் அர்த்தமற்றது. பத்திரிகைகளில் தோன்றும் விபசார விஷயங்களையும் குற்ற விபரங்க ளையும் பார்த்து அத்தகைய அபிப்பிராயம் கொள்ளுகிறார்கள். ஆதிகாலத்தில் இத்தகைய பத்திரிகை விளம்பர முறைகள் இருந்த தில்லையென்பதை மக்கள் மறந்து விடுகிறார்கள். ஆயினும் அக் காலத்திலும் விபசாரங்களும் குற்றங்களும் இருந்தே வந்திருக்கின் றன. ஆதிப்யூரிட்டன்ஸ் என்பவர்களிடம் விபசாரம் மிகுந்திருந்த தாக ருசுப்படுத்தும் சரித்திரம் சாட்சியங்களைப்பற்றி தோழர் ரூப் பர்ட்ஹக்ஸ், "ஹால்டிமன் ஜீலியஸ் மாதப்பத்திரிகை" யில் சமீபத்

தில் எழுதியிருக்கிறார். பக்குள் என்னும் பேர்போன சரித்திர ஆசிரியர் ஸ்காத்லந்து ப்யூரிட்டன்ஸ் என்பவர்களிடம் பயங்கரமான துர் கிருத்தியங்கள் இருந்தனவென்று எழுதியிருக்கிறார் அப்படியே மத்திய காலங்களிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் இருந்து வந்திருக்கிறது. இவ்விஷயங்களிலும் நாம் நமது முன்னோர்களைவிட அதிகமாகக் கெட்டுப்போகவில்லை.

இனி ஒழுக்க முறைகளின் பலன்களைப்பற்றிப் பேசுவோம். இது மகா முக்கியமான விஷயம். இதனால் உலகம் பாதிக்கப்படவில்லையென இலேசாய்க் கருதப்படுகிறது.

பென் லிண்டுஸி என்னும் நீதிபதி "நவீன வாலிபர்களின் புரட்சி" என்னும் நூல் எழுதியிருக்கிறார். அவர் அமரிக்க வாலிபர்களின் எண்ணங்கள், நடத்தைகள் முதலியவைகளைப்பற்றி மிக நன்றாய் அறிந்தவர். அவரைப்போல இளைஞர்களை அறிந்தவர் வேறு யாரும் கிடையாது. அவர் வாலிபர்களுக்குள் காதல் சுதந்தரம் வெகு அதிகமாக இருக்கிறதென்று தமது நூலில் விளக்குகிறார். அது வழக்கத்திற்கு அதிகமாக இருக்கிறதாவென்பது அவருக்குத் தெரியாது. அவ்விஷயத்தில் புகுந்து சரியான ஆராய்ச்சி செய்தாலொழிய யாருக்கும் உண்மை விளங்காது.

கிழவர்களின் அபிப்பிராயங்கள் உபயோகமற்றவை' இங்கிலாந்திலே கிழவர்கள் வாலிபர்களாயிருந்தபோது பருவகாலம் வித்தியாசமுள்ளதாக இருந்ததென்று சாதாரணமாய் நம்புகிறார்கள். ஆனால் உண்மையில் அப்படியில்லை யென்பதை ருசுப்படுத்த சாக்ஷியங்கள் இருக்கின்றன. நீதிபதி லிண்டுஸி அறிந்து சொல்வது என்னவென்றால், கோவிலுக்குப்போய் உபதேசங்கள் கேட்கும் வாலிபர்களுக்குள்ளும் இளம் பெண்களுக்குள்ளும் தான் காதல் சுதந்தரம் ஏற்பட்டிருக்கிருக்கிறது என்பதுதான்!

நவீன உலகம் தனக்கென்று சொந்தமாகச் சட்டங்கள் செய்துகொள்ள வேண்டும். குற்றத்தைப்பற்றியும் பலவந்தத்தைப் பற்றியும் பயப்பட வேண்டாம் ஜனங்கள் தன்னைக்காப்பாற்றிக் கொள்ளும் மணவாழ்க்கை விஷயமாக ஜனசமூகம் தன் சமுதாய நன்மைகளை பாதுகாத்துக் கொள்ளும் சமுதாயத்தைப் பாதித்து யாருக்கும் தீங்கு செய்யாத தனிப்பட்ட நபர்களின் காரியங்களைக் கோவில்கள் அடக்கியாள முடியாது. இனி வருங்காலத்தில் அதைப் பற்றிய உண்மையை நாம் நன்கு தெரிந்துகொள்ள வேண்டும். அது ஒரு பெரிய விஷயம். அதைப்பிறகு எடுத்துக்கொண்டு நன்றாக ஆராய வேண்டும்.

இனி மதத்தை எப்படித்திருத்தினாலும், அதை எப்படிக்க லைத்தமைத்தாலும், அதை ஒழிந்து போவதினின்றும் தடுக்க முடியாது. அதன் கொள்கைகளில் ஒன்றாவது கண்டனத்திற்குட்படாமல் இருக்க முடியாது. எல்லா மக்களையும் ஒப்புக்கொள்ளும்படி இனிச்செய்ய முடியாது.

சிலர் எல்லா மதக் கோட்பாடுகளையும் விட்டு ஒழுக்க அபிவிருத்தி சங்கங்களை மட்டும் வைத்துக் கொள்ளலாமென்கின்றார்கள். இது எப்படி ஒரு பெரிய மதமாகி விடும் என்பதைப்பற்றிச் சுலபமாய்ப் பரீக்ஷித்து விடலாம். சென்ற நூறு வருஷங்களாக உலகில் பல இடங்களில், சிறப்பாக அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும்கூட மதாபிமான வைதீகச் சங்கங்களும் கோவில்களுமிருந்தன. அவைகளில் அநேகம் மதக்கோட்பாடுகள் இல்லாமலே இருந்து வருகின்றன. சமீப காலத்திலிருந்து ஒழுக்காபிவிருத்திச் சங்கங்களும் இருந்து வருகின்றன. அவைகள் நீதி விஷயங்களின் சம்பந்தம் மட்டும் பெற்றிருக்கின்றன. மேலே கூறப்பட்டவைகளில் ஒன்றும் பொது மனிதர்களால் போற்றப்படுவதில்லை. கோவிலுக்குப்போகாத ஆறுகோடி அமெரிக்கர்களும், மூன்று கோடி பிரிட்டிஷ்காரர்களும் அத்தகைய சபைகளின் கூட்டங்களுக்குப் போவதே கிடையாது. அப்படிப்பட்ட சபைகள் நூறுக்குக் குறைந்தேயிருக்கும். சபை ஒன்றில் சில நூறு அங்கத்தவர்கள் தான் இருப்பாகள். அவர்களுடைய எண்ணிக்கை அதிகமாகவும் கிடையாது.

நம்முடைய காலத்திற்கு ஞாயிற்றுக்கிழமைக் கூட்டம் தேவையில்லை. அதற்குத் தெய்வ வணக்கமோ அதற்குப்பதிலாக வேறு எதுவுமோ தேவையில்லை. மனிதன் இயற்கையிலேயே சாஸ்வதமான மதப்பற்றுள்ளவனல்லவா? மனிதனிடத்தில் நீங்காத மதப்பிரியம உண்டு என்று அறிஞர்களான அநேக ஆசிரியர்கள் கூறவில்லையா? அதனால்தான ஒரு மதம் மறைந்ததும் வேறு ஒன்று அதற்குப் பதிலாகக் கிளம்பி விடுகிறது என்று அவ்வறிஞர்கள் கூறவில்லையா? இனிவருங்காலத்தில் எதுமதமாயிருககக் கூடும? இவ்விஷயங்களைபபற்றி வேறு கட்டுரைகளில பேசுவோம.

நவீன நாகரீகத்தில் முன்னேற்றமடைந்திருக்கும இடங்களின் நிலைமையென்ன? அங்குள்ள மக்களில் மூன்றில் இரண்டு பாகத்தவர் கோவிலுக்குப் போவதில்லை. அவர்கள் வீட்டில் கடவுளை வணங்குகின்றார்கள் என்றும் யாரும சொல்ல முடியாது. இந்த தேசங்களில் லட்சக்கணக்கான குருக்கள் ஜனங்களைக் கோவிலுக்குப் போகும்படி நியாயம் சொல்லிக்கொண்டு தானிருக்கிறார்கள். மனைவிமார்களும் குமாரத்திகளும் தங்கள் தங்கள் ஆடவர்களை

அதற்குக் கட்டாயப்படுத்தும்படி தூண்டப்படுகிறார்கள். கோவில் பூஜாமுறைகளைக் கூடியவரையில் கவர்ச்சியுள்ளதாக்குகிறார்கள். குறிப்பிட்ட கிழமைகளின் நீண்ட பூஜா காலத்திற்குப்பதிலாக இனிமையான மாலைப் பூஜைகளை கிழமைதோறும் நடத்துகிறார்கள். சங்கீதம் அதிகமாகவும், பிரசங்கம் கொஞ்சமாகவும் உள்ள கூட்டங்களை நடத்துகிறார்கள். உற்சாகத்தை உண்டாக்கத்தக்க மத கற்பனைகளைப் பற்றிய தலைப்புக்களைப் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்துகிறார்கள். சமுதாய ஊக்கம் உண்டாகிறது. கோவில் சம்பந்தத்தோடு சமுதாய வாழ்வு அபிவிருத்தி செய்யப்படுகிறது. ஆடல் பாடல் ஆடும்படக் காட்சிகள் நடத்தப்படுகின்றன. புதிய மதங்களான கிறிஸ்துவ விஞ்ஞானம், ஒழுக்க அபிவிருத்தி, தியாசபி, முதலியவை பழையவைகளோடு போட்டி போடுகின்றன.

முடிவு என்ன? உண்மை விஷயம் என்ன? நவீன நகரீகத்தில் ஜனத்தொகையில் பாதியல்லது முக்கால் பாகம் இவைகளையெல்லாம் அசட்டை செய்து கோவிலுக்குப் போக மறுக்கிறது. மதக்கோட்பாடுகள் குறைந்ததற்கேற்ப குறைந்த ஜனங்களே போகிறார்கள். கோவிலுக்குப் போகும்படி ஜனங்களை நிர்பந்தம் செய்யவில்லையென்று வைத்துக்கொள்ளுவோம். பத்து வருஷங்களுக்குக் குருக்கள்மார்கள் எல்லோரும் உலகத்தில் தங்கள் வேலையை நிறுத்திவிடுகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். முடிவென்னவாகும்? நீங்களே யதார்த்தமான பதில் கூறுங்கள். நான் என அபிப்பிராயத்தை இங்கு வற்புறுத்த விரும்பவில்லை. ஆனால் அப்போது இன்னும் எத்தனை பேர் கோவிலுக்குப் போவதை நிறுத்திவிடுவார்களோ என்பதை நினைக்க ஆச்சரியமாயிருக்கின்றது.

மனிதனுக்கு இயற்கையிலேயே மதப்பற்றுக் கிடையாதென்பது வெளிப்படை. நாகரீக மக்களின் தொகையில் பாதிக்கும் குறைந்தவர்களை மதப்பற்றுள்ளவர்களாக வைத்துக்கொள்ள பத்து லட்சம் பாதிரிகளின் மிகுந்த முயற்சி தேவையாக இருக்கிறது.

இயற்கை மதப்பற்றைப் பற்றிப் பேசும் ஆசிரியர்கள் ஒரு தவறு செய்தவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் பழைய காலத்தையே கவனிக்கிறார்கள், தற்காலத்தைப் பற்றி அறியாதிருக்கிறார்கள். முன் காலத்தில் ஒரு மதம் போனால் வேறு மதம் உண்டாயிற்று. ஆசியாவில் இருந்ததுபோல படித்தவர்கள் பல நூற்றாண்டுகளாக மதம் ஒன்றும் இல்லாமலே இருந்துவந்தார்கள். எப்படியிருந்தாலும் நமது காலம் ஒரு புதிய காலமேயாகும். உலக சந்தர்ப்பங்கள் முழுவதும் மாறிவிட்டன. இருபதாவது நூற்றாண்

டில் என்ன நேரிடுமென்று யாரும் கூறமுடியாது. மதத்தைப் போற்ற நமது தலைமுறையில் அரசியல் நிர்பந்தத்தையும் உண்டாககமுடியாது. சென்ற பதினைந்து நூற்றாண்டுகளாக அப்படித்தான் நடந்துவருகிறது. மதப் பற்று மனிதனுக்கு இயற்கையல்லவென்பதைக் கண்டுபிடித்தோம். அநேகர் மதத்தை விட்டுவிட்டார்கள். மதப் புத்தகத்தை யாரும் படிப்பதில்லை. நமது மதப் புஸ்தகங்களிலும் பத்திரிகைகளிலும் மதக் குறிப்புகள் காணப்படுவதில்லை. மேடைகளில் மதங்கள் கேவலமாய்ப்பேசப்படுகின்றன. அதைக்கேட்டு வேடிக்கைப் பார்ப்பவர்கள் நகைக்கிறார்கள். ஆடும் படக்காட்சிகளில் மதத்தை ஒப்புக்குச்சேர்த்திருக்கிறார்கள். அது கண்டு ஜனங்கள் புன்சிரிப்புக்கொள்ளுகிறார்கள். மதம் செத்துவாக இறந்துகொண்டிருக்கிறது.

அதனால் வாழ்வும் மனமும் கெட்டுப்போகுமா? மதத்தை அலக்ஷியம் செய்த எண்பது லட்சம் லண்டன் வாசிகளுடைய மனமும் வாழ்வும் கெட்டுப்போகவில்லை. இவர்களைப்பற்றி நான் நன்கு அறிந்திருக்கிறேன். இவர்களுக்கு மதம் கிடையாது. இவர்கள் மதத்தைப் பற்றியும் நினைப்பதில்லை. கெட்டுப்போகுமென்பதும், அவநம்பிக்கையால் அபாயமென்பதும் சாதுர்யமான கட்டுக்கதைகளேயாகும். வாழ்வு நல்லது. அது ருசிகரமானது. லட்சாதி லட்சம் பேர் அனுபவித்தானந்திக்கமுடியும். பக்தி மிகுந்த முற்காலத்தில் அவர்கள் அடைபட்டுக்கிடந்தார்கள். மக்களின் விருப்பத்திற்கேற்ப கலைகளிருக்கின்றன. அறிஞர்களுக்கு விஞ்ஞானம் இருக்கிறது; இலக்கியம் இருக்கிறது, பெருமை மிக்க தேசமும் கடலும் இருக்கின்றன. நகரத்தில் 1001-வேடிக்கை விநோதங்கள் இருக்கின்றன. மக்கள் வாழ்வு வேகமாய் மாறுதலடைந்து வருகிறது. சரித்திரத்தில் புதிய அத்தியாயம் ஆரம்பமாகிறது. ஆகவே மதமின்றி மக்கள் வாழமுடியாது என்று மதப்பிரசாரகர்கள் பயப்படவேண்டியதில்லை.

———)o(———

என் அபிப்பிராயத்தை மறுக்க உங்களுக்கு உரிமையுண்டு. ஆனால் என் அபிப்பிராயத்தை வெளியிட எனக்கு உரிமையுண்டு.

ஈ. வெ. ரா.

விசாலாட்சி.

(ஜே. பி. கிருஷ்ணன்.)

"யார் என்ன சொல்லுவார்களோ! என்கிற கவலை நமக்கு வேண்டாம்" அதையெல்லாம் கவனித்தால் ஒரு காரியமும் நடக்காது. ஒரு வேளை இந்தச் சுயமரியாதைக் காரர்கள் இதைப்பற்றிக் கேவலமாகப் பிரசாரம் செய்வார்களே! என்று நினைக்கிறீர்கள். இதற்கெல்லாம் பயந்தா ஆவது? 'காக்கை யும் கத்தவேண்டியது தான் கவலையும் இறைக்கவேண்டியது தான்" என்றார் வாசுதேவ சர்மா.

ஆமாம்! எனக்கும் பிரியந்தான், "சரி" என்று ஒப்புக் கொள்வதாகவே வச்சுக்கொள்ளுங்கள். இந்தக் கிழவயசிலே எனக்கு யார் பெண் கொடுப்பார்கள்? அதுவும் மூன்றாந்தார மல்லவா? என்றார் ரெகுநாதாச்சாரியார்.

சரி! சரி! நீங்கள் இதற்குத்தான் மலைத்தீர்களா? ரொம்ப அழகு! உங்களுக்கு இந்தத்தேதியிலே எத்தனை தேவ கண் ணிகைகள் வேணும்? எத்தனை இளங்குமரிகள், ரதிக்குஞ்சு கள் வேணும்? இதென்னய்யா பயித்தியமாயிருக்கு! கை நிறைய பணத்தை வச்சுண்டு இப்படி யாராவது அசட்டுத்த னமா பேசுவாளா? லோகத்திலே பணத்தாலே ஆகாதகாரியம் என்னய்யா இருக்கு? என்று ஒரு போடு போட்டார் சர்மா.

ஆச்சாரியார் அதற்கு பதில் சொல்லவில்லை. ஆனால் அவர் முகத்திலே ஒரு புன்சிரிப்பு! மட்டற்ற மகிழ்ச்சித் தாண் டவமாடியது

ரெகுநாதாச்சாரியார் ஒரு பென்ஷன்பெற்ற தாசில்தார், உத்தியோக காலத்திலே பலவிதத்திலும் பணஞ் சேர்த்தவர், பணமுண்டானால் சுற்றமுண்டுதான், என்றாலும் ஆச்சாரியா ரின் "பெண் மோகம்" சுற்றத்தாரைக் கிட்ட அணுகவொட் டாமல் அடித்தது! அவருடைய துரதிர்ஷ்டமோ! என்னவோ! அவர் இரண்டு பெண்களை மணந்தும், இருவருக்குமே குழந் தையில்லாமலும், ஆற்றிலோ, கிணற்றிலோ, உயிரை மாய்க்க வேண்டிய அவசியமும் நேர்ந்து விட்டது. தற்போது அவருக்கு

வயசு 58, பெண்டாட்டி யில்லாவிட்டாலும் அவர் "தனி" என்ற பெயருக்கு ஆளாகவில்லை. எத்தனையோ உண்டு (?) இருந்தாலும் தன் பெண்டாட்டி என்று ஒன்று இருந்துவிட்டால் சௌகரியம் பாருங்கள்.

அந்த ஏற்பாட்டுக்குத்தான் வாசுதேவ சர்மா அஸ்திவாரம் போட்டார். ஆச்சாரியாரும் இசைந்து விட்டார். இதிலே சர்மாவுக்கு நல்ல "ச்சான்சு" தான், சந்தேகமில்லை.

ஏழை வயிற்றிலே பிறந்த குற்றத்துக்காக, பிராம்மண தர்மத்தை மீறி "ருது" வாகியும் கல்யாணமாகாமலிருந்த விசாலாட்சி 2000 ரூபாய்க்கு வாங்கப்பட்டாள்! அவளது பெற்றோர்களுக்கு பாரம் துலைந்தது! பணமும் சேர்ந்தது! இதிலே அவர்களுக்கு இரட்டைச் சந்தோஷம்!!

அமாவாசைக்கும், அப்துல்காதருக்கும் சம்மந்தமில்லை. பல்லெல்லாம் உதிர்ந்து, உடல் தளர்ந்து, பார்க்க விகாரமுள்ள பழுத்தக் கிழவனுக்கும், சிறந்த கட்டழகு பொருந்திய, இன்பம் கனிந்த பருவச்சிறுமிக்கும் சம்மந்தம் செய்துவைக்க எத்தனையோ சாஸ்திரங்களும், கடவுள்களும், தரகர்களும்பல்களும் காத்து நிற்கின்றன நமது நாட்டில்!

"திருமணம்" என்ற மங்களகரமான பெயரால் ஆச்சாரியாருக்கும், விசாலாட்சிக்கும் முடிச்சுப்போட்டாகி விட்டது. கல்யாணப்பந்தலில் அம்மிமிதித்து அருந்ததி பார்த்தாச்சு! பூதேவர்கள், ஆசியும், அட்சதையும், மந்திரங்களோடு பொழிந்தாச்சு! சுமங்கிலிப் பெண்டுகள் லாலி ஊஞ்சல்பாடி ஆலத்தி எடுத்தாச்சு! திருஷ்டி தோஷங்கூட கழித்தாச்சு! இனி தம்பதிகளுக்கு என்ன குறை? அவர்கள் வாழ்க்கையில் ஓரே இன்பந்தான் தாண்டவமாடும்!!

புதிய ரஸாயன ஆராய்ச்சியால் கண்டுபிடிக்கப்பட்ட நரைமயிர் கருக்கும் தைலங்களும், மன்மதசிந்தாமணி லேகியங்களும், இரத்தவிருத்தி "டானிக்" குகளும், ஆச்சாரியார் வீட்டில் குவிந்தது. "ஸ்பெஷலா"க அவருக்காகவே சீமையிலிருந்து ஒரு செட் "பற்கள்" தருவிக்கப்பட்டது. என்னென்னமோ செய்து "இயற்கை"யை வென்றுவிடப் பார்த்தார். ஆச்சாரியார். பாவம்! பழைய ஆசைக்கு மஞ்சள் குளிப்பு!

ஆச்சாரியாருடைய வீடு மிகப்பெரியது, பின்புறம் ஒரு பெரிய அழகிய தோட்டம், வரிசை வரிசையான பற்பல விரு

க்ஷங்களும், பலவித கொடிகள் படர்ந்த வளைவுகளும், கொத்துக்கொத்தாகப் பூக்கும் புஷ்பச் செடிகளும், தென்றலோடு கலந்து பரிமளிக்கும் மலர்களின் வாசனையும், அங்கு செல்வோரை அப்படியே மெய்மறந்த இன்பத்திலாழ்த்திவிடும்.

செல்லப்பன்மேல் ஆச்சாரியாருக்கு ரொம்பப்பிரியம். தோட்டத்து "மானேஜ் மெண்டு" அவனதுதான். நல்ல ஒழுங்கான நிர்வாகஸ்தன். தோட்டத்தினுள் செல்லபபன் ஒரு அழகிய சிறு குடிசையில் தன் கிழத்தாயாரோடு வசித்துவந்தான். அவன் ஒரு வாலிபப் பிரம்மச்சாரி! கொஞ்சம் படிப்புள்ளவன், அறிவாளி, நல்ல உடற்கட்டும், கம்பீரமான தோற்றமும், அழகிய முக வெட்டும் உடையவன். அவனுக்கு ஆச்சாரியார் சுவல்ப சம்பளந்தான் கொடுத்தார். அதுவே அவனுக்குப் போதுமானதாக இருந்தது.

தினந்தோறும் ஆச்சாரியாருக்கு விசாலாட்சியுடன், கைகோத்துக்கொண்டு, தோட்டத்தில் "ஜாலி" யாக உலாவவேண்டும் என்ற ஆசை! ஆனால் விசாலாட்சிக்கு வாரத்தில் 6 நாளைக்குத் தலைவலி வந்துவிடும். எப்படியாவது அவரிடமிருந்து தப்பித்துக்கொண்டு தனியாகக் காலங்கழிப்பதே "பேரின்பம்" என்று நினைத்தாள் விசாலாட்சி. வாழ்க்கையில் வெறுப்பு!

கல்யாணமானதிலிருந்து விசாலு சிறுமியாகப் பள்ளியில் படிக்கும்போது, பெரியவளான பின்பும், கட்டிய ஆசை மனக்கோட்டையெல்லாம் இடிந்து, சரிந்து, விழுந்துவிட்டது. தான் நினைத்த கணவன், சுந்தரமான புருஷன்! நல்ல பலம் பொருந்திய வாலிபன்! ஒன்றுபட்ட மனசு! எப்பொழுதும் இனிய பேச்சு! என்றைக்கும் மாறாத இன்பம்! அவர் ஆபீஸிலிருந்து களைத்துப்போய் வந்தால் அவரை எப்படிச் சந்தோஷத்தோடு வரவேற்கவேண்டும்? ஓடிச்சென்று அப்படியே அவரைக் கட்டிப்பிடித்து ஒரு நீ.........ண்ட முத்தம்!.........
ஐய்யய்யோ! பாழும் மனமே! இன்னும் அதையெல்லாம் ஏன் நினைக்கவேண்டும? நான்தான் ஒரு கிழவருக்கு மனைவியாகிவிட்டேனே! கிழவிபோலல்லவா இருக்கவேண்டும்? இனி அந்த இன்பம் எனக்கேது? வேண்டாம் அந்த நினைப்பெல்லாம் என்று மனசைத்தேற்றிக்கொள்வாள். இருந்தாலும் நெஞ்சுக்குள் ஒரே குழப்பம்! நெருப்புப்பற்றி எரிவதைப் போன்ற உணர்ச்சி! அதைத் தாங்கமாட்டாதவளாய், கைகளால் முகத்தை மூடிக்கொண்டு விம்மி விம்மி அழுதுவிடுவாள்.

விசாலாட்சியின், துயரத்தின் ஆழ்ந்த காரணத்தை ஆச்சாரியார் முதலில் அறிந்துகொள்ளவில்லை, பட்டுப்பட்டாடைகளாலும், நகை நட்டுக்களாலும், வாசனைத்திரவியங்களாலும், அவளுக்குப் பிரியமான "பிற" சௌக்கியங்களாலும் திருப்திசெய்யப் பார்த்தார். பெரிய ஏமாற்றம்!

அவளது விருப்பத்தின்—வாழ்க்கையின் லட்சியத்தைப் பூர்த்தி செய்ய யோக்கியதையுடையவன் ஒரு வாலிபன்! வாலிபன்!! வாலிபன்!! உலகம் இருப்பது எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மை இது.

என்ன காரணத்தாலோ ஆச்சாரியார் இப்போது தோட்டத்திற்குப்போக அழைக்கும்போதெல்லாம் விசாலாட்சி பதில் சொல்லாமல், தலைவலி யில்லாமல் புறப்பட்டு விடுகிறாள். செல்லப்பனின் குடிசைப்பக்கம் போனால், "இந்த இடம் நன்றாயிருக்கிறது" இங்கேயே கொஞ்ச நேரம் இருக்கலாமே, என்று ஆசைப்படுகிறாள்.

மாலை நேரம், தென்றல் ஜிலு ஜிலு வென்று வீசுகிறது. புதிதாகப் பூத்த புஷ்பங்களின் வாசனை "கம்" மென்று எங்கும் பரவிற்று, கதிரவன் தன் பொன் கிரணங்களை ஜீவாபிமானத்தோடு அள்ளி அள்ளி இறைத்தான். எங்கும் குதூகலம்! எங்கும் சாந்தி!

தோப்பின் நடுவிலே, "ஐயோ! அம்மா! என்ற ஒரு மெல்லிய இனிய குரல் வேதனை கலந்து ஒலித்தது"

"செல்லப்பன் அந்தப்பக்கமாக ஓடினான்."

விசாலாட்சி அலங்கோலமாக புல் தரையில் உட்கார்ந்துகொண்டு, இரு கைகளாலும் தன் வலது காலைப்பிடித்துக்கொண்டு, ஐயோ! அம்மா! வலிக்கிறதே! என்று முணகிக்கொண்டிருந்தாள்.

செல்லப்பன் பதறிவிட்டான், அம்மா! காலில் என்ன? ஏதாவது கடித்து விட்டதா? ஐயாவை எங்கே காணோம்? சொல்லுங்கள் சீக்கிரம்! என்றான் துடியாக.

"செல்லப்பா! ஐயா ஊருக்குப் போயிருக்கார். நான் தனியாகத்தான் வந்தேன். என்னை ஒன்றும் கடிக்கவில்லை,

பாதத்தில் ஒரு "முள்" தைத்து விட்டது. ஐயோ! வலி பொருக்கமுடியவில்லையே! இதைக் கொஞ்சம் எடுத்து விடேன்!"

அம்மா! நான் தங்களைத் தீண்டுவது......எப்படி?...... நீங்கள்..........

"பரவாயில்லை! செல்லப்பா! இந்தச்சமயத்திலா அதை யெல்லாம் பார்ப்பது? என்மேல் உனக்குப் பிரியமில்லையா? அன்பில்லையா? ஐயோ! சீக்கிரம் எடேன்! வலி பொருக்க முடியவில்லையே!"

செல்லப்பன் சற்று பிரமித்து நின்றான், அவன் மனசு குழம்பியது! பலப்பல எண்ணங்கள்! உணர்ச்சிகள்! "ஆபத்துக்குப் பாபமில்லை" அருகில் சென்றான். விசாலாட்சியின் பாதத்தை மெல்லப் பிடித்தான். ஏதோ பளிச்சென்று ஒரு மின்சார சக்தி அவன் உடலில் தாக்கியது.

ஐயோ! என்னைப் பிடித்துக்கொள்ளேன்! மயக்கம் வருகிறதே! என்றாள் விசாலு. பேய் பிடித்தவள் போலானாள்! ஏதோ உணர்ச்சியால் தாக்கப்பட்டு அப்படியே கீழே சாயப் போனாள். செல்லப்பன் தன்னிருகரங்களாலும் அவளைத் தாங்கிக்கொண்டான். சற்று நேரம் ஒரே அமைதி!

இவைகளின் அர்த்தம் செல்லப்பனுக்கு விளங்கிவிட்டது. இரண்டு நெஞ்சுக்குள்ளும் ஒரு பலத்த போராட்டம்! ஆவேசமான ஒரு சிறிய சம்பாஷணை! உணர்ச்சியைத் தாக்கும் வார்த்தைகள்! விசாலு முடிவில் சொன்னாள்:— எனக்குச் சாதி வேண்டாம், என்னைப் பாழ்படுத்திய "பணம்" வேண்டாம், பெண்களைக்கொல்லும் மத சாஸ்திரங்கள் வேண்டாம், என்மனசு துணிந்துவிட்டது. எனக்கு நீ போதும். நீயே என் உயிர்.

விசாலாட்சி! உன் சௌந்தர்யம், அறிவு, தைர்யம் இவைகள் ரொம்ப விசாலம்! உண்மையைச் சொல்லுகிறேன். சில தினங்களுக்கு முன்பே என் மனசைக் கவர்ந்து விட்டாய்! இருந்தாலும் நான் அடிமை! சமூகக் கோழை! ஆனால் இன்று எனக்குப் புத்துணர்ச்சி ஊட்டிவிட்டாய்! இனி நான் ஒரு வீரன்! எதற்கும் அஞ்சேன்!!

ரெகுநாதாச்சாரியார் ஏதோ அலுவலாக வெளியிற்போயிருந்தவர் வந்து சேர்ந்தார். முன்போலல்லாமல் விசாலாட்சி இப்போது உற்சாகமாகப் பேசுவதும், சிறிப்பதும் ஆச்சாரியாருக்கு ஓரளவில் சந்தோஷம்! விசாலு உண்மையில், புத்தம் புதிய உணர்ச்சி பெற்ற புது மனுஷியாகவே விளங்கினாள்.

ஆச்சாரியாருக்கு மனசில் ஒரு சின்னச் சந்தேகம் விழுந்தது. நம்பவில்லை! இருந்தாலும் பார்த்துவிடுவோம், என்று தீர்மானித்தார். அவர் மனசு நடுங்கியது!

அன்று வெளியூருக்குப் போவதாகப் போக்குக் காட்டிவிட்டு தோட்டத்தில் மறைந்தார். மரக்கிளை ஒன்றில் இரண்டு சிட்டுக்கள் கொஞ்சிக் குலாவியது! "குயிலி" தன் காதலனைத்தேடி கறைந்தது! அன்னம் தன் பேடையையணைந்தது! ஒவ்வொரு ஜீவனிலும் காதல் நிறைந்த அந்தவேளை!

செல்லப்பனும் விசாலுவும் கூடினார்கள். உள்ளத்தில் பெருக்கெடுத்தக் காதலின் லட்சியத்தை உருவாக்கினார்கள்! அவர்களது நெஞ்சுருக்கும் காதல்! களங்கமற்ற அன்பு! ஆர்வம் பொங்கும் காதற் பேச்சு! உயிரைக்குடிக்கும் களிப்பு! இவைகளை நேரில் பார்த்தார் ஆச்சாரியார். அவர் நெஞ்சிலே ஒரு பெரிய சம்மட்டியால் தாக்கியதைப் போன்றிருந்தது! உணர்வு கலங்கியது! உடல் குன்றியது! மெல்லத் தள்ளாடிக் கொண்டு நடந்தார், வீட்டுக்குள் சென்றார், கட்டிலில் சாய்ந்துவிட்டார், ஒரே குழப்பம்!

ஆச்சாரியாருக்கு மனசு உடைந்து விட்டது! தளர்ந்து அயர்ந்த உடலில் இந்தப்பெரிய வேதனை புகுந்து அவரைப் படுக்கவைத்து விட்டது. மெல்லவு மாட்டாமல் விழுங்கவும் மாட்டாமல், தத்தளித்துச் சோர்ந்தார்.

காதற் களிப்பிலே! இன்ப வெறியிலே! விசாலாட்சியும் செல்லப்பனும் தங்களை ஆச்சாரியார் பார்த்து விட்டதை அறியார்கள். ஆச்சாரியார் படுக்கையாகப் படுத்தும், அவர்களது இன்பப்பிரவாகம் கரை புரண்டது! காடுமேடெல்லாம் பாய்ந்தது!

மாதங்கள் ஆறு கழிந்தது, ஆச்சாரியார் எலும்புக்தோலுமாகி விட்டார். ஆச்சு! இன்னும் சில நாளைக்குத்தான்

உயிர்வாழ முடியும். மருந்துகள் ஒன்றும் ஏற்கவில்லை. மனோ வியாதிக்கு மருந்தேற்காதல்லவா? இந்த நிலைமையில் செல்லப்பனையும், விசாலுவையும் தன்னருகில் அழைத்தார். அவர்களிருவரையும் சேர்ந்தாப்போல் "ஜோடி"யாகத் தன்னெதிரில் நிற்கச்சொன்னார் பிடிவாதமாக.

அவர்களுக்குப் பயம்! மிரட்சி! ஒன்றும் அர்த்தமாகவில்லை. இருந்தாலும் எஜமான் கட்டளைக்கு இசைந்தவன் போல விசாலாட்சிக்கருகில் போய் நின்றான்.

ஆச்சாரியார் முகத்திலே ஒரு பிரகாசம்! ஜீவகளை! தட்டுத்தடுமாறி எழுந்து உட்கார்ந்துப் பேசினார்.

"நீங்கள் பயப்படுவது எனக்குத்தெரியும், இனி பயம் வேண்டாம். நான் ஒரு அயோக்கியன்! இதைச் சொல்ல நான் வெட்கப்படவில்லை! அநியாயமாக ஒரு பெண்ணின்—விசாலாட்சியின் வாழ்வைக் குலைத்தேன், என்னுடைய பெண்ணாசை கண்ணை அவி த்து அறிவைக் கெடுத்துவிட்டது, விசாலாட்யின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்ய எனக்கு யோக்கியதையில்லை, நான் கிழவன்!

அன்றைய தினம் உங்களிருவரையும் தோப்புக்குள் பார்த்தேன்! முதலில் கோபம் வந்தது. ஆனால் என் மண்டையில் பளிச்சென்று ஒரு உண்மை "ஒளி" தோன்றியது. நிதானித்தேன். உங்களிடம் இன்றைக்குத் தான் சொல்லுகிறேன்! நான் தீர்மானித்து விட்டேன்! என்றைக்கு இருந்தாலும் இறப்பு நிச்சயம் நான் வயசில் எத்தனையோ பெண்களை அனுபவித்தேன்! கெடுத்தேன்! அதற்கு ஈடாக எனது கண்மணி விசாலாட்சியை வாழவைக்கத் துணிந்து விட்டேன்! என் மனம் என்னை இடிக்கிறது! எனக்குச் சாந்தியில்லை! சொந்த மனச்சாட்சியோடு தான் பேசுகிறேன்.

"ஏற்றுக்கொள்வீர்கள்" என்ற நம்பிக்கையோடு சிலவாரங்களுக்கு முன்பே என்னுடைய சொத்துக்கள் பூராவும் உங்களுடையதாக்கி விட்டேன், செல்லப்பா! நீ வேளாள வகுப்பினன், விசாலு பார்ப்பனத்தி, "ஜாதி"யில் எனக்கு நம்பிக்கை போய்விட்டது. நேரில் கண்டேன்! காதல்! உண்மைக் காதல்!! ஜாதியை லட்சியம் செய்யவில்லை! "ஜாதி" என்பது வெறும் அசட்டுத்தனம்! அறியாமை!

கடைசியாகச் சொல்லுகிறேன். நீங்கள் தான் மனமொத்த தம்பதிகள்! என் சொல்லை ஏற்க வேண்டும்! அப்போ

கடவுள் சக்தி.

[ஈ. வெ. ரா.]

விதண்டாவாதம்.

நமது கடவுள்கள் சக்தி மிகவும் அதிசயமானதாகும்.

அதாவது நமது கடவுள்கள் உலகில் மக்களை அக்கிரமங்கள் செய்யவொட்டாமல் தடுக்கமுடியாதாம்.

ஃ ஃ ஃ

ஆனால், மக்கள் சந்து பொந்துகளிலும், மூலை முடுக்குகளிலும் யாருக்கும் தெரியாமல் செய்த குற்றங்களையும் மனதினால் நினைத்த அக்கிரமங்களையும் பார்த்தும் ஒன்று கூட விடாமல் பதியவைத்தும், அதற்குத் தகுந்தபடி தீர்ப்புக்கூறி, தண்டனை கண்டனை கொடுக்கவும், அதற்காக நரகத்தில் ஆழ்த்திவைக்கவும், மற்றும் பல ஜன்மங்கள் கொடுத்து, அவைகளில் கஷடப்படுத்திவைக்கவும் முடியுமாம்.

ஃ ஃ ஃ

நமது கடவுள்கள் சக்தி எவ்வளவு அதிசயமானது!

ஃ ஃ ஃ

அதிலும் மகமதியர்களுடைய கடவுளும், கிறிஸ்தவர்களுடைய கடவுளும் மனிதன் செத்தபிறகு, எல்லார் குற்றம் குறைகளையும் ஒன்றாய் பதியவைத்திருந்து, ஏதோ அதற்கு இஷ்டப்பட்ட நாளில் அதாவது, ஒரு குறிப்பிட்ட நாளில் எல்லா மக்களையும் அவர்கள் புதைக்கப்பட்ட புதை குழியிலிருந்து

மூது தான் என் உயிர்ச்சாந்தியோடு.........ஹா! .... தொண்டையில் "களக்" என்ற ஒரு சப்தம்! ஆச்சாரியார் அப்படியே படுக்கையில் சாய்ந்தார்! அவ்வளவுதான்! அங்கிருந்தது வெறும் சடலம்! ஆனால் அதன் முகத்திலே ஒருபுன்னகை! சாந்தி!

பொறுமையே வடிவாக நின்றிருந்த செல்லப்பன், விசாலாட்சி, இருவர் கண்களிலும் கதித்தெழுந்த சூடான கண்ணீர் கன்னத்தின் வழியாக மடமடவென்று வழிந்தோடியது.

எழுப்பிக் கணக்குப்பார்த்து ஒரே அடியாய் தீர்ப்புச் சொல்லி விடுமாம்.

ஃ ஃ ஃ

இந்துக்களுடைய கடவுள்கள் அதாவது, சைவர்கள் கடவுள்களும், வைணவர்களுடைய கடவுள்களும் ஒவ்வொரு மனிதனுக்கும் தனித்தனியாகவே அவ்வப்போது அவனைச்சுட்டு எரித்தபின் கண்களுக்குத் தெரியாத அவனுடைய ஆத்மாவை பிடித்து வைத்து, அதற்கு ஒரு சூட்சம சரீரமும் கொடுத்து அந்த சரீரத்திற்கு அதற்குத்தக்க தண்டனை கொடுக்குமாம். அது பெரிதும் அடுத்த ஜென்மத்தில் இன்னின்ன ஜந்துவாய் பிறந்து, இன்னின்ன பலன் அனுபவிக்கவேண்டும் என்று கட்டளையிடுமாம்.

ஃ ஃ ஃ

கிறிஸ்துவ சமயத்தில் உள்ள கடவுள்சக்திப்படி எல்லா மனிதனும் பாவம் செய்தேதான் தீருவானாம்.

ஃ ஃ ஃ

அந்தப் பாவம் ஏசுகிறிஸ்துமூலம்தான் மன்னிக்கப்படுமாம்.

ஃ ஃ ஃ

மகம்மதிய மார்க்கப்படி மகம்மது நபிகள் மூலமாகத்தான் மன்னிக்கப்படுமாம்.

ஃ ஃ ஃ

சைவ சமயப்படி சிவன் மூலமாகத்தான் மன்னிக்கப்படுமாம். அவருக்குத்தான் பரத்துவம் உண்டாம்.

ஃ ஃ ஃ

வைணவ சமயப்படி விஷ்ணு மூலமாகத்தான் முடியுமாம். விஷ்ணுவுக்குத்தான் பரத்துவம் உண்டாம்.

ஃ ஃ ஃ

ஆனால் சைவ வைணவ சமயங்கள்படி மக்கள் பாவமே செய்வதுமாத்திரமல்லாமல் புண்ணியமும் செய்யக்கூடுமாம்.

ஃ ஃ ஃ

அதற்காக சொர்க்கம், வைகுண்டம், கைலாசம் என்கின்ற பதவிகள் உண்டாம்

ஃ ஃ ஃ

அப்புறம் ஒவ்வொரு மனிதனுக்கும் ஜன்மங்களும் உண்டாம்.

ஃ ஃ ஃ

இந்த அபிப்பிராயங்கள் எவ்வளவு குழப்பமானதாய் இருந்தாலும் பார்ப்பானுக்கு அழுதால் மேல் கண்ட மோ

ஷ்டங்களோ அல்லது நல்ல ஜன்மமோ எதுவேண்டுமோ அது கிடைத்து விடுமாம்.

ஃ ஃ ஃ

ஆகவே பொதுவாகக் கடவுள்களுடைய சக்திகள் அளவிட முடியாது என்பதோடு, அறிந்து கொள்ள முடியாது என்பதுமாத்திரமல்லாமல் அதைப்பற்றியெல்லாம் நாம் சிந்திப்பதோ சிந்திக்க முயற்சிப்பதோ மகா மகா பெரிய பெரிய பாவமாம்

ஃ ஃ ஃ

அதாவது, எந்தப் பாவத்தைச் செய்தாலும், எவ்வளவு பாவத்தைச் செய்தாலும், அவைகளுக்கெல்லாம் பிராயச்சித்தமும் மன்னிப்புமுண்டாம்.

ஃ ஃ ஃ

ஆனால் கடவுளைப்பற்றியோ அவரது சக்தியைப்பற்றியோ ஏதாவது எவனாவது சந்தேகப்பட்டுவிட்டானோ பிடித்தது மீளாத சனியன்.

ஃ ஃ ஃ

அவனுக்கு மன்னிப்பே கிடையாது. கிறிஸ்துநாதரைப் பிடித்தாலும் சரி, மகம்மது நபி பெருமானைப் பிடித்தாலும் சரி அல்லது இவன் விஷ்ணு, மகேசன் ஆகிய எவரைப் பிடித்தாலும் சரி, ஒரு நாளும் அந்தக் குற்றம் (எந்தக்குற்றம் கடவுளை சந்தேகிக்கப்பட்ட குற்றம்? மன்னிக்கப்படவேமாட்டாது.

ஃ ஃ ஃ

ஆனால், இந்த எல்லா கடவுள்களுக்கும் அவர்களால் அனுப்பப்பட்ட பெரியார்களுக்கும் அவர்களுடைய அவதாரங்களுக்கு கடவுளைப்பற்றியும், அவர்களுடைய சக்தியின் பெருமைகளைப்பற்றியும் மக்களை சந்தேகப்படாமல் இருக்கும் படிக்கோ, அல்லது அவநம்பிக்கைப்படாமல் இருக்கும் படிக்கோ செய்விக்கமுடியாதாம்.

ஃ ஃ ஃ

ஏனென்றால், அவ்வளவு நல்ல சாதுவான சாந்தமான கருணையுள்ள சர்வ சக்தி பொருந்திய சர்வ வியாபகமுள்ள கடவுள்களாம்.

ஃ ஃ ஃ

பாவம் நாம் ஏன் அவற்றை தொந்திரவு செய்யவேண்டும்.

ஃ ஃ ஃ

எல்லாம் கடவுள் செயல் என்று சும்மா இருந்து விடுவோம்.

திருவள்ளுவர் நாஸ்திகர்

கடவுள் ஒழியவேண்டும்.

)o(

பிச்சை எடுத்து வாழும்படியாக மக்களை கடவுள் சிருஷ்டித்து இருந்தால்

கடவுள் ஒழிய வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்.

அதாவது

"இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டிற் பரந்து கெடுக உலகியற்றியான்"

என்று 1062 வது குறளாகச் சொல்லி இருக்கிறார்.

இன்று இவ்வுலகில் பிச்சை எடுத்து வாழும் மக்கள் எந்த மதத்தினராயினும் எந்தக் கடவுளை வணங்குபவராயினும் அவரவர்கள் அந்தக் கடவுளால் பிரப்புவிக்கப்பட்டவர்களாகத்தான் இருக்க வேண்டுமே ஒழிய அவனவன் தாய் தகப்பன் முயற்சியால் பிறந்து அவனவன் புத்திக்கேட்டால் சோம்பலால் குறும்புத்தனத்தால் பிச்சை எடுக்கிறார்கள் என்று எந்த ஆஸ்திகனும் சொல்லமாட்டான்.

அப்படிச் சொல்வாராயின் எந்த ஆஸதிகனும் பிச்சைக்காரர்களுக்கு தருமம் செய்ய முன் வரவுமாட்டான். அது மட்டுமா, எந்த வேதமும் சாஸ்திரமும் பிச்சைக்காரர்களுக்கு தருமம் செய்யும்படி சொல்லவும் முன் வராது. அவ்வளவோடு மாத்திரமா!

எந்தக் கடவுளும், பிச்சைக்காரர்களுக்கு தருமம் செய்தவர்களுக்கு, மோக்ஷமோ சன்மானமோ, கொடுக்கவும் முன் வராது.

ஆகவே, பிச்சைக்காரர்களும் அவர்களது தொழில்களும் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டது என்பதுதான் அவர்கள் முடிவு

அதனால்தான், திருவள்ளுவர் பொய்யாமொழிப் புலவர் "பரந்து கெடுக உலகம் இயற்றியான்" என்று துணிவாய்ச் சொல்லி விட்டார்.

தரித்திரத்தையும், ஏழ்மையையும், பிச்சை எடுக்கும் தன்மையையும் ஒழிக்க வேண்டுமானால் கண்டிப்பாகக் கட

கீழ் மேல்.

என் கை கீழே; உன் கை மேலே

ஒரு பார்ப்பன யாசகக்காரன்— ஐயா பிரபுவே யேதாவது தர்மம் கொடுங்கள் உங்களுக்கு மகா புண்ணியமுண்டு.

பிரபு—போம் வோய், போய் எங்காவது பாடுபடுமேன். மண்ணுவெட்டினாலும் தினம் 8-அணா சம்பாதிப்பீரே. கொட்டாப்புளியாட்டமாய் இருந்துகொண்டு வடக்கயிறாட்டமாக பூணுல் போட்டுக் கொண்டு பிச்சைக்கு வரீரே வெட்கமில்லையா ?

யாசகக்காரன்— என்னமோ பிரபுவே தங்கள் கை மேலாகி விட்டது, என்கை கீழாகிவிட்டது என்ன வேண்டுமானாலும் தாங்கள் சொல்லக்கூடும்.

பிரபு--மேலென்ன, கீழென்ன இதற்காக நீர் ஏன் பொறாமைப்படுகிறீர். கடையில் 10-அணா போட்டால் ஒரு ஜர்மன் (க்ஷவரக்) கத்தி கிடைக்கும் வாங்கிக் கொண்டுபோய் வாய்க்கால் கரையில் உட்காரும்; எத்தனைபேர் தலைக்கு மேல் உம்மகை போகுது பாரும் உமக்கென்னத்துக்கு உம்ம கைக்கு மேல் நம்மகை போகிறதே என்கின்ற பொறாமை.

யாசகக்காரன்:— சரி நான் போய் வருகிறேன். பகவான் இப்படி தங்களைச் சொல்லவைத்தான், நம்மளைக் கேள்க்க வைத்தான் தங்களை நொந்து என்ன பயன்.

பிரபு:— அப்படியானால் அடியுமே அந்த பகவானை போம் போம் சோம்பேரியே.

வுள் ஒழிக்கப்பட்டாக வேண்டும் என்று சமதர்மவாதிகளும் சொல்லுகிறார்கள். இப்படிச் சொல்லுவதால் திருவள்ளுவர் நாஸ்திகராகும் போது சமதர்மவாதிகள் நாஸ்திகர்களாவதில் எந்த உலகமும் முழுகிப் போய்விடாது.

ஆதலால்தான், ஏழ்மையையே ஒழிக்கப் பாடுபடுகின்ற தேசமெல்லாம் முதலில் கடவுளை ஒழிக்கப் பாடுபடும் வேலையையே மேற்போட்டுக்கொண்டு வருகின்றன போலும்.

வைத்திய வளர்ச்சி.

வழுக்கைகளுக்கு யோகம்.

தலைமயிர் உதிர்ந்து போவதற்கு ஒருவகையான கிருமிகளே காரணம் என்று பல டாக்டர்கள் கூறுகிறார்கள். இத்தக்கிருமிகள் ஒரு அங்குலத்தில் ஆறாயிரத்தில் ஒருபங்கு நீளமே இருக்கின்றனவாம். நீளமே ஆயிரத்தில் ஒருபங்கு இருந்தால் அகலம் எத்தனை ஆராயிரத்தில் ஒருபங்கு இருக்குமோ? இந்தக்கிருமிகளைக் கொல்லுவதற்கு ஒருவிதமான இன்செக்ஷனைக் கண்டுபிடித்து வருகிறார்கள். இனி வழுக்கைத் தலையுடைவர்களுக்கு நல்ல யோகந்தான்.

வியாதி நீக்கம்.

அனேகமாய் எல்லா வியாதிகளுக்கும் இருப்பிடமாயிருப்பது ஜீரணக்கால்வாயின் ஒருபகுதியாகிய மலக்குடல் தான் என்ற தீர்மானத்திற்கு டாக்டர்கள் வந்திருக்கிறார்கள். ஆகவே மலக்குடலை அலசிக்கழுவுதல் என்னும் முறையால் நோயைத்தடுக்கலாம் என்றும், நோயாளிகளுக்கு அவர்கள் இழந்த சுகத்தைத் திருப்பிக் கொடுக்காலம் என்றும், இதனால் ஆயுளை வளர்த்து இன்பத்தைப் பெருக்கலாமென்றும் அறிஞர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்தச் சுருக்கமான முறையினால், ரசாயன முறையினால் கண்டுபிடிக்க முடியாத நன்மையைக் காணலாம். எவ்வித நோய்களையும் நீக்க இவ்வழி ஒன்றே போதுமானதென்று சுகாதார சாஸ்திரிகள் புதிதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

இரத்தப் பரிசோதனை.

வைத்தியர், குற்றவாலிகளின் இரத்தத்தைப் பரிசோதிப்பதன் மூலம் அவர்களை மீண்டும் குற்றம்புரியாமல் தடுப்பதற்குரிய வழிகளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஒருவருடைய நடவடிக்கைகளில் ஏற்படும் குற்றங்குறைகளை வைத்தியர்கள் வைத்திய முறைப்படிப் பிழையின்றிக் கண்டுபிடிக்கிறார்கள்.

இதுவரையிலும் கொலைக்குற்றம் சுமத்தப்பட்டவர்களை, எக்ஸ்ரேயின் மூலம் பரிசோதனை செய்து பார்த்ததில் நரம்பு நாடி முதலியவற்றின் குணதோஷங்களினாலும், மூளை மயக்கத்தினாலும் அவர்கள் குற்றம் செய்திருப்பதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

அமெரிக்காவில் கோர்ட்டில் சாட்சி சொல்லுபவர்கள் உண்மை பேசுகிறார்களா? பொய் பேசுகிறார்களா என்பதைத் தனியான கருவிகளைக் கொண்டு கண்டறிகிறார்கள்.

மனப்பான்மை, ஸ்திரப்புத்தி, நரம்புத்தளர்ச்சி, மூளைக் கொதிப்பு முதலிய விஷயங்களைப் பரிசோதித்துப் பழகிய டாக்டர்கள் புதிய முறைப்படி நூதன சிகிச்சைகளைச் செய்து, குற்றவாளிகளையும், கெட்ட பழக்க வழக்கங்களையுடையவர்களையும், நல்ல நடத்தையுடையவர்களாக்கி ஜன சமூகத்தைச் சீர்திருத்துகிறார்கள்.

உடல் கனம் குறைவதற்கு

உடல் கனத்தைக் குறைத்துக்கொள்ளுவதற்குச் சுலபமான முறைகள் இருக்கின்றன. முதலில், தாம் வழக்கமாகச் சாப்பிட்டு வரும் ஆகாரத்தைக் குறைக்க வேண்டும். ஆகாரத்தின் அளவைத்தான் குறைக்க வேண்டுமேயல்லாமல் தேக பலத்தைத் தரக்கூடிய காய் கனிகளைத் தாராளமாகச் சாப்பிடலாம்.

ஆகாரத்தில் புலால் உணவு உட்கொள்ளுவதை விட காய் கறிகளே சிறந்தவையென்றும் நல்ல சக்தியைக் கொடுக்கக்கூடியவைகள் என்றும் வைத்திய நிபுணர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்,

நமது உடம்பின் கனத்தைக் குறைக்க வேண்டுமானால் தண்ணீரைக் கொஞ்சமாகவே அருந்த வேண்டும் அதிகமான தண்ணீரைக் குடிப்பதனால் முதலாவதாக அஜீரணம் உண்டாகின்றது. இரண்டாவதாக நமது உடம்பில் தண்ணீர் மிகுதியானால் சுவாசம் அடைக்கப்படுகின்றது; இதனால் பல விதமான கஷ்டம் உண்டாகும்

இவை போன்ற முறைகளைக் கைக்கொண்டால் பெரிய தொந்திகள் சிறிது சிறிதாகக் கரைந்து விடும். இதனுடன்

யார் குற்றவாளி?

[சாமி சிதம்பரனார்.]

"பூச்சாண்டி இருக்கான் பிடித்துக்கொள்வான்!. அங்கே போகாதே" என்று குழந்தைக்குப்பயங்காட்டுகிறாள் தாய்.

குழந்தை, கொஞ்சம் பெரிதான பிறகு, நடக்கத் தெரிந்த பிறகு அதைத் தந்தை வெளியில் அழைத்துக்கொண்டு செல்லுகிறான். கோயில்களைக் காட்டுகின்றான். "சாமி! கும்பிடு! கும்பிடாவிட்டால் கண்ணை அவித்துவிடும். சாமியில்லாவிட்டால் நாம் இருக்கமுடியாது. சாமிதான் நம்மை உண்டாக்கிக் காப்பாற்றி வருகிறார்" என்று உபதேசம் பண்ணுகிறான்.

பிறகு குழந்தை பள்ளிக்கூடம் செல்லுகிறான். அங்கே உபாத்தியாயர்கள், "உலகமெல்லாம் கடவுளால் படைக்கப்பட்

தேகப்பயிற்சியும் சிறிது செய்து வந்தால் நாம் நல்ல சுகவாசிகளாக வாழமுடியும்.

ரேடியத்தின் நன்மை தீமை.

ரேடியமானது மக்களுடைய நோய்களை நீக்குவதற்கு உதவியாக இருந்தாலும் அது மிகவும் பயங்கரமான சத்துருவேயாகும். இதனை டாக்டர்களும், நர்சுகளும் வெகு ஜாக்கிரதையாகவே கையாளுகிறார்கள்.

கண்ணால் பார்க்க முடியாத அணுவளவு ரேடியம் ஒருவன் உடம்பில் சேர்ந்து விட்டால் அவன் இறக்கும் வரையிலும், இறந்த பிறகுங்கூட 2500 ஆண்டுகள் வரையிலும் அது தன்னுடைய விஷ ஜுவாலையை வீசிக்கொண்டே இருக்கும்.

ஒரு அவுன்சில் 30 லட்சத்தில் ஒரு பங்கு ஒரு மனிதனை உடனே கொன்று விடுவதற்குப் போதுமானதாகும்.

மேடம்க்யூரி என்னும் பெண்மணியாகிய ரசாயன நிபுணர் இந்த ரேடியம் என்பதைக் கண்டுபிடித்தது முதல், "ராஜப்பிளவை" என்னும் கொடிய வியாதிக்கு ரேடியகதான் உபயோகப்பட்டு வருகிறது. இக்காலத்தில் "எக்ஸ்ரே" உபயோகம் மறக்க முடியாததாகும.

டது. அவரே உலகைக்காப்பாற்றுவார். கடவுள் நாம் நினைக்கின்றவைகளையெல்லாம் கொடுப்பார். எல்லாம் கடவுள் செயலால்தான் நடைபெறுகிறது. நம்மால் ஒரு துரும்பைக்கூட அசைக்கமுடியாது'' என்று உபதேசம் செய்கின்றார்கள்.

''இளங்கன்று பயமறியாது'' என்பது பழமொழி. இளங்குழந்தைகளும் அப்படிதான். அச்சமற்ற குழந்தையின் மனதில்—களங்கமற்ற குழந்தையின் மனதில்—வஞ்சனையறியாத குழந்தையின் மனதில், முதலில் தாய் பயத்தை விதைத்துவிடுகின்றாள். பூனையைக் காட்டிப் பயமுறுத்தி விடுகின்றாள்; எலியைக்காட்டி பயமுறுத்திவிடுகின்றாள்; எறும்பைக்காட்டி பயமுறுத்திவிடுகின்றாள்; மண்ணாங்கட்டியையும் கண்டுப்பயப்படும்படி செய்துவிடுகிறாள். இதனால் ஒன்றுமறியாத பருவத்திலேயே குழந்தை பயங்கொள்ளியாகிவிடுகிறான்.

அடுத்தபடியாக, தந்தை செய்யும் உபதேசத்தால் குழந்தையின் மனதில் மூட நம்பிக்கை குடியேற ஆரம்பிக்கிறது. தந்தை செய்வதுபோல தானும் செய்ய ஆரம்பிக்கின்றான். கல் விக்கிரகங்களைக் கண்டால் நெடுங்கிடையாக மண்ணில் விழுகின்றான், மரப்பதுவைகளையும், செம்புப் பித்தளைப் பதுமைகளையும் கண்டால் தலை வணங்கிக் கை குவித்துக் கும்பிட ஆரம்பிக்கிறான் படங்களைப் பார்தாலும் கும்பிடுகிறான். தாய் கூறிய உபதேசம் குழந்தையைப் பயங்கொள்ளியாக மாற்றியது. தந்தை செய்த உபதேசம் முன்மாதிரி அவனை மூடனாகச் செய்கின்றது.

அடுத்தபடி ஆசிரியர்கள் செய்யும் உபதேசங்கள், பையனுடைய அறிவு—உணர்ச்சி—ஊக்கம்—தன்னம்பிக்கை—எல்லாவற்றையும் ஒரேயடியாக ஒழித்துவிடுகிறது. ''அவனன்றி ஓரணுவுமசையாது'' என்ற சொல்லை உண்மையென்று உறுதியாக நம்பும்படி ஒருவரைச் செய்துவிட்டால் பின்பு அவரால் என்ன காரியம் செய்யமுடியும்?

இப்படிப்பட்ட உபதேசங்களால் வளர்ந்து வரும் மக்கள் எதற்குப் பயன்படுவார்கள்? முதலில் பயங்கொள்ளுகிறார்கள்; அதனால் உலக வாழ்க்கையை வெற்றியுற நடத்துவதற்கு உயிராக இருக்கின்ற தைரியத்தை இழந்து விடுகின்றார்கள். இரண்டாவது மூடநம்பிக்கையுடையவாகின்றார்கள்; அதனால் எதையும் ஆராய்ந்து பார்த்து உண்மையறியும் அறிவு குன்றி மூடர்கள் ஆகின்றார்கள்.

மூன்றாவதாக மனித சக்தி தம்மிடம் இருப்பதாகவே எண்ண முடியாதவர்களாகிப் பெரும் சோம்பேறிகளாகி விடு

கிறார்கள்; இதனால் எந்தக் காரியமும், நம்மால் செய்ய முடியாது; எல்லாம் தெய்வச் செயல்; என்று நினைத்துக் காரியங்களை நிர்வகிக்குஞ் சக்தியின்றுத் திண்டாடுகின்றார்கள்.

நாம் குழந்தைகளை இம்மாதிரி விளையாட்டாக நடத்தி வருவது கடைசியில் அவர்கள் வாழ்நாளையே வீண் நாளாக்கி விடுகிறது. இப்படிப்பட்ட பயத்திலும், மூடத்தனத்திலும், தன்னம்பிக்கையற்ற தனத்திலும் வாழும் பிள்ளைகள் எப்படி, ஆண்மையுள்ளவர்களாக விளங்க முடியும்? அறிவுள்ளவர்களாக வாழமுடியும்? பெருங் காரியங்களைச் செய்து முடிக்கும் திறமுடையவர்களாகத் திகழ முடியும்?

"நமது நாட்டு மக்கள் பெரும்பாலும் பயங்கொள்ளிகளாக இருக்கிறார்கள்; அறிவு குறைந்தவர்களாக இருக்கிறார்கள்; பெருஞ் செயல்களை முடிக்க முன் வராதவர்களாக இருக்கிறார்கள்; இவையெல்லாம் மாறவேண்டும். மக்கள் தைரியசாலிகளாக விளங்க வேண்டும்; அறிவுடையவர்களாக ஆகவேண்டும்; காரியஞ் சாதிக்கும் திறமையுடையவர்களாக மாறவேண்டும்" என்று தேசமெங்கும் உள்ள அறிஞர்கள் கூறுகின்றார்கள்; பத்திரிகைகளில் எழுதுகின்றார்கள். இவை பேச்சிலும் எழுத்திலும் நிற்கின்றனவேயன்றிக் காரியத்தில் பயன்பட்டதாகக் காணோம். காரணம் இவற்றுக்கெல்லாம் அடிப்படியான பழக்க வழக்கங்களையும், பழக்க வழக்கங்களுக்குக் காரணமாகவுள்ள மதங்களையும் சீர்திருத்த முயற்சிக்காததேயாகும் என்பதில் ஐயமில்லை.

இன்று மதம் பெயருக்காக இருக்கும் நாடுகளைப் பாருங்கள்! இங்கிலாந்து, இட்டாலி, அமெரிக்கா, டர்க்கி, ஜெர்மனி, பிரான்சு, ஜப்பான் முதலிய தேசங்களின் மக்கள் எவ்வளவு மனோதைர்யம் வாய்ந்தவர்களாக இருக்கின்றார்கள். அங்குள்ள மக்களுக்கு உண்மையில் மதங்களில் நம்பிக்கையே இல்லை என்பது எல்லோரும் கூறும் விஷயம். மத நம்பிக்கை—கட்டுப்பாடு—கொடுமை—குறைந்து மறைந்த காரணத்தினாலேயே இன்று அவர்கள் பல வகையில் முன்னேற்றமடைய முடிந்திருக்கின்றது.

மதநம்பிக்கை குறைந்த காரணத்தினாலேயே—மதக்கட்டுப்பாடுகளை மீறிய காரணத்தினாலேயே—அவர்களுடைய பழய பழக்க வழக்கங்களும் பெரும்பாலும் மாறிவிட்டன; பெரும்பாலும் மக்கள் ஒரு மாதிரியான சமுதாய வாழ்க்கையுடையவர்களாகி வருகின்றார்கள்.

நாமோ இன்னும் வெறும் பழக்க வழக்கங்களையே மாற்றிக்கொள்ளப் பயப்படுகின்றோம்; மாற்றிக்கொள்ளாமல் அப்படியே நிலைபெற்றிருக்க வேண்டும் என்பதற்கும் ஒரு பக்கத்தில் மதாச்சரியார்கள் பலமாக வேலைசெய்து வருகின்றார்கள். மதத்தையும் நிலைநிறுத்த ஒரு பக்கம் பெருமுயற்சி நடந்து வருகின்றது. இதற்கு இடையில் பகுத்தறிவும் இளைஞர்கள் மத்தியில் "முரண்டி"க்கொண்டு எழுந்து பரவி வருகின்றது.

இப்படியே போய்க்கொண்டிருந்தால் இதன் முடிவுதான் எப்படியாகும்? என்று யோசிப்பார் சிலருண்டு. முடிவைப் பற்றி நாம் சிறிதும் சந்தேகப்பட வேண்டியதில்லை மக்களுடைய மனோபாவம் எப்பொழுதும் ஒன்றைவிட்டு ஒன்றைத் தாவிச்சென்று கொண்டிருப்பதே இயல்பு. அப்படித் தாவும்போது முன்னோக்கிப் புதியதன் மேல தாவுமேயன்றிப் பின்னோக்கிப் பழயதன் மேல் தாவுதல் இயற்கையல்ல. ஆதலால் முற்போக்கில் செல்லுவதே முடிவு என்று நிச்சயமாக நம்பலாம்.

எத்தனை நாளைக்குப்பயந்து கொண்டு கிடக்க முடியும்? எத்தனை நாளைக்கு அறியாமையில மூழ்கித் தூங்கிக் கொண்டிருக்க முடியும்? எப்பொழுதாவது துணிவு ஏற்பட்டுத்தான் தீரவேண்டும். எப்பொழுதாவது அறியாமையிலிருந்து விழித்து எழுந்துதான் தீரவேண்டும்.

பயம் தெளிந்து துணிவு ஏற்பட்ட காலத்திலும், அறியாமையிலிருந்து விழித்துப் பகுத்தறிந்து பார்க்கும் திறம் ஏற்பட்ட காலத்திலும், அதற்குமுன் தம்மைச் சூழ்ந்திருந்து துன்புறுத்தி வந்த எல்லாம்—அவை எவையாயினும் சரி தவிடுபொடியாகி அடியோடு ஒழியவேண்டுமேயன்றி நிலைத்து நிற்பதற்குச் சிறிதும் இடமே இல்லை. இது அறிவுக்கும் அனுபவத்துக்கும் ஒத்த செய்தியாகும்.

குழந்தைப்பருவத்திலேயே நமது மக்களுக்குப்பயம், மூடநம்பிக்கை, அறியாமை இவ்வற்றை ஊட்டிவரும் மூவரில் இருவரைப்பற்றி நாம் அதிகம குற்றம் சொல்வதற்கில்லை. ஏனென்றால், தாய் என்பவளின் நிலைமை மிகவும் பரிதபிக்கத்தக்கது. அவளுக்கு உலகமே தெரியாது; வீட்டிலுள்ள அடுக்குப்பானைகள் தெரியும்; உப்பு, மிளகாய், புளி வகையராக்களைப் பற்றித் தெரியும்; சமையல்—அதுவும் சுகாதாரமற்ற முறையில—செய்யத்தெரியும்; வீட்டிலுள்ளவர்களுக்குச் சாதம்

போடத்தெரியும்; தானும் சாப்பிடத்தெரியும்; குந்தையைப் பெறத்தெரியுமேயன்றி, வளர்க்கத்தெரியாது; அவளே பயத்திலும், மூட நம்பிக்கையிலும் அறியாமையிலும் ஊறி உருவெடுத்தவளாவிருக்கின்றான்; அவளுக்குப் "பூச்சி, பூச்சாண்டி, பேய், பூதம், பிசாசு, சாமி" என்ற வார்த்தைகளைச் சொல்லிப் பயங்காட்டுவதைத் தவிர—குழந்தைகளுக்கு வேசறொன்றையும் கற்பிக்கத் தெரியாது.

அடுத்தபடி தந்தையும் அப்படியே. அவன் பழையகாலத்தைக் காப்பாற்றுவதாக நடிப்பதில் கைதேர்ந்தவன்; அவன் விஞ்ஞான சாஸ்திரியாக இருந்தாலுங்கூட, பணம் சம்பாதிப்பதற்காக— பிறரை ஏமாற்றுவதற்காக மத பக்தன்போல் நடிக்கவேண்டிய நிலையிலிருக்கின்றான். ஆதலரால் அவன் தன் பிள்ளைக்கும், சாமிகளைக் காட்டுவதும், கும்பிடச் செய்வதும் ஆகிய காரியங்களின் மூலம் உண்மையாகவே மூட நம்பிக்கையை ஏற்றிவிடுகின்றான். எண்ணற்றத் தந்தைமார்கள் உண்மையில் மௌடீகர்களாகவே இருப்பதனால் பிள்ளைகளுக்கும் மௌடீகத்தைக் கற்பித்துவிடுகிறார்கள்.

கடைசியாக ஆசிரிசர்கள் விஷயமாய் மிக மோசம்! பாவம்! அவர்கள் புத்தகப் பூச்சிகள்! தங்கள் சொந்த அறிவைச் சிறிதும் மதிக்காதவர்கள்; தாங்கள் படித்த புத்தகங்களில் உள்ளவற்றையே திருப்பி வாந்தியெடுப்பவர்கள்; ஆதலால் அவர்கள் மேலும் அதிக குற்றத்தைச் சுமத்த வழியில்லை,

சரி! அப்படியானால்—அதாவது குழந்தைகளைக் கெடுப்பதற்குக் காரணமாக இருக்கின்ற தாய் தந்தை ஆசிரியர் மூவரும் குற்றமல்லாதவர்களானால் பின்னை யார்தான் குற்றவாளி? என்று தெரிந்துகொள்ளவேண்டுமல்லவா? ஆம் தெரிந்துகொள்ளத்தான்வேண்டும்? அதையும் சொல்லிவிடுகிறேன்.

குற்றமெல்லாப் படிப்பின்மேல்; படிப்பதற்காக அமைக்கப்பட்டிருக்கும் புத்தகங்களின்மேல்; புத்தகங்களை எழுதும் அறிவாளிகள் என்று சொல்லப்படுபவர்களின்மேல்; மக்களுக்கு அறிவூட்டுவதாகக் கூறிக்கொண்டு திரிகின்ற பத்திரிகைகளின்மேல்; என்றுதான் நான் கூறுவேன். ஆதலால் இவைகளின் நிலைமை மாறாதவரையில் ஒன்றும் மாறாது; எல்லாம் இருந்தபடியேதான் இருக்கும்; இது உண்மை! சந்தேகமில்லை.

புரோகிதம் ஒழிக!

[புதுவை, R. V. பொன்னம்பலம்.]

கோச்சிமலை குடகுமலை என்ற மெட்டு.

1. போதும் போதும் புரோகிதருக்குப் பொருள்கொடுத்து
[வீணே—நாம்
பொருள் கொடுத்து வீணே—இப்
புவிதனிலே கண்டசுகம் போதும் மடமானே!

2. சாதியென்றும் சமயமென்றும் சாற்றிமக்கள்
[தம்மை—அவர்
சாற்றி மக்கள் தம்மை—மிகச்
சஞ்சலத்தி லாழ்த்திவைத்தார் ஆரியர்கள் நம்மை.

3. கோயிலென்றுங் குளங்களென்றும் கோடி பணம்
[சேர்த்தார்!—பல
கோடிப்பணம் சேர்த்தார்!— இக்
குவலயத்தின் வறுமைதனைக் கண்டும்மனம் பூத்தார்!

4. நீதியின்றி மக்களிடம் நீண்டகாலமாக—அவர்
நீண்டகாலமாக—மிக
நிர்ப்பந்தமாய்ப் பொருள் பறித்தே வாழ்ந்தனர்நன்றாக!

5. எத்தனைநாள் உத்தமர்கள் இவர் செயலைப்
[பொறுப்பார்?—நாட்டில்
இவர் செயலைப் பொறுப்பார்?—இனி
ஏந்திழையே கண்டுகொண்டார் இதனைமிக வெறுப்பார்!

6. பூதலத்தில் நாமொருதாய்புத்ரரெனக்
[கண்டோம்! — இன்று
புத்ரரெனக் கண்டோம்!—இனிப்
புல்லறிவோர் கொள்கையினைக்கண்டிக்கமுன் நின்றோம்

7. காலமெல்லாம் கடுமுழைப்பால் கானலில்
[மெய்வாட—மக்கள்
கானலில் மெய்வாட—மிகக்
கஷ்டமுற்றுச்சேர்க்கும்பொருள் களைகுவர் ஆடியோடே!

8. ஞாலமதிலிதை நினைத்தால் நம்மனதும் வருந்தும்!—மிக
நம்மனதும் வருந்தும்!—இதை
நாட்டினிலே ஓட்டுதற்கே தேடுவோம் ஓர் மருந்தும்!

கிருஷ்ணன்—அர்ஜுனன் சம்வாதம்.

[சித்திரபுத்திரன்.]

அர்ஜுனன்: சகேசீனாம் விகேசீனாம் கா கதிபுருஷோத்தமா?

கிருஷ்ணன்: — அஹம் சந்யாசி ரூபேணாம் புரோஷ்டிதாம் தனஞ்செயா! இதன் பொருள்.

அர்ஜுனன்:— ஹே புருஷோத்மா! தலையில் மயிருடனும், மயிரில்லாமல் மொட்டைத் தலையுடனும் இருக்கும் (படியாய் நீ செய்திருக்கின்ற) விதவைகளுக்கு என்ன கதி?

கிருஷ்ணன்:-ஹே அர்ஜுனா! நானே சந்நியாசியாக பூமியில் அவதரித்து அவர்களின் ஆசையைப்பூர்த்தி செய்வேன்.

அர்ஜுனன்:— ஹே கிருஷ்ணா! உன்னை ஒரு பெரிய கடவுளென்று சொல்லிவிட்டு பிறகு நீ இப்படிச் செய்தாய், அப்படிச் செய்தாய், கண்ட ஸ்திரீகளுடன் கலந்தாய், உதை பட்டாய், அடி பட்டாய், அழுவாரற்ற பிணமாய் செத்தாய் என்றெல்லாம் எழுதி வைத்திருக்கின்றார்களே இதைப்பற்றி உனக்கு சிறிதும் அவமானமில்லையா?

கிருஷ்ணன்:— ஹே அர்ஜுனா! அதைப்பற்றி நீ சிறிதும் கவலைப்பட வேண்டாம். இதெல்லாம் எனது திருவிளையாடலென்றும் இவற்றைப் படித்த கேட்ட ஒவ்வொருவரும் இதனைக் கொண்டாட வேண்டுமே ஒழிய குற்றம் சொல்லக்கூடாதென்றும், குற்றம் சொன்னால் பாவமென்றும், நரகமென்றும் அவற்றை எழுதின அவர்களே எழுதி இழிவை அடக்கி விட்டார்கள். ஆதலால்நமக்கு ஏன்கவலை?

அர்ஜுனன்:— கிருஷ்ணா அதுதான் போகட்டும் நம்ப முடியாத அநேக பொய்யையும், புழுகையும் சொல்லி நீ சின்னக் குழந்தையாயிருக்கும்போது பெரிய முலையை உருஞ்சி சூப்பையாக்கி விட்டாயென்றும், மலையை சுண்டு விரலால் குடையாய்ப் பிடித்தாய் என்றும் 10 ஆயிரம் பெண்களை ஏககாலத்தில் கலந்தாய் என்றும் இப்படியெல்லாம் எழுதி இருக்கின்றார்களே இந்தப் புளுகுகளை எவன் நம்புவான்?

கிருஷ்ணன்:— ஓ! அர்ஜுனா அதைப்பற்றியும் நீ கவலைப்படாதே ஏனென்றால் அந்தப்படியெல்லாம எழுதினவர்கள் இவற்றையெல்லாம் எவன் நம்பவில்லையோ அவன் நாஸ்திகன் என்றும் அவனை அரசன் தண்டிக்க வேண்டுமென்றும் அரசன் தண்டிக்காவிட்டாலும் அவன் நரகத்துக்குப் போகவேண்டும் என்றும் எழுதி மக்களை மிரட்டிப் பயப்படுத்தி வைத்திருக்கின்றார்கள். ஆதலால் எவனும் தைரியமாய் தான் இவற்றை நம்புவதில்லை என்று வெளியில் சொல்ல வரமாட்டான்?

அர்ஜுனன்: அதென்ன கிருஷ்ணாபரவம் என்றாலென்ன? நரகம் என்றால் என்ன? எனக்கு ஒன்றும் புரியவில்லையே,

கிருஷ்ணன்:— அந்தப்படி புரியாமலிருக்கின்றதாகவே பார்த்துதான் சொல்லி இருக்கின்றார்கள்.

அர்ஜுனன்:- அதென்ன புரியாததைச் சொன்னால் என்ன பயன்.

கிருஷ்ணன்:— ஒருவனுக்குத் தெரியாததையும், புரியாத தையும் சொன்னால்தான் மனிதர்கள் பயப்படுவார்கள். புரியும்படியானதாக எதைச் சொன்னாலும் திருப்பிக் கேழ்க்க ஆரம்பித்து விடுவார்கள். ஆதலால்தான் அது செய்தால் பாபம், இது செய்தால் பாவம், நினைத்தால் பாவம் என்றெல்லாம் மிரட்டி வைத்திருக்கின்றார்கள்.

அர்ஜுனன்.— இந்த மாதிரி எத்தனை நாளைக்கு ஏமாற்ற முடியும்?

கிருஷ்ணன்:— முடிந்த வரையில் முடியட்டும்.

அர்ஜுனன்— இந்தப் புரட்டு வெளியாய் விட்டால் அப்புரம் என்ன செய்வது?

கிருஷ்ணன்:— அப்புரம் வேறு புறட்டையுண்டாக்கிக் கொள்ள அவர்களுக்குத் தெரியும்.

அர்ஜுனன்:—அதென்ன புரட்டு?

கிருஷ்ணன்:—அரசியல் புரட்டு.

அர்ஜுனன்:—அதுவும் வெளியாகி விட்டால்.

கிருஷ்ணன்:— அதற்குள் பார்த்துக் கொள்ளுவோம். இந்த இரண்டு புரட்டும் மண்டுகள் நிறைந்த இந்தியாவுக்கு சுலபத்தில் வெளியாய் விடவா போகின்றது?

அர்ஜுனன்:—சுயமரியாதைக்காரர்கள் இந்த இரண்டையுமே சேர்த்து வெட்ட வெளியாக்கிக் கொண்டு வருகின்றார்களே சீக்கிரத்தில் வெளியாய் விடாதா?

கிருஷ்ணன்:—அவர்களால் சுலபத்தில் முடியாது. ஏனென்றால் அந்த இரண்டு புரட்டின் மேல் தாங்கள் வாழ்வையே ஏற்பாடு செய்து கொண்ட அநேகர் சுயமரியாதைக்காரர்களுக்குள்ளாகவே இருக்கிறார்கள். அந்தப்படி மீறி அவர்கள் எல்லாம் தங்கள் வாழ்க்கைக்குக் கேடுவந்தாலும் வரட்டுமென்று துணிந்துக் கட்டுப்பாடாய் வேலை செய்தாலும் கூட அது தமிழ்நாட்டிலும் மலையாளத்திலும் தான் செல்லும் இந்தியாவில் மற்ற பாகங்கள் எவ்வளவோ இருக்கின்றன.

அர்ஜுனன்:— எப்படியானாலும் என்றைக்கிருந்தாலும் இந்த இரண்டு புரட்டுக்கும் ஆபத்து ஆபத்துதான்.

கிருஷ்ணன்:— அந்தக்காலத்தில் பார்த்துக்கொள்ளலாம். நடந்தவரை நடக்கட்டும்.

குடி அரசு வெளியீடுகள்.

8-அணா வெளியீடுகள்.

இந்தியாவின் குறைபாடுகள் (Dr. R. P. பாஞ்சிபை.)
இராமாயண ஆராய்ச்சி 2-ம் பாகம் (சந்திரசேகரப் பாவலர்)
கைவல்ய சாமியாரின் கட்டுரைகள், (கைவல்யம்)

4-அணா வெளியீடுகள்

இராமாயண ஆராய்ச்சி 1-ம் பாகம் (சந்திரசேகரப் பாவலர்)
லெனினும் மதமும்.
விவாஹ விடுதலை (K. M. பாலசுப்ரமண்யம்)
கடவுளும் பிரபஞ்சமும் (M. சிங்காரவேலு)
பங்கஜம் or பார்ப்பனக்கொடுமை
சுதந்தரப் போர்

3-அணா வெளியீடுகள்.

பொது உடமைத் தத்துவங்கள்
தர்ம பரீக்ஷை
மேயோ கூற்று மெய்யா பொய்யா (C. A. அய்யாமுத்து)

2-அணா வெளியீடுகள்.

சீர்திருத்தம் (ஈ. வெ. ராவின் சொற்பொழிவு)
மனுநீதி விளக்கம் (சிவானந்த சரஸ்வதி)
அகத்தியர் ஆராய்ச்சி (வித்வான் நமச்சிவாய முதலியார்)
இராமலிங்க சுவாமிகள் பாடல்கள்

1-அணா வெளியீடுகள்

போல்ஷ்விக் முறை
பர்னாட்ஷா உபந்யாசம்

½-அணா வெளியீடுகள்

சமதர்ம உபந்யாசம் (M. சிங்காரவேலு)
இலங்கைச் சொற்பொழிவு (ஈ. வெ. ரா.)

இதர பதிப்பக வெளியீடுகள்

1-ரூபாய் வெளியீடுகள்.

The Crux of the Indian Problem. (Dr. R. P. Pranjibi)
The Right of the temple entry (P. Chidambaram)

8-அணா வெளியீடுகள்.

சிதம்பர ரகசியம் (தென்பாண்டி கனகசபை)
மாதர் சுதந்தரம் (சாமி சிதம்பரனார்)
கச்சுப்பொய்கை (C. A. அய்யாமுத்து)

6-அணா வெளியீடு.

ஆஸ்திக நாஸ்திக சம்வாதம்

இன்னும் பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகப் புஸ்தகங்களும் கிடைக்கும்,

"மேனகா"

"மேனகா" "மேனகா"

By Sriman

Vaduvur K. Doraiswamy Iyengar, B. A.,

பம்பாய்

ஸ்ரீ

ரஞ்சித் மூவிடோனில்.

நாவலை நாடகமாக நடிப்பதில்
கீர்த்திபெற்ற சிறந்த நடிகர்களைக்
கொண்டு உயர்ந்த முறையில்
பேசும் படமாக தயாரிக்கப்படுகிறது
கூடிய சீக்கிரம் வெளிவருகிறது
எதிர்பாருங்கள்.

"மேனகா" தயாரிப்பவர்கள்:— "மேனகா"

ஸ்ரீ ஷண்முகானந்தா டாக்கீஸ் Co.,

— திருப்பூர். —

Edited Printed and Published by E. V. Krishnasamy at the Unmaivilakam Press, Erode.